

வாழவிடுங்கள்
நாவல்
கே.விஜயசேகரம்

# என்னுரை

இது யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களது கதை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் குடாநாடு இருந்த போது, விடுதலைப் புலிகளை மக்கள் கடவுள்களாகப் போற்றினர். மகாவிஸ்ணு அக்கிரமங்களை அழிக்கப் பிறந்து விட்டாரென்று கவிஞர்களும் சோதிடர்களும் கூறினர். அதை மெய்யென்று நம்பி மக்கள் கடவுளாகத் தொழுதனர். ஒரு பிரதேசத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர்களைக் காணுதல், அவருடன் பேசுதல் என்பன பிரமிக்கத்தக்க ஒரு நிகழ்வாக இருந்தது. போராளிகளுக்கு மக்கள் விதம் விதமான பலகாரவகைகளைச் செய்து கொடுத்தனர். விசேட உணவுகளைச் சமைத்துக் கொடுத்தனர். ஊர்ப்பிரமுகர்கள், அரச அதிகாரிகள் எல்லோரும் அவர்களைத் தேவராக நினைத்தனர். அவர்கள் ஏவும் செயல்களைச் விருப்புடன் செய்தனர். அவர்களைக் கண்டால் கடவுளைக் கண்டவர் போல மகிழ்ந்தனர்.

காலம் மாறியது. புலிகள் சிறைப்பட்டனர்.புனர்வாழ்வு பெற்று வீட்டுக்குத் திரும்பினர். தம்மை மக்கள் முன்போல மதிப்பார்கள் என்றெண்ணினர். சுயநலம் மிக்க யாழ்ப்பாணத்தவர் அவர்களைக் கண்டுகொள்ளவே இல்லை. அவர்களைக் காணுதல், பேசுதல் என்பன அவர்களுக்குத் தேவையில்லாத செயலானது. படிப்பை விட்டு விட்டுச் சென்ற அவர்களால் வேலை தேட முடியவில்லை.பசியும், பட்டினியும் அவர்களை

வாட்டியது.சொல்லெணாத் துன்பங்களை அவர்கள் அனுபவிப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. அதைத் தான் நான் கதைகளாக்கியுள்ளேன்.

இதைவிடப் படித்தால் நல்ல நிலையை அடையலாமென்று படித்த பெண்கள் சீதனக் கொடுமையால் துன்பப்படுகின்றனர். இவைகளை பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் இக்கதைகளை எழுதினேன். மற்றும்படி எந்தவிதமான குற்றமோ, குறைகளோ காண்பதற்கல்ல. எம்மவர் இனியாவது உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதே எனது விருப்பம்.

போராளிகள், ஊடகங்களில் வெளியிடும் கருத்துக்கள் மனதைக் குடைகின்றன. அன்றும் இன்றும் விடுதலையை வலியுறுத்தி மக்களை ஊக்கப்படுத்தியவர்கள் பின் நடந்து கொண்டவிதம் வெறுப்பையும் வேதனையையும் தருகிறது.அவர்கள் வாழ வேண்டும். அவர்களுக்கும் உணர்ச்சிகள் உண்டென்பதை நம்மவர் புரிந்து கொள்ளல் வேண்டும். போராளிகளின் பணக்கார உறவினர்கள், வெளிநாடுகளில் சகல வசதிகளோடும் வாழும் நம்மவராவது அன்று தாம் வாழ்ந்த நிலையை எண்ணிப் பார்த்து அவர்களுக்கு உதவுதல் வேண்டும். மீண்டும் சந்திப்போம்.

கே.வி.குணசேகரம்

# வாழ விடுங்கள்

## 1

தூரத்தே நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. பொழுது விடிவதாக இல்லை. நிசப்தமான அந்த இரவின் அமைதியை நாய்களின் ஓசை குலைத்துக் கொண்டிருந்தது. மல்லிகாவின் மனம் அமைதியின்றித் தவித்தது. இன்று நேற்றல்ல ஆயிரத்துத் தொள்ளாயிரத்தித் தொண்ணூற்றைந்தாம் ஆண்டிலிருந்தே மனம் அப்படித் தான் தவிக்கிறது.

விடிந்தால் மகளின் திருமணக் கலப்பு. அதை நினைக்க மல்லிகாவுக்குக் கவலையாக இருந்தது. நேரத்தைப் பார்த்தாள். இன்னும் பன்னிரண்டு கூட ஆகவில்லை. திரும்பி மகள் சௌமியாவைப் பார்த்தாள். அவள் பார்க்கும் வேளைகளில் அவளும் நித்திரையில்லாது தவிப்பது தெரிந்தது.

காலத்திற்குக் காத்திருக்கும் தேவையில்லை. அது பைத்தியக்காரனைப் போலத் தன் போக்கில் சென்று கொண்டிருக்கிறது. மாதவன் காணாமல் போய் இருபது வருடங்கள் கழிந்து விட்டன. அந்த இருபது வருடங்களும் இருநூறு யுகங்களாகத் தான் அவளுக்குக் கழிந்தன.

மாதவனைச் சந்தித்த தினத்தை எண்ணிப் பார்த்தாள். கார்த்திகை மாதம் கந்தசட்டி விரத காலம். அவள் கந்தசட்டி விரதத்தை முறைப்படி அனுட்டிப்பவள். மாதவனும் பெரும் முருக பக்தன். வேலை நேரம் போக மிகுதியான நேரத்தை அவன் கோவிலில் தான் கழிப்பான். அவனுக்கு மூத்த இரு சகோதரிகளும் திருமணமாகிக் குடும்பத்துடன் இருந்தனர். ஆதனால் அவன் தான் வீட்டுக்குச் செல்லப் பிள்ளை. ஊரில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் படித்தவன். ஏ.எல் பரீட்சை இரு முறையெடுத்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிவில்லை. பெற்றோரும் உறவினர்களும் மூன்றாம் முறையும் பரீட்சை எழுதும்படி வற்புறுத்திக் கூறியும் அவன் பரீட்சை எழுதவில்லை. தகப்பனுடன் கமம் செய்து கொண்டிருந்தான். வேலைக்குச் செல்வதை விடக் கமம் செய்வது அவனுக்குப் பிடித்திருந்தது.

மல்லிகா ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக் கிழமையும் தவறாது கோயிலுக்கு வருவாள். அவள் வரும் போதெல்லாம் மாதவன் சட்டை அணியாது திருத்தொண்டுகள் செய்து கொண்டிருப்பான். அடியவர்கள் கொண்டு வரும் விதம் விதமான பூக்களை எடுத்து மாலைகள் கட்டுவான். அவன் கட்டும் மாலை மிகவும் அழகானதாக இருக்கும். மல்லிகா விதம் விதமான பூக்களைப் பறித்து வந்து மாதவனிடம் கொடுப்பாள்.

அவன் அதில் அழகான மாலை கட்டி முருகனுக்குப் போடுவதற்காகக் கொடுப்பான். பின்பு மல்லிகா வந்ததும். "உங்கள் அழகான பூக்களால் கட்டிய மாலையைத் தான் குருக்கள் முருகனுக்குப் போட்டுள்ளார். எப்படி அழகாக இருக்கா?" என்று கேட்பான்.

ஆரம்பத்தில் அவனது கேள்விகளுக்குப் பதிலளிக்காது சிரித்த மல்லிகா காலப்போக்கில் அவன் கதைக்கமாட்டானா என ஏங்கினாள். இப்போது அவன் கட்டிய மாலையைக் குருக்கள் முருகனுக்குப் போட்டாலும் அதைப் பற்றி எதுவும் பேசமாட்டான். அது அவளுக்குக் கவலையைக் கொடுத்தது. இருந்த போதும் அவனோடு பேசத் தயக்கமாக இருந்தது.

அன்று கந்தசட்டி விரதநாள். முருகனுக்கு மாலை கட்டுவதற்கென்று அவள் விதம் விதமான பூங்கன்றுகளை நட்டு நல்ல முறையில் பராமரித்து வந்தாள். அவற்றில் இருந்து ஏராளமான பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து மாதவனிடம் கொடுத்து விட்டுச் சொன்னாள்; "மிகவும் அழகாக மாலை கட்டுகிறீர்கள். இதை எங்கே கற்றீர்கள்? ஏனக்கும் காட்டித் தந்தால் நானும் கட்டுவேன்." பெரும் சிரமப்பட்டுப் பல நாட்களாகத் திட்டமிட்டு வீட்டில் பேசிய வார்த்தைகளைக் கூறினாள். எனினும் அவளது நா தழுதழுத்தது. உடல் வியர்த்தது.

“இதென்ன பெரும் வேலையா? நான் படிக்கும் போது எனது வகுப்பாசிரியராக இருந்த பத்மா ரீச்சர் காட்டித் தந்தவா. அவா சைவம். முருகனில் மிகுந்த பக்தியுள்ளவா. விதம் விதமாக மாலைகள் கட்டுவா. அத்துடன் தான் கற்பிக்கும் பிள்ளைகளெல்லாம் சைவப் பண்புடன் வளர வேண்டும் என்ற இலட்சியம் உடையவர். அவாவால் தான் நான் இவ்வாறு வாழ்கிறேன். அவாவைப் போல ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.” என்று கதைத்தவாறு மாலை கட்டினான் மாதவன்.

அவன் மாலை கட்டும் அழகை ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்தாள் மல்லிகா. அவன் வாழைநாரைக் கிழித்து அதன் மேல் பூக்களை வைத்து கட்டும் முறையை அவளுக்குச் சொல்லிக் கொடுத்தான். அதன் பின் அவள் பூக்கள் கொண்டு வரும் வேளைகளிலெல்லாம் அவனுக்கருகில் இருந்து மாலையைக் கட்டுவாள். அவனுடன் சேர்ந்து திருத்தொண்டுகள் பலவும் செய்வாள்.

காலப்போக்கில் அவனைப் பாராது அவளால் இருக்க முடியவில்லை. அதனால் அவள் அவன் கமம் செய்யும் காணிக்கு எதிராக உள்ள வீதியால் தோழிகளுடன் நடந்து செல்வாள். அவனது தோட்டத்திற்குச் சிறிது தூரத்தில் சிறியதொரு குளம் இருந்தது. அக் குளக் கரையில் மாதவனின் தகப்பனாார்

ஒரு வைரவ சூலத்தை வைத்து அதன் அருகில் ஓர் ஆலமரத்தையும் நட்டிருந்தார். பத்து வருடங்களுக்கு முன் வைத்த அந்த ஆலமரம் தற்பொழுது விருட்சமாக வளர்ந்திருந்தது. அத்துடன் அவர் தென்னை, பலா, கமுகு போன்ற மரங்களையும் நட்டிருந்தார். குளத்தைச் சூழவுள்ள நிலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் விவசாயம் செய்தனர். காலப்போக்கில் அவர்கள் வைரவருக்குப் பொங்கிப் படைக்கத் தொடங்கினர். இப்போது தினமும் பலர் வந்து வணங்கிச் செல்கின்றனர்.

இதைத் தெரிந்து கொண்ட மல்லிகா மாதவனைப் பார்ப்பதற்காக வைரவர் கோயிலுக்கு வரத் தொடங்கினாள். வரும்போது வைரவருக்கு மாலையும் கொண்டு வந்தாள். அவள் வரும் எல்லா நாட்களிலும் மாதவன் நிற்கமாட்டான். அவள் அவனது வரவுக்காகக் காத்திருந்து ஏமாறுவது தான் அதிகமான நாட்களில் இடம்பெறும்.

மாதவனை நினைத்தால் அவளது உடல் புல்லரிக்கும். காற்றில் மிதப்பதைப் போன்ற தன்மை உண்டாகும். கண்கள் பொங்கிப் பூரிக்கும். முகம் சிவக்க ஆவலோடும் கற்பனைகளோடும் அவன் கதைக்கமாட்டானா என்ற ஏக்கத்தோடும் பார்ப்பாள்.

அவன் அவளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. சிரிப்பான்; “உங்களுடன் வரும் தோழிகளைக்

காணவில்லை. எங்கே சென்று விட்டார்கள்?'' என்று கேட்பான்.

மல்லிகாவுக்கு ஆத்திரம் தான் வரும்; ''ஒரு பெண்ணின் நடத்தையை, அவளின் அங்க அசைவுகளைப் புரிந்து கொள்ள முடியாத பேதையாக இருக்கிறானே. உன்னைத் தனியே சந்திப்பதற்காகத் தான் அவர்களுக்குத் தெரியாமல் வந்திருக்கிறேன். அது உனக்குப் புரியவில்லையா?'' என்று ஆத்திரத்தோடு கத்த வேண்டும் போலிருந்தது. ''கத்து கத்து'' என்று மனம் உற்சாகப்படுத்தியது.

''ஒவ்வொருவருக்கும் பல தொழில்கள் இருக்கும் எனக்குத் தான்.....'' நிறுத்தினாள்.

''சொல்லுங்கோ'' என்றான் மாதவன்.

அவள் அவனைப் பார்த்தாள். அவனது முகத்தில் எந்த விதமான உணர்ச்சியுமில்லை. உமிழ்நீரைச் சிரமப்பட்டு விழுங்கினாள்.

''உங்களுக்குத் தொழிலேதும் இல்லை. அப்பா பெரும் பணக்காரன். வீட்டு வேலைகள் செய்யவும் பலர் இருக்கிறார்கள். பொழுது போகாமையால் நீங்கள் உலாத்தித் திரிவதை நான் அடிக்கடி காண்கிறனான்.'' என்று சிரித்தான் மாதவன்.

“இப்படித்தானா நீ உணர்ந்திருக்கிறாய். மடையா நான் உன்னைப் பார்க்கத் தான் திரிகிறேன் என்பதை ஏன் நீ உணர்கிறாயில்லை?” என்று கத்திச் செல்ல வேண்டும் போல இருந்தது. எனினும் சொல்ல முடியவில்லை. மனம் லேசாக வலித்தது. கண்கள் கலங்க ஆரம்பித்தன. நின்றால் அழுது விடுவோமோ என்ற பயத்தால் எதுவும் சொல்லாமல் தலையைக் குனிந்தபடி நடந்தாள் மல்லிகா.

மல்லிகா எதுவும் பேசாமற் சென்றதால் கலவரமடைந்த மாதவன் தயங்கித் தயங்கி அவளின் பின்னால் வந்து சொன்னான்; “உங்களின் போக்கு எனக்கு விளங்கவில்லை. நான் உங்களின் மனம் புண்படும் படியாக எதையும் சொல்லியிருந்தால் என்னை மன்னியுங்கள்.”

அவன் வார்த்தைகளை முடிக்கு முன் அவள் சொன்னாள்; “நீங்கள் எதுவும் சொல்லவில்லை…” அதற்கு மேல் அவளால் பேசமுடியில்லை. தலை குனிந்தாள்.

“வழக்கமாக மாலையுடன் வரும் நீங்கள் அந்த மாலைகளை எனக்குக் காட்டுவீர்கள்” என்றான் மாதவன்.

“இந்தாருங்கோ பாருங்கோ பார்த்து விட்டு குருக்களிடம் கொடுங்கோ….” கரகரப்பாக இருந்தது அவளது குரல்.

“இன்று உங்களது போக்குச் சரியில்லை” என்றவாறு மாலை கொண்டு வந்த பையை வாங்கிய மாதவன் அதிலிருந்த மாலையை எடுத்துப் பார்த்து விட்டுச் சொன்னான்; “இது வரை கட்டிக் கொண்டு வந்த மாலைகளை விட இது மிகவும் அழகாக இருக்கு. இப்போ என்னை விட அழகாக நீர் மாலை கட்டுகிறீர்.” என்றான் மாதவன்.

தலை குனிந்தபடி நின்ற மல்லிகா தலையைச் சிறிது உயர்த்திச் சிரித்தாள்; “இன்று மற்றைய நாட்களை விட நீரும் அழகாக இருக்கிறீர் ஏதாவது விசேடமா…? உங்களைப் பெண் பார்க்க யாராவது கோயிலுக்கு வருகிறார்களா….”

“என்னைப் பெண் பார்க்க யாரும் வரத்தேவையில்லை. இங்குள்ளவர்கள் பார்த்தாலே போதும்” என்றாள் மல்லிகா.

அதை அவன் எதிர்பார்க்கவில்லை. சற்றுத் தடுமாறிப் போனான். சில நாட்களாக அவளின் போக்கு மாறியிருந்தததை அவன் அவதானித்திருக்கிறான்.

அவளது போக்கில் ஒரு வித்தியாசம் இருந்தது. எனினும் அதைப் பற்றிக் கதைக்க அவன் பயப்பிட்டான்.

மல்லிகா சுற்றி வரப் பார்த்தாள். யாரும் இல்லை. அதனால் துணிந்து சொன்னாள்; மாலையும் அழகாக இருக்கு. நானும் அழகாக இருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். மாலையைத் தந்து விட்டேன்….." வார்த்தைகளை முடிக்காது அவனைப் பார்த்தாள் மல்லிகா.

"உமது போக்கும், எண்ணமும் எனக்குப் புரியாததல்ல. நீர் தேவதை. எந்தக் குறைகளும் இல்லாத குடும்பத்தில் பிறந்தவள். நான் பரம ஏழை. உமக்கேற்ற வாழ்க்கையை என்னால் தரமுடியாதென்பதற்காகவே நான் புரியாதவன் போல நடந்து வந்தேன். தயவு செய்து மனதில் உள்ள எண்ணங்களை மறந்து நல்ல உத்தியோகத்தனுக்கு வாழ்க்கைப்படுங்கள். நீர் எனது மதிப்புக்குரியவள். ஒருபோதும் துக்கப்படக்கூடாது" மாதவன் சொன்ன வார்த்தைகள் காதில் இடித்தன. அவள் தன்னையும் அறியாது விம்மினாள்.

நித்திரை கொள்வது போலப் பாசாங்கு செய்த சௌமியா எழுந்து லைட்ரைப் போட்டு விட்டுத் தாயின் அருகில் வந்தமர்ந்தாள். தாயின் முகம் வீங்கிக் கறுத்திருந்தது. அவள் சௌமியாவை அணைத்தவாறு விம்மி விம்மி அழுதாள்.

# 2

தாய்க்கு ஆறுதல் சொல்ல முடியாதென்று சௌமியாவுக்குத் தெரியும் கணவனின் நினைவு வந்தால் அழுது முடியும் வரை காத்திருக்க வேண்டும் என்பதும் அவளுக்குத் தெரியும். அதனால்; ‘‘அழாதைங்கோ. விடியப் போகிறது. அவை வந்திருவினை. படுங்கோ’’ என்றாள்.

அவள் அப்படிச் சொன்னதும் மல்லிகாவின் அழுகை நின்றது. மல்லிகா புரண்டு படுத்தாள். சௌமியா எதுவும் பேசாமல் லைட்டை அணைத்து விட்டுப்படுத்தாள்.

மல்லிகாவுக்குத் தூக்கம் வரவில்லை. திருமணமாகப் போகும் தனது மகளிடம் தனது துன்பத்தை வெளியிடக் கூடாதென்பதற்காகத் தான் அவள் சொன்னதும் படுத்தாள். இருந்த போதும் நித்திரை வரமறுத்தது. எழுந்து வெளியே வந்தாள். திடீரென்று தனது கணவன் நட்ட பலாமரத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் எழுந்தது.

வெளியே வந்தாள். வீட்டுக்குப் பின்பக்கமாக நின்ற பலாமரத்திற்கு அருகே பூட்டப்பட்டிருந்த லைட்டைப் போட்டாள். பிற்பக்கம் முழுவதும் பிரகாசமாக இருந்தது. மாதவன் கடின உழைப்பாளி. இளைஞனாக இருக்கும் போது தகப்பனின் உழைப்பில் தங்கி வாழ்ந்த

அவன் திருமணமாகி ஐந்து வருடங்களின் பின் பணக்காரனாக மாறிவிட்டான்.

அவள் பலாமரத்தின் அருகே வந்தாள் அதைப் பார்த்ததும் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது; ''மல்லி, நீர் ஒரு தேவதை. பணக்காரி. மிகுந்த அழகி. ஏழையான என்னை விரும்பிப் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியில் என்னுடன் கூட வந்து விட்டீர். அதனால் உமது பெற்றோர், சகோதரர்கள் எல்லோரும் உம்மை ஒதுக்கி விட்டனர். அப்படியான உம்மை நான் நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும். நீர் உமது வீட்டில் என்னென்ன வசதிகளோடு வாழ்ந்தீரோ, அந்தந்த வசதிகளையெல்லாம் உமக்குச் செய்து தருவேன். நீர் என்னுடன் வந்த இந்தப் பொன்னான நாளை நினைவு கூர்வதற்காக மிகுந்த சுவை மிக்க இந்தப் பலாமரத்தை உமது கையால் நடும். இது மிகமிக அருமையான பழம். சிவகுரு ஆசிரியர் தந்த பழத்தை உண்டு விட்டு முளைக்க வைத்தேன். இதை நடும்'' என்றான்.

அவள்; ''இருவரும் சேர்ந்தே நடுவோம்'' என்றாள்.

''இல்லை முதலில் நீர் நடும். பின் நான் நடுகிறேன். அதன் பின் நாம் சேர்ந்து நடுவோம்'' என்றான் மாதவன்.

அதன்படி அன்று மூன்று கன்றுகள் நடப்பட்டன. அவன் நட்ட அந்தப் பலாமரத்தின் அருகே சென்று அதைக் கட்டியணைத்து முத்தமிட்டாள். மாதவனைக் கட்டியணைப்பதைப் போன்ற ஒரு சுகம் உடலெங்கும் பரவியது.

‘‘நீங்கள் கூறியபடி என்னைச் சகல வசதிகளோடும் வாழ வைத்து விட்டீர்கள். ஏழு வருட வாழ்க்கையென்றாலும் மிகவும் பூரணமானது. இன்பமானது மனநிறைவுள்ளது. நீங்கள் விரும்பியதைப் போல் சௌமியா டொக்டராகி விட்டாள். கல்யாணக் கலப்பு என்று தீர்மானித்துள்ளோம். எம்மைப் போல அவளும் ஒருவனைக் காதலித்தாள். அவள் ஆரம்பத்தில் அவனை விரும்பவில்லை. அவன் தான் துரத்தித் துரத்திக் காதலித்தான். நான் உங்களைக் காதலித்தது போல எனது கரைச்சலைத் தாங்க முடியாது என்னை நீங்கள் காதலித்தது போல அவனது கரைச்சலை தாங்க முடியாது அவளும் காதலித்தாள். என்னைப் போன்ற தீவிரமான காதலில்லை. உங்களை அப்படியே உரித்து வைத்திருக்கிறாள். குணம் நடை போக்குவாக்கு எல்லாம் நீங்களே. அதனால் அவளை ஆசையோடு பார்ப்பேன். அவள் சிரித்தால் உங்களைப் போல அவளின் கன்னங்களிலும் குழி விழும். நேரான கதை. பல நேரங்களில் பிரச்சினைகளை வரவழைத்து விடுகிறது’’ விம்மினாள்.

அப்போது அவள் அவனோடு வந்தன்று நடந்த சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. மல்லிகாவின் தகப்பன் சின்னராசா ஊரில் பெரிய மனிதன். ஊரவர்கள் அவருக்குப் பெரு மதிப்புக் கொடுத்தனர். ஆனால் மாதவனின் தந்தை கந்தவனம் குடிகாரன். ஊரில் யாரும் மதிப்பதில்லை. அதனால் மாதவன் மல்லிகாவை ஒதுக்கி வந்தான். அத்துடன் அவளைச் சந்திக்காது தவிர்த்தும் வந்தான். ஆனால் மல்லிகா அவனைத் தீவிரமாகக் காதலித்தாள். அதற்காக அவள் எதையும் துறக்கத் தயாராக இருந்தாள்.

இருவரும் கோயில் மண்டபத்தில் சேர்ந்திருந்து மாலை கட்டுவதைப் பற்றி ஊரில் பேசத் தொடங்கினர். அது மாதவனுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. ஆனால் மல்லிகாவுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. கல்லுப் போல உணர்ச்சியற்றிருக்கும் மாதவனுக்கு அதனால் உணர்ச்சி ஏற்படுமென்று நினைத்தாள் மல்லிகா.

மாதவன் அச் செய்தியைக் கேட்டுத் துடிதுடித்துப் போனான். தன்னை விசாரிப்பவர்களுக்கு அது வெறும் வதந்தி என்று கூறியதோடு மல்லிகாவைச் சந்திக்காதும் விட்டான். இதை அறிந்த சின்னராசா தனது மகளுக்குத் தனது சகோதரியின் மகன் அரவிந்தனை நிச்சயித்திருந்ததால் இருவீட்டாரும் கூடித்

திருமணநாளைக் குறித்தனர். கல்யாண நாளும் நெருங்கியது.

மல்லிகா திகைத்துத் திகிலடைந்து போனாள். அச் செய்தி மாதவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவன் அயலூரில் உள்ள நண்பனின் வீட்டில் மறைந்திருந்தான்.

மல்லிகா அவனை ஊரெங்கும் தேடினாள். அவன் சென்ற விடயம் யாருக்கும் தெரியாததாகையால் எவரை விசாரித்தும் உரிய பலன் கிடைக்கவில்லை. அதற்காக அவள் சோர்ந்து போய் விடவில்லை. அவள் அன்று மாதவனின் மூத்த சகோதரியின் வீட்டுக்குச் சென்றாள். எப்படித் தான் விசாரித்த போதும் மாதவனின் சகோதரி எதுவும் கூறவில்லை. அவள் முதல் முறையாகச் சொன்ன; ‘‘எனக்குத் தெரியாது’’ என்ற வார்த்தையையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளை விசாரிப்பதால் பலன் ஏற்படப் போவதில்லை என்று மல்லிகாவுக்குப் புரிந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தவாறு தனது வீட்டுக்கு வந்தாள். வரும் வழியில் தான் அவள் வணங்கும் முருகனின் ஆலயம் இருந்தது. ஆலயத்திற்கு அருகில் உள்ள கடையில் கற்பூரமும் தேங்காயும் வாங்கிக் கொண்டு கோவிலுக்கு வந்தாள். கற்பூரச்சட்டியில் கற்பூரம் எரிந்து கொண்டிருந்தது. அதனுள்த் தான்

கொண்டு வந்த கற்பூரச் சரைகளைப் போட்டு விட்டுத் தான் கொண்டு வந்த தேங்காயை உடைத்தாள்.

தேங்காயைப் போலவே அவளது மனமும் சுக்கு நூறாக உடைந்திருந்தது; ‘‘முருகா, உனக்குக் காதலைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் நீ காதலித்துத் திருமணம் செய்தவன். உனது காதலுக்கு வந்த இடையூறைப் போன்றதொரு இடையூறு எனது காதலுக்கும் வந்துள்ளது. அந்த இடையூறுகளை நீக்கி என்னை அவருடன் சேர்த்து வை. அவர் ஞானியைப் போலக் கருங்கல்லாக இருக்கிறார். பிரச்சினைகளுக்குப் பயப்படுகிறார். பிரச்சினைகளுக்குப் பயப்பட்டால் காதலில் வெற்றியடைய முடியாது.’’

விம்மி விம்மி அழுதாள். அவளால் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை; ‘‘முருகா நான் ஒரு பெண் என்பதை மறந்து என் உள்ளத்தில் பூத்த காதலுக்காகத் துன்பப்படுகிறேன். அவருக்குக் காதலிக்கத் துணிவு இல்லை. நீ துணிந்தவன். காதலுக்காகப் பெரும் சாதனைகளைச் செய்தவன். அது போல அவருக்கும் துணிவைக் கொடு’’ என்று அழுதாள்.

மனம் விட்டு அழுத பின் ஆறுதலாக இருந்தது. மனதில் துணிவும் பிறந்தது. திருமணத்திற்கு இன்னும் பத்து நாட்கள் உள்ளன. அதற்கிடையில் மாதவனைத்

தேடிக் கண்டு பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

அப்போது மாதவனின் சகோதரியின் கணவன் அருளானந்தன் தேங்காய் ஒன்றுடன் கோவிலுக்கு வந்தான். அவனை மல்லிகாவுக்குத் தெரியும். ஓரிரு முறை கதைத்திருக்கிறாள். அவன் வணங்கி விட்டு வரட்டும் என்று காத்திருந்தாள்.

ஆனால் அவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் மனம் பரபரத்தது. அவளின் அருகே வந்த அருளானந்தன் சொன்னான்; ''நீர் சற்று முன் எமது வீட்டுக்கு வந்ததாக அறிந்தேன். மாதவன் துணிவில்லாதவன், கோழை, அவளைக் கட்டி என்ன செய்யப் போகிறாய்? இப்போ உனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டதென்றால் அதை நடக்க விடாமற் செய்வதை விட்டுவிட்டு நண்பனின் வீட்டில் போய் மறைந்திருக்கிறான். மடையன்''

அருளானந்தன் வார்த்தைகளை முடிக்கு முன் மல்லிகா சொன்னாள்; ''அப்படியில்லை. தான் என்னைத் திருமணம் செய்தால் எனது வாழ்க்கை பாழாகி விடுமென்று பயப்படுகிறார். காதலிப்பவன் தன் காதலியைப் பெருமையுடன் வைத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறார்....'' என்றாள்.

‘‘காதலிக்கிறவை எல்லாரும் ஒழுங்காகவும் பெருமையாகவும் தான் வாழினையே? எனக்குத் தெரிந்த பலர் நிம்மதியாக வாழவில்லை. நம்பி வந்த காதலியை விட்டு விட்டுச் சிலர் சென்றுள்ளனர். கொலை கூட நடந்திருக்கு. காதல் என்பது காமம் என்று நினைப்பவனின் வாழ்வு தான் சீரழிந்து விடும். மாதவன் பயப்படுவது இவைகளுக்காகத் தான்’’ என்றான். அருளானந்தன்.

மல்லிகா வெகு நேரமாக எதுவும் பேசவில்லை. பின்பு சொன்னாள்; ‘‘என்னால் அவரைப் பிரிந்து வாழ முடியாது. தயவு செய்து இதை அவருக்கு விளங்க வைத்து என்னை வந்து அழைத்துச் செல்லச் சொல்லுங்கோ….’’

‘‘அவனுக்கு விளங்க வைக்க முடியாது. வேண்டுமானால் அவன் இருக்கும் இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன். வந்து கதையுங்கள்’’ என்றான் அருளானந்தன்.

மல்லிகா எதைப் பற்றியும் யோசிக்கவில்லை; ‘‘நான் வருகிறேன்’’ என்றாள். அருளானந்தன் ஒரு மாலை வேளையில் ஓட்டோவில் அவளை அழைத்துச் சென்று மாதவனிடம் ஒப்படைத்தான்.

மாதவன் திகைத்துத் திகிலடைந்து போனான். மூன்று நாட்கள் வரை அவனது அதிர்ச்சி நீங்கவில்லை. அதை நினைக்க மல்லிகாவுக்குப் பயமாக இருந்தது.

“அவரைப் போலவே இருக்கிறாள் செளமியா. தன்னைக் காதலித்த காண்டீபனைச் சில பிரச்சினைகள் காரணமாக வேண்டாம் என்கிறாள். விடிய என்ன நடக்கப் போகிறதோ?” என்று அஞ்சினாள் மல்லிகா.

# 3

“அக்கா, என்னாலை தான் எல்லாப் பிரச்சினைகளும். நான் எங்கேயாவது போயிர்றேன் அக்கா” விம்மி விம்மி அழுதாள் மல்லிகாவின் தங்கை காயத்திரி.

காயத்திரி இளமையிலேயே துடிப்பானவள். மல்லிகா பிறந்து பத்து வருடங்களுக்குப் பின்பு பிறந்தவள். படிப்பில் கெட்டிக்காரி. ஏ.எல் படிக்கும் போது புலிகள் இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் போராடியவள். பின் இராணுவத்திடம் சரணடைந்து மூன்று வருடப் புனர்வாழ்வின் பின் விடுதலை பெற்றவள்.

காயத்திரி இயக்கத்திற்குச் சென்ற பின்பு சின்னராசா அவளோடு உள்ள உறவை விட்டு விட்டார். அவருக்கு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கையில்லை. அவள் இயக்கத்தில் பயிற்சி பெற்ற பின் அவளது சொந்த ஊருக்கு இயக்கத்தின் செயற்பாடுகளைக் கவனிப்பதற்காக அனுப்பப்பட்டாள். அக் காலத்தில் இயக்க உறுப்பினர்களை இலங்கை இராணுவம் வீடு வீடாகத் தேடிக் கொண்டிருந்தது. காயத்திரி ஊருக்கு வந்த பின்பு ஊர்ப்பெண்கள் சிலர் காயத்திரியோடு சேர்ந்து இயக்க வேலைகளில் ஈடுபட்டனர். அவர்களிற் சிலர் அவளுடன் சேர்ந்து பயிற்சி பெற விரும்பினர். பயிற்சி பெற விரும்பிய பெண்களை அவள் கடல் வழியாக கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்றாள்.

இது ஊரவர்களுக்குத் தெரியும். அதனால் பயிற்சிக்குச் சென்ற பெண்களின் பெற்றோர் காயத்திரியின் வீட்டுக்கு வந்து தாறுமாறாகப் பேசிவிட்டுச் சென்றனர். இது சின்னராசாக்குப் பெரும் அவமானமாக இருந்தது; “மூத்தவள் ஒரு பிச்சைக்காரனைக் காதலித்து அவனோடு ஓடி விட்டாள். இளையவளும் இயக்கத்திற்கு ஓடி விட்டாள். இனி நான் வாழ்ந்து என்ன பயன்?” என்று அடிக்கடி சின்னராசா சொல்லிக் கொண்டிருப்பார்.

இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் விபரத்தை அவர் சென்று பார்க்கவும் இல்லை. காயத்திரியைத்

தேடவும் இல்லை. காயத்திரி மூலம் இயக்கத்திற்குச் சென்ற தம்பிராசாவின் மகள் சாந்தி வவுனியா முகாமில் இருக்கிறாளென்று வவுனியாவுக்குச் சென்று வந்தவர்கள் கூறக் கேட்ட தம்பிராசா வவுனியா இராணுவ முகாமுக்குச் சென்று தனது மகளைப் பார்த்து விட்டு வந்தார். அவளுடன் காயத்திரியும் இருக்கிறாள் என்று தம்பிராசா பல முறை கூறியும் சின்னராசா சென்று பார்க்கவில்லை; "அவள் போனன்றே செத்துப் போனாள். நான் தேடமாட்டன். இவள் வீட்டை வந்தால் ஆயிரமாயிரம் பிரச்சினைகள் வரும். அவள் இயக்கத்தில் இருக்கும் போது வீட்டை வந்து போறாள் என்ற சந்தேகத்திலை அடிக்கடி இராணுவம் வந்து விசாரித்துக் கொண்டு போனது. பெத்ததுக்குப் பட்ட கரைச்சல்கள் போதும்" என்று கூறிவிட்டார்.

மல்லிகாவும் சௌமியாவும் தான் அடிக்கடி வவுனியாவுக்குச் சென்று காயத்திரியைப் பார்வையிட்டு வந்தனர். செல்லும் போது அவளுக்கு விருப்பமான உணவு வகைகளையும் உடுபுடைவைகளையும் கொண்டு சென்று கொடுத்தனர். இரண்டாயிரத்துப் பதினொராம் ஆண்டு புனர்வாழ்வுப் பயிற்சிகள் முடிவடைந்து விட்டதால் அவளைப் பெற்றோர் வந்து அழைத்துச் செல்லுமாறு இராணுவத்தினர் வந்து பல தடவைகள் கூறிய போதும் சின்னராசா செல்லவில்லை. அதனால் மல்லிகாவும் சௌமியாவும் சென்று அழைத்து வந்தனர்.

காயத்திரி மல்லிகாவின் வீட்டுக்கு வந்த மறுநாள் தகப்பனையும் தாயையும் பார்க்க சின்னராசாவின் வீட்டுக்குச் சென்றாள். சின்னராசா அவளைக் கண்டவுடன் வீட்டைப் பூட்டிக் கொண்டு உள்ளே இருந்து சொன்னார்; “நீ செத்துப் போனதாகத் தான் நான் நினைச்சிருக்கிறன். நான் செத்தாலும் இந்தப் பக்கம் வராதை” என்று கோபமாகச் சொன்னார்.

சின்னராசா தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பவர். அதனால் ஊரவர்கள் அவருடன் நட்புரிமையுடன் பேசுவது குறைவு. எதிர்காலத்தை ஒரு போதும் ஆராயாது பேசுவது அவரது சுபாவம். அதனால் அதன் பின் காயத்திரி தனது வீட்டுக்குப் போவதில்லை.

“நான் எங்கேயாவது போயிர்றன்…” காயத்திரி பேசிக் கொண்டிருக்கும் போது மல்லிகா அவளது கன்னத்தில் ஓங்கியடித்தாள். அதைக் காயத்திரி எதிர்பாராததால் அதிர்ச்சியடைந்து போனாள்; “நீ என்ன பேசுகிறாய். இயக்கத்திற்குப் போறதை யார் குறை கூறுவது. இயக்கம் இருக்கும் போது உன்னைப் போற்றிப் புகழ்ந்தவை. உன்னைச் சந்திக்கத் துடித்தவை. உன்ரை வயதையும் மீறி மரியாதை தந்தவை. இப்ப இயக்கம் அழிஞ்சிட்டுதெண்டவுடனை காணப் பயப்பிடீனை, கண்டபடி பேசினை. ஒரு காலத்திலை பெரும் வீரர்களாய்க் கணிச்சிவை. இப்ப காண விரும்பினை

இல்லை. அந்த நிலை உறவினர் அல்லாதவருக்கு வரலாம். உறவினருக்கு வரலாமே. நீ என்னுடைய கூடப் பிறந்த தங்கை. உன்னை நான் கலைச்சால் ஆர் ஆதரிக்கிறது. இனிமேல் எதுவும் கதையாதை. நீ இஞ்சை இருப்பதைப் பிடிக்காதவை இஞ்சை வரவேண்டாம்.'' ஆத்திரத்தால் கத்திய மல்லிகா பின் துக்கத்தைத் தாங்கமாட்டாது அழுதாள்.

தாய் அழும் சத்தம் கேட்ட சௌமியா வெளியே வந்தாள். இன்னும் விடியவில்லை. பின்னிரவு இரண்டு மணி இருக்கும். மின்சார வெளிச்சத்தில் தாயும் சித்தியும் நிற்பது தெரிந்தது. காயத்திரி உறவு முறையால் சித்தியே தவிர வயதால் சௌமியாவை விட இரண்டு வயது இளமையானவள்.

சௌமியா அவர்களின் அருகே வந்த போது இருவரும் கண்களைத் துடைத்து விட்டு எதுவும் நடவாதது போல நின்றனர். சௌமியாவும் எதையும் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. தாயைப் பார்த்தாள். அவளது கண்கள் சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. அதையும் தெரிந்து கொண்டதாக அவள் காட்டிக் கொள்ளவில்லை.

''அம்மா ஆயத்தங்கள் எதையும் செய்யத் தேவையில்லை. காண்டீபன் மட்டும் தான் வருவர். வீட்டார் வராயினை. சில சமயம் காண்டீபனின்

நண்பர்கள் ஒரு சிலர் வருவினை. இனத்தவர்களும் வரமாட்டார்கள். அவர்கள் வருவதானால் இருபத்தைந்து இலட்சம் ரூபா டொனேசனாய்க் குடுக்க வேண்டும்.'' என்று சிரித்தாள் சௌமியா.

''காசு கூடக் குடுக்கக் குடுக்க களங்கங்களெல்லாம் போயிடுமாமோ? முன்னுக்கு இயக்கத்திலை இருந்தவள் இருக்கிற வீட்டிலை சம்மந்தம் செய்ய விரும்பவில்லை என்றினை. இருபத்தைந்து இலட்சம் குடுத்தால் விரும்புவினையோ..'' என்று கேட்டாள் காயத்திரி.

''ஊரிலை நடக்காததையே அவை கேட்கினை. வங்கியில் உன்ரை பெயரில் இருபத்தைந்து இலட்சம் இருக்கு. அதை எடுத்துக் குடுக்கலாம் தானே. நீ நான் சொல்வதைக் கேள்'' தழு தழுத்தாள் மல்லிகா.

''சீதனமாக எதையும் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. பிறகு டொனேசன் எப்பிடிக் குடுக்கிறது. என்னளவு தான் அவரும் படித்தவர். எனக்கும் அவருக்கும் ஒரேயளவு தான் சம்பளம். பிறகேன் நாம் வீடு வளவு, காணி பூமி, காசு, டொனேசன், நகை நட்டென்று கொடுப்பான். ஒவ்வொருவரிடம் இருப்பதைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பது தான் முறை. அதை விட்டு விட்டு ஒரே தொழில் செய்பவர்களில்

ஒருவர் எப்படி மேலானவர் ஆவர்? அப்பா உங்களை உடுத்த சேலையோடு கூட்டி வந்தவர். இப்ப நீங்கள் கோடீஸ்வரி. அவரைப் போல எல்லா ஆண்களும் இருந்தாலென்ன….?'' என்று கேட்டாள் சௌமியா.

மல்லிகாவுக்கு அழுகை வந்து விட்டது. விம்மி விம்மி அழுதாள்; ''அம்மா, எக் காரணம் கொண்டும் அழக் கூடாதென்று நான் பல முறை சொல்லியிருக்கிறன். அப்பான்ரை தைரியம் என்னட்டை இருக்கு. உங்கடை துணிவும் இருக்கு. இல்லாவிட்டால் ஐந்து வயதில் அப்பாவை இழந்த என்னை வளர்த்து ஆளாக்கி டொக்டராக்க முடியுமே? சாதாரண பெண்ணாக இருந்தால் இதையெல்லாம் செய்ய முடியுமே…? அப்பா முக்காலத்தையும் உணர்ந்தவர். அதனால் வாழ்க்கையைத் திட்டமிட்டார். ஆதனால் நாம் எந்தக் குறையுமில்லாமல் வாழுறம். அதை மாதிரி எல்லோரும் வாழ வேண்டியது தானே.''

''எல்லாவற்றையும் சொல்லலாம், செய்யலாமே? அப்பாவைப் போல எல்லாராலும் வாழ முடியுமே? காண்டீபன்ரை தகப்பன் ஆசிரியராக இருந்தவர். பொம்பிளைப் பிள்ளையொன்றிருக்கு நாம் கொடுத்தால் தானே அது கரைசேரும்'' என்றாள் மல்லிகா

“அது பிழை அம்மா. படித்த ஓர் ஆணைக் காட்டிப் பணம் கேட்பது அவனை விற்பதற்குச் சமமாகும். இப்போ எமது சமூகத்தில் ஆண்களை ஏலம் கூறி விற்பனை செய்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். காண்டீபனின் தகப்பன் தனது பெண்ணின் வாழ்க்கையைப் பிறரை நம்பி ஏற்படுத்திக் குடுக்கக் கூடாது. தான் உழைக்க வேண்டும், தன் பிள்ளையைக் கொண்டு உழைப்பிக்க வேண்டும். இன்னும் பத்து வருடம் வரை நான் பொறுத்திருப்பன். உழைத்துக் கரைசேர்த்து விட்டு வரட்டும். இல்லாவிட்டால் திருமணத்தைச் செய்யட்டும். அதன் பின் அவ் வீட்டில் நடைபெறும் நன்மை தீமைகளில் எனக்கும் பங்குண்டு. நான் நல்ல இடத்தில் செய்து வைப்பன்.”

“உதை அவை கேட்பினையே…?” ஆத்திரத்துடன் கேட்டாள் மல்லிகா.

“கேட்காட்டில் போகட்டன். எனக்கு காண்டீபன் இல்லாவிட்டால் வேறு மாப்பிளை கிடையாதோ?” சிரித்தாள் சௌமியா.

“உன்னோடை கதைக்கேலாது. கதைக்கிறதெல்லாம் விசர்க்கதை” அழுதாள் மல்லிகா.

“காலமை ஏன் வீணான கதைகளைக் கதைக்கிறீர்கள். சௌமியா கதைப்பது நியாயம் தான். ஆனால் அதை நியாயம் என்று ஊரிலை யாரும் ஒத்துக் கொள்ளாயினை. ஊர் வழமை தேச வழமை சமய முறை சம்பிரதாய முறை என்பினை. எங்களின் சமய ஆண் கடவுள்களே பெரும் பெரும் சீதனம் வாங்கித் தான் திருமணம் முடித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. நீ மாப்பிளைக்கு ரெலிபோன் பண்ணிச் சொல். இருபத்தைந்து இலட்சம் டொனேசனாய்த் தரலாமென்று. காலமை பிரச்சினையில்லாமல் எழுந்து நடக்கட்டும்” என்றாள் காயத்திரி

சௌமியா எதுவும் பேசவில்லை. காயத்திரியை முறைத்துப் பார்த்து விட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

“அவள் தகப்பனை மாதிரி பிடிவாதக்காரி. விட்டுக் கொடுக்கமாட்டாள்.” என்றாள் மல்லிகா.

“உன்னிற் பார்க்க அவள் பிடிவாதக்காரியே? சௌமியா பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது அப்பா வர நீ என்ன சொன்னனீ? யோசித்துப் பார்”

“அவரை ஏற்காத எவரையும் எனக்குத் தேவையில்லை” என்றாள் மல்லிகா. அவளது குரல் ஓங்கி ஒலித்தது.

# 4

காயத்திரி சென்று விட்டாள். அவன் சொன்ன வார்த்தைகள் மல்லிகாவின் மனதில் புயலாக வீசின; ‘‘உன்னிற் பார்க்க அவள் பிடிவாதக்காரியே. சௌமியா பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது அப்பா வர நீ என்ன சொன்னீ. யோசித்துப்பார்…’’

மல்லிகாவால் அவ் வார்த்தைகளைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மனதைக் கொதிக்கப் பண்ணிக் கொண்டிருந்தன. நேரம் ஆக ஆக விசர் பிடித்து விடுமோ என்ற நிலை உண்டானது. மல்லிகா பொறுமையானவள். மற்றவர்களைத் தகுதி பாராது மதிக்கத் தெரிந்தவள். அப்படியிருக்கப் பெற்ற தகப்பனாரைக் கேவலமாக இல்லை மிகமிகக் கொடிய வார்த்தைகளால் பேசினாள் என்பதற்குத் தகுந்த காரணங்கள் பல உண்டு.

உள்ளே சென்ற காயத்திரிக்குத் தான் அப்படிக் கூறியிருக்கக் கூடாது என்ற எண்ணம் வந்தது. காதல்

இயல்பானது. அது விதி வசத்தாலோ அல்லது சந்தர்ப்ப வசத்தாலோ வந்து சேர்ந்து விடுகிறது. காதல் வருமுன் தகுதி, தராதரம், கல்வி, சாதி, சமயம் யாவற்றையும் பேண வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால் காதல் வந்த பின் எந்த நினைவும் வராது. அக்கா ஆண்களை நிமிர்ந்து பார்தத்தில்லை. ஆண்களைக் கண்டால் ஒதுங்கி விடுவாள். அம்மாவின் சகோதரனின் மகன் அவளின் காதலைப் பெற எவ்வளவு முயன்றான். மல்லிகா பிறந்த போது மாமாவும் மாமியும் சேர்ந்து மல்லிகா தான் எமது வீட்டு மருமகள் என்று கூடித் தீர்மானம் எடுத்தனர்.

மாமாவின் மகன் அரவிந்தன் பட்டதாரி ஆசிரியன். அவன் மல்லிகாவைப் பார்த்துப் பேசவென்று தினமும் வீட்டுக்கு வருவான். ஆனால் மல்லிகா அறையைப் பூட்டி விட்டு இருப்பாள். இல்லாவிட்டால் கோவிலுக்குச் சென்று விடுவாள். அம்மா அரவிந்தன் வரும் வேளைகளில் தவியாய்த் தவிப்பா.

‘‘பெண்கள் முறை மாப்பிளையானாலும் காண, பேச வெட்கப்படுவார்கள். மல்லிகா கூச்ச சுபாவமுடையவள். கலியாணம் முடிந்தால் யாவும் சரி வரும்’’ என்பா. அதை மகிழ்ச்சியுடன் கேட்டு விட்டு அரவிந்தன் சென்று விடுவான்.

“அவன் போன பின்பு அம்மா கோபத்தோடு கத்துவா; “அவன் முறைப் பையன். இரு வீட்டாரும் கூடி முடிவெடுத்து விட்டோம். ஒப்புக்காவது வெளியே வந்திருக்கலாம். ஊரில் உள்ள உனது வயதுள்ள பெண்கள் இவற்றைப் பற்றிக் கதைப்பதில்லையா..? நான் ஒரு மோட்டு யென்மத்தை பெத்து வைச்சிருக்கிறன். சொன்னாலும் புரியாது. தானாயும் உணராது” என்று ஆத்திரத்தோடு திட்டும் போது சிரிக்கும் மல்லிகாவா காதல் வயப்பட்டாள். அதை நினைக்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

குற்ற உணர்வுடன் மல்லிகாவுக்கு அருகில் வந்த காயத்திரி சொன்னாள்; “நான் சொன்னது பிழை. நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. அப்பா செய்தவை யாவும் பெரும் தவறான செயல்கள். அந்த நேரத்தில் ஆராயாது சொல்லி விட்டேன். பின்பு தான் புரிந்தது. தயவு செய்து என்னை மன்னித்தக் கொள்.” கண்கள் குளமாக மல்லிகாவின் கையைப் பிடித்தாள் காயத்திரி

“அப்பா செய்தவையெல்லாம் பெரும் துரோகமான செயல்கள். அவரது சுபாவம் அப்படியானது. அவரை ஒரு போதும் திருத்த முடியாது. உனது விசயத்தில் மட்டுமல்ல எனது விசயத்திலும் மோசமாகத் தானே நடந்து கொண்டார். நான் இயக்கத்திற்குச் சென்ற போது என்னோடு பதினைந்து பெண்கள் இயக்கத்திற்கு

வந்தனர். அவர்களில் ஐவர் வீரமரணம் அடைந்தனர். வீரமரணம் அடைந்த பெண்களின் பெற்றோர் இன்றும் அப் பெண்கள் வீரமரணமடைந்த நாளைக் குறித்து வைத்துச் சமய நிகழ்வுகளைச் செய்கிறார்கள்.'' விம்மினாள் காயத்திரி. மல்லிகா எதுவும் பேசவில்லை. துயரத்துடன் பேசிக் கொண்டிருக்கும் தனது தங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விம்மலுக்கு மத்தியில் காயத்திரி சொன்னாள்; ''ஊரில் உள்ள பெற்றோர்கள் எல்லோரும் இயக்கத்திற்குச் சென்ற தம் பிள்ளைகளைத் தேடித் திரிந்தவை. அப்பா மட்டும் தேடவில்லை. அதை விடப் புனர்வாழ்வு பெற்ற பெண்களை அவர்கள் சென்று பார்வையிட்டனர். பின்பு தமது வீட்டுக்கு அழைத்து வந்தனர். ஆனால் அப்பா அப்படிச் செய்யவில்லை. அக்கா, நீயும் சௌமியாவும் வராவிட்டால் நான் என்னபாடு பட்டிருப்பேன். அதோடு எங்கு சென்றிருப்பன்.'' விம்மி விம்மி அழுதாள்.

''முடிந்து போனவற்றை நினைத்து அழாதை. துன்பப்படுவதால் துன்பத்தைப் போக்க முடியாது. துன்பம் போக வேண்டுமானால் துன்பத்தை எதிர்த்துப் போராட வேண்டும். அழாதை'' என்றாள் மல்லிகா.

‘‘எல்லாவற்றையும் ஏற்க எனது பயிற்சி உதவி செய்கிறது. இருந்த போதும் சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசி விடுகிறேன். அப்பாவுக்கு மனித உணர்ச்சிகள் எவையுமில்லை’’

‘‘அப்பாவை நினைத்து நான் பல தடவைகள் நிம்மதியிழந்திருக்கிறேன். என்னை அவர் விரும்பவில்லை. அதற்குக் காரணம் நான் வசதியானவள். பணக்காரி என்பது மட்டும் தான்; ‘‘நீர் தேவதை நான் உம்மை ஆராதிக்கும் பக்தனே தவிர உம்மை இச்சிக்கும் காதலன் அல்ல. உம்மை நான் திருமணம் செய்தால் நீர் வாழும் வாழ்க்கையில் நூறில் ஒரு பங்கு வசதியைக் கூட என்னால் செய்து தர முடியாது. இப்போ உணர்ச்சிப் பெருக்கில் உண்மையான வாழ்வை நினைக்கத் தவறும் நீர், வாழ்க்கைப்பட்ட பின் அந்த நேரம் அவசரப்பட்டு விட்டேன் என்று எண்ணித் துயரப்படக் கூடாது. அதனால் உமக்குப் பெற்றோர் தீர்மானித்த உமது மாமன் மகனான அரவிந்தனைத் திருமணம் செய்யும். அவன் பட்டதாரி ஆசிரியன். வசதியான குடும்பத்தில் பிறந்தவன்’’என்பார்.

பேசுவதை நிறுத்திவிட்டு மூச்சுவிட்ட மல்லிகா சில கணங்கள் பொறுத்துச் சொன்னாள்; ‘‘நான் அருளானந்தனோடு அவரைத் தேடிச் சென்றதைக் கண்டதும் அவர் மயக்கமடைந்து விட்டார். மயக்கம் தெளிந்த பின்பு என்னை கூட்டிச் சென்று வீட்டில்

விடும்படி அருளானந்தத்திடமும் நண்பனிடமும் சொன்னார். அவர்கள் கேட்கவில்லை; “நண்பா, மல்லிகாவுக்கும் அரவிந்தனுக்கும் திருமண நாள் குறித்தாயிற்று. இந் நிலையில் தான் மல்லிகா உன்னைத் தேடி வந்துள்ளாள். இனி எப்படிக் கொண்டு சென்ற வீட்டில் விடுவது. இந் நேரம் மல்லிகாவைத் தேடத் தொடங்கியிருப்பார்கள். அவர்கள் நீ தான் மல்லிகாவை அழைத்துச் சென்று விட்டதாக நினைப்பார்கள். அத்துடன் உனது காதல் விசயம் ஊர் முழுவதும் தெரியும். நீ காதலிக்கா விட்டாலும் உனது நிலையைப் பற்றி யாருக்கும் தெரியாது. பொதுவாக மனிதர்கள் காதலிக்கும் இருவர் குடும்பமாகவும் இருந்திருப்பார்கள் என்றே நினைப்பார்கள். இன்னொருவனுடன் உறவு கொண்ட பெண்ணை நீ மணப்பாயா…?” என்று கேட்டுவிட்டு நிறுத்தினான் அவனது நண்பள் கணேசன்.

அப்போதும் மாதவன் எதுவும் பேசவில்லை. அதனால் கணேசனே தொடர்ந்து பேசினான்; “உன் மேற் கொண்ட காதலால் மல்லிகா தனது குடும்ப உறவை அறுத்துக் கொண்டு வந்து விட்டாள். இனி அவர்கள் மல்லிகாவை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதை விட அவளை ஏற்று அரவிந்தனுக்குத் திருமணம் செய்து வைத்தாலும் குடுபத்துள் ஏராளமான பிரச்சினைகள் வரும். அதனால் நண்பா துணிந்து மல்லிகாவை எற்றுக் கொள். நீ விரும்பும் பெண்ணை விட உன்னை விரும்பும்

பெண் தான் மேலானவள். சிறந்த குடும்பத் தலைவி'' என்றார்.

''அதற்குப் பின்பும் அவர் என்னைப் பற்றித் தான் சிந்தித்தார். தன்னால் எனக்கு நல்ல கணவனாக இருக்க முடியாதெனப் பயந்தார். அதை நினைக்க இப்போதும் எனது மனம் துடிக்கிறது. நாங்கள் ஊருக்கு வந்த பின் நடந்த சம்பவங்களைப் பற்றி நீ அறிந்திருப்பாய். அப்பாவோ அவரது உறவினர்களோ அவரை ஒரு மனிதனாகக் கணிக்கவில்லை. அதோடு அவர் செய்ய முயன்ற தொழில்களையெல்லாம் கெடுத்தனர். அதனால் அவர் ஊரின் ஒதுக்குப் புறமான இடத்தில் தேடுவாரற்றுக் கிடந்த பத்து பரப்புக் காணியைக் குத்தகைக்கு வாங்கி கமம் செய்தார். எமது காணிக்கு மூன்று மைல் தூரத்தில் உள்ள இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி செல் வீசுவார்கள். எமது தோட்டக் காணிக்கு அருகில் குடியிருப்புக்கள் இல்லை. எமது தோட்டக் காணியைச் சூழவுள்ள சுமார் இருநூறு முந்நூறு எக்கர் வயல் நிலம் பல வருடகாலமாகத் தரிசாகக் கிடந்தது. தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு இவரது நண்பர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்த போது இவரைச் சந்தித்தார். எமது தோட்டத்துக்கருகில் சுமார் எட்டு ஏக்கர் நிலம் அவருடையது. அவர் அதை இனாமாக எமக்குத் தர விரும்பினார். அதை இவர் விரும்பவில்லை. அப்போதைய பெறுமதிக்குப் பணங் கொடுத்து வாங்கி

வேலியடைத்து வேலியோரங்களில் தென்னை மரங்களையும் கமுகு மரங்களையும் நட்டார். உள்ளே தின வருமானத்திற்கேற்ற மரக்கறி வகைகளை நட்டார். அத்துடன் மா, பலா போன்ற பயன் தரு மரங்களையும் வேம்பு, தேக்கு, மலைவேம்பு போன்ற மரங்களையும் திட்டமிட்டு நட்டார்.''

''தொண்ணூற்றைந்தாம் ஆண்டு இடம்பெயர்வு வந்த போது சௌமியாவுக்கு எட்டு வயது. வரணியில் இடம்பெயர்ந்திருந்த போது அங்கு பாதுகாப்பு இல்லை என்பதற்காகப் பலர் வன்னிக்குப் புறப்பட்டார்கள். இவர் எங்களை இங்கு விட்டு விட்டு கிளிநொச்சியில் இருக்கும் தனது மாமனாரின் வீட்டுக்குச் சென்று எமக்கொரு வீட்டைப் பார்த்து ஒழுங்கு செய்து விட்டுத் திரும்பி வந்து எம்மை அழைத்துச் செல்வதாகக் கூறிச் சென்றவர் சென்றவர் தான். நிலைமை சரி வந்த பின் இவரின் மாமனாரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது இவர் வரவில்லை என்று சொன்னார். அதன் பின் நாம் இங்கு வந்து இந்தப் பரந்த வெளியில் தங்கியிருந்த போது அப்பாவோ அம்மாவோ இல்லை. உறவினர்களோ ஒப்புக் கூட வந்து பார்க்கவில்லை. எல்லோரும் நாம் தமக்குப் பாரமாகி விடுவோமென அஞ்சினர். எண்பத்தாறாம் ஆண்டு தொடக்கம் இரண்டாயிரத்தேழாம் ஆண்டு வரை வீட்டுக்கு வராத அப்பா சௌமியா பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான பின்பு அதுவும் ஊரில் உள்ள சில

பிரமுகர்களின் வற்புறுத்தலுக்காக வந்த போது எப்படி அவரை ஏற்பது? என்ன தான் பகை இருந்தாலும் சொந்த மகளின்ரை புரிசனைக் காணவில்லையெனத் தவித்திருக்கும் போது அவர் பிள்ளையார் கோவிலில் விமர்சையாகத் திருவிழாச் செய்கிறார். நான் துயரத்தால் துடிதுடித்திருந்த போது அவர் இன்பத்திற்காக மேளமடித்துத் திருவிழாச் செய்தவர். அப்படியானவரை நான் எப்படி ஏற்பது?'' விம்மி விம்மி அழுதாள் மல்லிகா.

# 5

''வழித்தெருக்களில் அம்மப்பாவை நான் அடிக்கடி சந்திப்பேன். அவர் ஏதாவது பேசமாட்டாரா என்று அவரைக் காணும் போதெல்லாம் ஆசைப்படுவேன். ஆனால் அவர் என்னை நிமிர்ந்தே பார்க்கமாட்டார். அப்பாவை எனக்குச் சரியாகத் தெரியாது. அவர் படம் கூட எடுக்கவில்லை. கலியாணமான சில நாட்களில் அம்மாவோடை சேர்ந்து எடுத்த படத்தை அம்மா இடம்பெயர்வின் போது தன்னோடு எடுத்துக் கொண்டு

போனதால் அவரைப் பார்க்கிறேன். எனது பிறப்புச்சான்றிதழில் அவரின் கையெழுத்துள்ளது. அந்த இரண்டைத் தவிர எனது வாழ்க்கைக்காகக் கோடிக் கணக்கான சொத்தைச் சேகரித்து வைத்த அந்தக் கனவான் தந்தையைப் பற்றி வேறு எதுவும் எம்மிடம் இல்லை'' விம்மினாள் சௌமி.

''திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இருவரும் கலங்குவது முறையல்ல. அழாதைங்கோ..?'' என்றாள் காயத்திரி. எனினும் அவளாலும் துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''நீங்கள் தான் திருமணத்திற்கான ஆயத்தங்கள் என்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரை இந்தத் திருமணம் நடக்குமென்று நான் நினைக்கவில்லை. காண்டீபனின் தந்தையும் அம்மப்பாவைப் போன்றவர் தான். அவரது தம்பியார் தம்மிலும் பார்க்கச் சாதி குறைந்த இடத்தில் உள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து விட்டாரென்பதற்காக அவர் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பே அவரை ஒதுக்கி விட்டார். அது காதல் திருமணமல்ல. பேசிச் செய்த திருமணம். காண்டீபனது தந்தையாரின் தந்தையார் தனது மகனின் திருமணத்திற்காகத் திருமணத் தரகர் ஒருவரிடம் குறிப்பைக் கொடுத்துள்ளார். புறொக்கர் நல்ல

சீதனத்துடன் அழகான பெண்ணொருத்தியைப் பேசி வந்தார். வீட்டார் எல்லோருக்கும் பெண்ணைப் பிடித்துவிட்டது. திருமணமும் முடிந்து விட்டது. பின்பு ஆராய்ந்த போது பெண்ணின் சகோதரன் ஒரு சாதி குறைந்த பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து விட்டான். அதனால் வீட்டார் அவனோடு உறவு வைப்பதில்லை. அச் சம்பவத்தை மறைத்துச் செய்து விட்டார்கள். சகோதரன் மாமன் மச்சான் இப்படி பிறத்தியாரின் பிரச்சினைகளையும் தம் பிரச்சினை போல எண்ணிச் சாதி பார்க்கும் இவர்கள் எம்முடன் எப்படிச் சம்பந்தம் வைப்பார்கள்?'' என்று கேட்டாள் சௌமியா

''பத்து மணிக்கு அவர்கள் வருவதாகச் சொன்னாய்?'' என்று கேட்டாள் காயத்திரி

''முதலில் அப்படித் தான் தீர்மானித்ததாகக் காண்டீபன் சொன்னார். எனக்குத் காண்டீபனின் தகப்பனின் குணம் தெரியும் தானே. அதனால் எங்கள் வீட்டுப் பிரச்சினைகளைச் சொல்லுங்கள். அவர் சம்மதித்தால் தான் நான் சம்மதிப்பேன் என்று சொன்னேன். அவர் சொல்லத் தயங்கினார். அதனால் நான் அவரைச் சந்தித்து எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். அதைக் கேட்டு விட்டு பெருமூச்சொன்றை விட்டு விட்டு எழுந்து சென்று விட்டார். வெகுநேரம் வரை அவர் வெளியே வராததால் காண்டீபன்

வந்து என்னை வீட்டுக்குச் செல்லுமாறு சொன்னார். நான் எழுந்து வந்து விட்டேன்''

''பிறகு காண்டீபனைச் சந்தித்துக் கதைக்கவில்லையா..?'' என்று கேட்டாள் காயத்திரி.

''சித்தி, எம் ஊரவர்களின் காதலில் பிரச்சினைகள் பல உள்ளன. முதலில் எதையும் ஆராயாமல் காதலிப்பார்கள். காதலித்துக் கல்யாணம் என்று வந்த பின்பு தான் சாதி, சமயம், சாதிக்கலப்பு, சீதனம், டொனேசன் என்று பலவற்றைச் சிந்திப்பார்கள். காண்டீபன் நான் ஏ.எல் படிக்கும் நாளில் இருந்து என்னைச் சுற்றிச் சுற்றி வந்தவர். எனக்கு என்ரை அம்மாவின்ரை நிலை தெரியும். காதலித்துத் தம் பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்துவிட்டாரென்பதற்காகக் கலியாணம் செய்த நாளில் இருந்து எவ்வளவு தொல்லைகளைக் கொடுத்தவர்கள். பணம் இருந்தாலும் பொருளிருந்தாலும் வாழ்க்கை சிறக்குமா என்ன..? அன்பான குடும்பம் பாசமுள்ள உறவுகள் இல்லாமல் அம்மா பட்ட துயரத்தை நான் பட விரும்பவில்லை. நான் ஏ.எல். படிக்கும் போது காண்டீபன் தனது விருப்பத்தை எனக்குத் தெரிவித்தார். துயரத்துடன் பேச்சை நிறுத்தினாள் சௌமியா.

மல்லிகா எதுவும் பேசாது நின்றாள். இதெல்லாம் அவளுக்குத் தெரியும். இதெவையும் தெரியாத காயத்திரி குழம்பிப் போனாள்.

‘‘நான் எதைச் செய்யும் போதும் அம்மாவைத் தான் நினைப்பேன். அவா தினமும் படும் துன்பத்தை நினைப்பேன். பிரச்சினைகள் வரும்போது அவர் படும்பாட்டை நினைப்பேன். அப்படி நினைக்கும் போது எனது மனம் செய்ய வேண்டியவற்றைச் சரியாகத் தீர்மானிக்கும். உண்மையைச் சொன்னால் காண்டீபன் கடந்த எட்டு வருடங்களாகக் காதலிப்பதாகச் சொல்கிறார். ஆனால் நான் காதலிக்கவில்லை. எமது குடும்பத்தில் நடந்தவற்றையெல்லாம் கூறிவிட்டேன். அவர் தனது குடும்ப விசயங்களையும் ஒழிவுமறைவின்றிச் சொல்லிவிட்டார். அதனால் நான் அவரைக் காதலிக்கவில்லை. அவர் கூறுபவற்றை அமைதியாகக் கேட்டுவிட்டு; ‘‘காண்டீ, எனக்கு உங்கள் மீது காதல் ஏற்படவில்லை. அதற்காக நான் உங்களை வெறுக்கிறேன் என்றில்லை. பெற்றோரின் விருப்பமில்லாமல் திருமணம் செய்வதை நான் விரும்பவில்லை. உங்கள் விருப்பத்தை உங்களின் பெற்றோருக்குச் சொல்லுங்கள். அவர்களின் சம்மதத்துடன் வாருங்கள் என்று கூறியுள்ளேன்.’’

“அவர்கள் சம்மதிக்கா விட்டால் என்ன செய்வது?” என்று கேட்டாள் காயத்திரி.

“பெற்றோரின் சம்மதமில்லாமல் அம்மா திருமணம் செய்து இவ்வளவு காலமும் பட்ட துன்பங்கள் உங்களுக்குத் தெரியும். அப்பாவை நம்பி வந்தவா. அவரும் இல்லை. உறவுகளும் இல்லை. அதனால் அவா பட்ட துயரத்தை நானும் பட விரும்பவில்லை. நான் காதலித்தால் தான் யோசிக்க வேண்டும். நான் காதலிக்கவில்லை. அவர் என்னை விரும்புவதாகச் சொன்னார். அவர் ஒரு டொக்ரர். நல்ல மனிதன். அவரைத் திருமணம் செய்யலாம். அதனால் அவரை வீட்டாருடன் கதைத்துச் சம்மதத்துடன் வரும்படி கூறினேன். அதன்படி அவர்கள் வருவதாகக் கூறினர். அவர்கள் வருமுன் எமது குடும்பநிலை பற்றி அவர்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன். அதனால் தான் நான் சொன்னேன். அதன் பின் காண்டீபனின் தந்தை விசாரித்துள்ளார். அதன் பின் அவருக்குத் திருப்தியில்லை. எனினும் மகனைச் சமாளிக்க வேண்டுமென்பதற்காகத் தான் வரவில்லையென்றும் தனது சகோதரியையும் புரிசனையும் அழைத்துச் சென்று கதைக்குமாறும் கூறியுள்ளார். அதை நான் ஏற்கவில்லை. திருமணம் என்றால் பெண்ணின் பெற்றோரும் உறவுகளும் ஆணின் பெற்றோரும் உறவுகளும் மகிழ்வுடன் எற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் வாழ்நாள்

முழுவதும் துன்பம் தான். இப்போ அம்மாவுடைய உறவுகள் இல்லாத நிலையில் எனது உறவுகளும் இல்லாமற் போனால் எப்படிச் சந்தோசமாக வாழ்வது?'' என்று கேட்டாள் சௌமியா.

காயத்திரிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை; ''நீ காதலிக்கவில்லை என்று சொல்கிறாய். அப்போ வேறை யாரையாவது பேசினால் செய்வாயா..?'' என்று காயத்திரி கேட்கும் போது; ''ஓ கட்டாயம் செய்வன். ஏனென்றால் நான் காண்டீபனைக் காதலிக்கவில்லை. காதலிக்கவும்மாட்டன். நல்லவர். அறிந்தவர். பண்பானவர் என்பதால் செய்ய விரும்பினேன். அதற்கு அவர் பெற்றோரின் சம்மதத்துடன் வரல் வேண்டும்'' என்றாள் சௌமியா.

''நீ நினைக்கிறது தான் சரி. எல்லா விடயங்களையும் ஆராயாமல் கலியாணஞ் செய்திட்டு பிற்காலத்திலை பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கேலாது. ஒரு குடும்பத்தின்ரை பிரச்சினைகளை ஆராயுறதிலை பிழையில்லை. மாமன், மச்சான் சகோதரங்களின்ரை பிரச்சினைகளை ஆராயலாமே? தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும் வாயும் வயிறும் வேறென்று ஒரு முதுமொழியிருக்கு. அப்பிடியிருக்கக் குடும்பத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து அதிலை குற்றம் குறை காணும் மனிசர் இந்த நாகரிக

காலத்திலும் இருக்கினை என்பதை நினைக்க வேதனையாக இருக்கு'' என்றாள் காயத்திரி.

''எமது சமூகத்தைத் திருத்தவே ஏலாது. காண்டீபனின் தகப்பன் ஒரு பிற்போக்குவாதி மட்டுமல்ல சுயநலவாதியும் கூட. நான் சொன்ன கதையெல்லாவற்றையும் அவதானமாகக் கேட்டுவிட்டுச் சொன்னார்; ''நீ படித்தவள். வெளிப்படையாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டாய். நான் படித்தவனானாலும் சமூகக் கோட்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவன். அதனால் நான் சொல்ல வேண்டியவற்றையும் நேரே சொல்லி விடுகிறேன். உங்களிகளின் அப்பா அம்மாவின் குடும்பத்திற்கச் சமமானவரில்லை என்பதால் தான் உங்கள் பாட்டனார் இது வரை உங்களை ஏற்கவில்லை. அதை விட போராட்டத்திற்கென சென்ற தனது இளைய மகளையும் ஏற்கவில்லை. அப்படியிருக்க உங்களது குடும்பத்தை நாங்கள் எப்படி ஏற்பது.? அத்துடன் நான் விசாரித்துப் பார்த்ததில் உங்கள் தகப்பனாரின் சகோதரர்களும், தகப்பனாரும் கூலி வேலை செய்பவர்கள். உங்கள் தகப்பனாரின் தகப்பன் சரியான குடிகாரன். குடித்து விட்டு ஊரில் கலகம் விளைவிப்பவராம். அவர்களோடு உங்களின் குடும்பம் நல்ல உறவு வைத்துள்ளது. தினமும் அவர்கள் உங்கள் வீட்டுக்கு வந்து போகிறார்கள். மதிப்போடு வாழும் நாம் அப்படியான

குடும்பத்துடன் உறவு கொள்வது எமது கௌரவத்திற்கு மாறானது. இனியென்ன செய்வது. மகன் விரும்பிவிட்டான். நான் ஒப்புக் கொள்ளாவிட்டால் அவன் உன்னைக் கூட்டிச்சென்று பதிவுத் திருமணம் செய்தானானால் எனது மானம் போய் விடும். அதன் பின் நான் வாழ்வதால் பயன் இல்லை. அதற்காக நான் சம்மதிக்கிறேன். இருபத்தைந்து இலட்ச ரூபா டொனேசன் தரல் வேண்டும். மகனும் உறவினர்கள் சிலரும் அவனது நண்பர்களும் திருமணத்தை நடத்தி வைப்பார்கள். நானோ எனது மனைவியோ வரமாட்டோம் என்றார்''

``ஐயா நான் உங்கள் மகனின் மீது காதல் கொள்ளவில்லை. அவர் தான் என்னைக் காதலிக்கிறார். அதனால் தான் உங்களுக்கு எமது குடும்பத்தைப் பற்றிக் கூற வந்தேன். நீங்கள் பெரும் சாதிமான் என்கிறீர்கள். மதிப்பு, மரியாதை பற்றிப் பேசுகிறீர்கள். அதன் பின் டொனேசனாகப் பணம் தருமாறு கேட்கிறீர்கள். டொனேசனாலை உங்கள் மதிப்பு, மரியாதை, கௌரவம் ஆகியவற்றைக் காப்பாற்ற முடியும் என்று நினைக்கிறீர்கள். அத்துடன் நீங்கள் வரமாட்டன் என்றும் கூறுகிறீர்கள். பிறகேன் இந்தக் கலியாணம். இப்படியான கலியாணம் எனக்கு வேண்டாம்'' என்று கூறிவிட்டு வந்தேன்'' என்றாள் சௌமியா.

``நீ சொன்னது சரி'' என்றாள் காயத்திரி.

# 6

காலை எட்டு மணிக்குக் காண்டீபனும் நண்பர்கள் மூவரும் ஒரு ஆடம்பரமான மோட்டார் வண்டியில் வந்திறங்கினர். மூவரும் சௌமியாவுடன் பணி புரியும் வைத்தியர்கள்.

‘‘வாருங்கோ’’ மிகுந்த மகிழ்வுடன் வரவேற்றாள் சௌமியா.

நால்வரும் வீட்டினுள் வந்தனர். காண்டீபன் முன்பு அங்கு ஒருமுறை வந்துள்ளான். அப்போது வீடு அரைகுறையாக இருந்தது. காண்டீபனுடன் வந்த அருணன், கஜேந்திரன், குருபரன் ஆகிய மூவரும் வீட்டை வியப்புடன் பார்த்தனர்.

மிகமிக அழகான மாடிவீடு. நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்டிருந்ததோடு மனதைக் கவரும் எளிய வர்ணங்கள் பூசப்பட்டிருந்தது.

‘‘தகப்பனைச் சிறுவயதிலேயே சௌமியா இழந்தவள். வீடும் கட்டி முடிக்கப்படாது அரைகுறையாக இருக்கிறது. சீதனத்தையும் எதிர்பார்க்க முடியாது என்றவன். வீட்டையும் வீட்டை அலங்கரிக்கும் தளபாடங்களையும் பார்த்தால் இரண்டு மூன்று பேர்

வெளிநாட்டில் இருப்பதைப் போலல்லவா இருக்கிறது'' என்ற எண்ணினான் அருணன்.

''அழகான வீடு. கவர்ச்சியாக அலங்கரிக்கப்பட்டுள்ளது.சுவருக்குப் பூசப்பட்ட வாண்ங்கள் மிகமிகப் பொருத்தமாக இருக்கிறது. உங்களின் திட்டமிடல் பிரமாதம்'' என்றான் கஜேந்திரன்.

அழகான மென்மையான சோபா ஒன்றில் மூவரும் அமர்ந்தனர்; ''அதன் பெறுமதி ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேல் இருக்கும். அதோடு சௌமியா வைத்தியர். இதை விட வேறு என்ன வேண்டும்'' என்று நினைத்தவாறு வீட்டை மீண்டும் பார்த்தான் குருபரன். அவனுக்கு அவ்வீடு நன்றாகப் பிடித்திருந்தது.

''வாருங்கோ சாப்பிட்டு விட்டுப் பேசுவோம். பேசிவிட்டுச் சாப்பிட முடியாதென்று நினைக்கிறன்.'' என்று சிரித்தாள் சௌமியா.

சாப்பாட்டு மேசை மிகவும் அழகாக இருந்தது; ''அழகான மேசை, அழகான கதிரைகள். இதை எங்கே வாங்கினீர்கள்? இதைப் போல நானும் ஒன்று வாங்க வேண்டும்'' என்றான் குருபரன்.

“கடையில் வாங்கவில்லை. கணேசன் மாமாவின் ஆசாரியைக் கொண்டு செய்வித்தனாங்கள். இதன் வடிவமைப்பைச் செய்தது சித்தி காயத்திரி. நாங்கள் செய்து ஒரு வருடமாகிறது. இதைப் போல பத்து மேசையும் கதிரைகளையும் செய்து கொடுத்திருக்கிறார் ஆசாரி.’’ என்றாள் சௌமியா.

அதன் பின் தான் கஜேந்திரன் மேசையையும் கதிரைகளையும் பார்த்துவிட்டு அதன் அழகில் மெய் மறந்து போனான்; “சௌமி, எனக்கும் ஒன்று செய்வித்துத் தா. வீட்டில் உள்ளதைத் தங்கைக்குக் கொடுப்போம்.’’ என்றான்.

தலைவாழை இலைகள் நான்கை எடுத்து மேசையில் போட்டு விட்டு இடியப்பத்தை எடுத்து நான்கு இலைகளிலும் வைத்து விட்டுச் சௌமியா சொன்னாள்; “சம்பிரதாயத்திற்காக இலையைப் போட்டு மூன்று மூன்று இடியப்பங்கள் வைத்துள்ளேன். பருப்பு இருக்கு, சொதி இருக்கு தேவையானவற்றை எடுத்துச் சாப்பிடுங்கள்.’’ என்று கூறிவிட்டுத் தானும் ஓர் இலையை எடுத்து இடியப்பத்தை எடுத்து வைத்துச் சொதியுடன் உண்ணத் தொடங்கினாள் சௌமியா.

‘‘சொதி, சாம்பார், சம்பல், பருப்பு யாவும் நல்ல சுவையாக இருக்கு. யார் செய்தது?’’ என்று கேட்டான் அருணன்.

‘‘வழக்கமாக அம்மாவும் சித்தியும் செய்யிறவை. இண்டைக்கு நான் செய்தனான்’’ என்றாள் சௌமியா.

மல்லிகா ஒரு பாத்திரத்தில் தேநீர் கொண்டு வந்து ஐந்து பாத்திரங்களில் ஊற்றி ஒவ்வொருவருக்கும் எதிரில் வைத்தாள்.

காயத்திரி பல வகையான மாம்பழங்களினது தோலைச் சீவி அவற்றை அளவான துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் இட்டுக் கொண்டு வந்து வைத்தாள். இன்னொரு பாத்திரத்தில் சுத்தஞ் செய்யப்பட்ட பலாச் சுளைகளைக் கொண்டு வந்து வைத்தாள். அதன் மேல் தேன் ஊற்றப்பட்டிருந்தது. மல்லிகா கதலி, கப்பல், இதரை வாழைப்பழச்சீப்புகளைக் கொண்டு வந்து வைத்தாள். அப் பழங்கள் அளவில் பெரியதாகவும் நன்கு கனிந்தவையாகவும் இருந்தன.

‘‘எல்லாம் எமது வீட்டில் உற்பத்தியானவை. கலப்பட மற்றவை. இரசாயன உரம் போடாதவை. மருந்து தெளிக்கப்படாதவை. பயமில்லாமல் சுவைக்கலாம்’’ என்றாள் சௌமியா.

குருபரன் அவற்றை ஆச்சரியமாகப் பார்த்தான்.

‘‘சாப்பிட்டு முடிந்ததும் அப்பா எமக்காகச் சேமித்த சொத்தைக் காண்பிக்கிறேன்.’’ என்றாள் சௌமியா.

‘‘வீட்டில் ஐந்து இடியப்பங்கள் தான் சாப்பிடுவேன். இங்கே பத்துச் சாப்பிட்டு விட்டேன். அதை விட பழங்களும் சாப்பிட்டுத் தேனீரும் குடித்து விட்டேன். இரண்டு நாட்களுக்குக் காலைச் சாப்பாட்டைக் குறைக்க வேண்டும்.’’ என்றான் கஜேந்திரன்.

‘‘உண்மையில் நன்றாகத் தான் இருக்கு. வைத்தியரான உனக்கு நன்றாகச் சமைக்கவும் தெரியமா..?’’ என்று ஆச்சரியப்பட்டான் அருணன்.

‘‘வெளிக்கோலில் அனைவரும் வந்தமர்ந்தனர். கோலின் ஒரு மூலையில் சிட்டுக் குருவிகளின் கூடு இருந்தது. மறுமூலையில் வர்ண வர்ண மீன்களின் தொட்டியிருந்தது; ‘‘அழகான வீடு. ரம்மியமான சூழல்’’ என்றான் குருபரன்.

‘‘எல்லாம் அம்மாவுடைய கைவண்ணம். அம்மா அழகாகத் தைப்பா. அப்பாவை இழந்த பின்பு அவா தையல் வேலை செய்தே என்னை வளர்த்தா. எனது பொழுதுபோக்கிற்காகவும், தனது நிம்மதிக்காகவும் இவற்றை வளர்த்தா. இவற்றைப் பார்ப்பதற்காக எனது

நண்பிகள் பலர் வருவார்கள். ஊர்ப் பிள்ளைகளும் வருவார்கள். ஊர்ப் பிள்ளைகளுக்குப் பாடமும் அம்மா சொல்லிக் கொடுப்பா. பிள்ளைகள் இவற்றை ஆவலோடு பார்ப்பதைப் பார்த்து அம்மா சந்தோசப்படுவா..'' என்றாள் சௌமியா.

''சரி அம்மா இப்படி இருங்கோ, நாங்கள் வந்த விடயத்தைக் கூறுகிறோம்.'' என்றான் கஜேந்திரன்.

மல்லிகா அவர்களின் எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

''காண்டீபனின் தகப்பனார் கூறியவற்றைச் சௌமியா உங்களுக்குக் கூறியிருப்பா. அதனால் அவற்றை விட்டு விட்டு இனி நடக்க வேண்டியவற்றைப் பேசுவோம்.'' என்றான் கஜேந்திரன்.

''தம்பி நீங்கள் படித்தவர்கள். சமூகத்தைப் பற்றி அறிந்தவர்கள். ஒரு திருமண நிச்சயதார்த்தம் என்றால் பெண்ணின் பெற்றோர், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் என்று பலர் கூடியிருத்தல் வேண்டும். அது போலவே ஆண்கள் பகுதியில் இருந்தும் சகல உறவுகளும் வரல் வேண்டும். இதை விட்டு விட்டு நண்பர்கள் மூவர் வந்திருக்கிறீர்கள். நாளைக்கு ஒரு நன்மை தீமை நடந்தால் நான் யாரிடம் கூறி மனஆறுதல் அடைவது. கஜேந்திரன் மேற்படிப்புக்காக அடுத்த மாதம்

லண்டனுக்குப் போகிறான். அருணனுக்குக் கொழும்புக்கு இடமாற்றம் வந்துள்ளது. இந்த நிலையில் நான் யாரை நம்பிப் பெண் கொடுப்பது. நான் காதலித்ததற்குத் தண்டனையாக முப்பது வருடங்கள் பெருந் துன்பப்பட்டேன். அவ் வேளைகளில் எனது கணவனின் பெற்றோரும் உறவினர்களும் உதவினர். பெரும் பெரும் துன்பப்பட்ட போதெல்லாம் எனது பெற்றோரோ உறவினர்களோ உதவவில்லை. இது எவ்வளவு துன்பமானது என்று அனுபவித்த எனக்குத் தான் தெரியும். இதே துன்பங்கள் தான் சௌமியாவுக்கு ஏற்படும். அதை நான் விரும்பவில்லை. எமது சமூகத்தைப் பொறுத்தவரை காதலுக்கு அங்கீகாரமில்லை. பணக்கார இடமாகவும், பெருந் தொழிலுள்ளவர்களாக இருந்தாலும் பெரும்பாலும் எதிர்ப்புத் தான் உண்டாகும். பல இடங்களில் அவ் எதிர்ப்புக்கள் திருமணமாகிச் சில மாதங்களில் அல்லது வருடங்களில் நீங்கி விடும். அந்தஸ்து, சாதி, தகுதி என்பன இறக்கும் வரை நீங்காதிருந்து தொல்லை தரும்'' என்று கூறிய மல்லிகா எதிரே இருந்த ரீப்போவில் இருந்த தண்ணீர்ப் போத்திலை எடுத்துத் தண்ணீரைக் குடித்தாள்.

''எமது சமூகத்தில் ஒரே சாதியாக இருந்தாலும் தகுதி பார்ப்பார்கள். வடக்கில் இருப்போர் தெற்கில் இருப்பவர்கள் தம்மை விடக் குறைந்தவர்கள் என்று

நினைப்பார்கள். அப்படியே தெற்கில் இருப்போரும் நினைப்பார்கள். அதை விடச் சாதி பார்ப்பார்கள். சாதி பார்க்கும் போது சம்பந்தப்பட்ட இரு குடும்பங்களைப் பற்றியும் பார்ப்பதில்லை. அந்தக் குடும்பங்களின் உறவுகள் திருமணம் செய்த இடங்களையும் பார்ப்பார்கள். மாதவனின் தங்கை சாதியில் குறைந்த குடும்பத்தவனைக் கலியாணம் செய்து விட்டாராம். மாதவனின் தங்கையின் புரிசனின் சகோதரி தான் சாதியில் குறைந்தவனுடன் சென்றது. அதற்கு மாதவனோ அல்லது அவரது குடும்பத்தினரோ காரணம் இல்லையே. அதற்காக எனது பெற்றோர் என்னைச் சேர்க்கிறார்களில்லை. அதனால் நான் பட்ட கஷ்டங்கள் போதும். எனது கணவன் கோடிக்கணக்கில் சொத்தைச் சேகரித்து வைத்துள்ளார். அதனால் நான் பட்ட கஷ்டத்தை அவள் படக்கூடாது. அதனால் நீங்கள் வேறெங்காவது பெண் பாருங்கோ. இது எனது விருப்பம். இதை மிஞ்சி சௌமியா ஆசைப்பட்டால் செய்யட்டும். ஏனென்றால் அவர் உயிரோடு இருக்கும் போது தனது பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டுமென்று திட்டமிட்டவர். அதன் படி தான் நான் செயற்பட்டு வருகிறேன்'' என்றாள் மல்லிகா.

யாரும் எதுவும் பேசவில்லை. அவர்கள் பேசமுடியாது வாயடைத்துப் போயிருந்தனர்.

“நான் காண்டீபனைக் காதலிக்கவில்லை. காண்டீபனை அல்ல வேறு யாரையும் காதலிக்கவும் மாட்டன். அதற்காகக் காண்டீபனைக் கெட்டவர் என்றும் சொல்லவில்லை. நல்லவர். குடும்பப் பொறுப்புள்ளவர். என்னைப் போலத் தகப்பன் இல்லாதிருந்தால் நான் விரும்பிச் செய்திருப்பேன். சமூகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சிக்காது வரட்டுக் கொள்கைகளுக்காட்பட்டிருக்கும் ஒரு பிற்போக்கு வாதியின் குடும்பத்தில் இணைய நான் ஒருபோதும் தயாரில்லை. நான் பட்ட துன்பங்கள் போதும். இனியும் துன்பப்பட நான் தயாரில்லை.” விம்மினாள் சௌமியா. அவளால் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அருணனும் குருபரனும் கஜேந்திரனும் அதை எதிர்பார்க்கவில்லை. படிக்கும் போதும், வேலை செய்யும் போதும் பட்டாம் பூச்சியைப் போலச் சிறகடித்துப் பறந்தவள். அக் காலத்தில் எதற்கும் கவலைப்படாது எந் நேரமும் கதைத்துச் சிரிப்பவள். அப்படியானவள் பெருங்குரலெடுத்து அழுவதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

“சௌமி, எங்களை மன்னித்துக் கொள். காண்டீபன் படும் துயரத்தைத் தாங்க முடியாததால் தான் நாம் வந்தோம். நீயும் உனது தாயாரும் நினைப்பது சரி. உன்னால் காண்டீபனது குடும்பத்தவரின் செயல்களைத்

தாங்க முடியாது. நீ இன்னொருவனைச் செய்வது தான் பொருத்தமானது” என்றான் கஜேந்திரன். அவன் சொன்னதை நம்பாது அவனை நிமிர்ந்து பார்த்தாள் சௌமியா. அவனது கன்னங்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

# 7

ஓர் துணிவுள்ள பணக்கார ஆணால் கூடத் தாங்க முடியாத வேதனைகளையும் சோதனைகளையும் தாண்டித் தனது கணவனின் இலட்சியத்தை நிறைவு செய்த அந்த அபலைப் பெண்ணான மல்லிகாவைப் பரிவுடன் பார்த்தான் கஜேந்திரன். அவனது தாயும் தந்தையும் வைத்தியர்கள். அதனால் அவன் எந்தத் துன்பத்தையும் ஒரு போதும் கண்டதில்லை. ஆனால் துன்பச் சூழலுக்குள் தினமும் சிக்கி அல்லோல கல்லோலப்பட்ட அப் பெண்ணின் சாதனையை நினைத்து அதிசயப்பட்டான். தான் அவர்களுக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அன்பே வடிவான பண்பே உருவான அத் தாயின் செயல்கள் ஒவ்வொன்றும் அவனுக்குப் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. வீடு நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்டிருந்தது. ஓர் ஆணாலேயே இவ்வளவு அழகாகவும் கச்சிதமாகவும் ஒரு வீட்டைக் கட்ட முடியாது. சௌமியாவின் வீட்டைப் பார்த்த பின் தனது தகப்பனால் கட்டப்பட்ட வீட்டை நினைத்துப் பார்த்தான். இரண்டுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது; ‘‘அப்பாவையும் அம்மாவையும் அழைத்து வந்து இந்த வீட்டைக் காட்ட வேண்டும்’’ என்று நினைத்துக் கொண்டான்.

சௌமியா தனது நிலை பற்றி ஏற்கனவே மூவருக்கும் சொல்லியிருந்தாள். இருப்பினும் அவற்றை ஒரு பொருட்டாகக் கஜேந்திரன் எடுத்துக் கொள்ளவில்லை; ‘‘கதைக்கும் போது கண்டபடி கதைப்பார்கள். பின் செயலாற்றும் போது நிதானமாகச் சிந்தித்து நடப்பார்கள். காண்டீபன் வைத்தியன். ஆகையால் சம்மதிப்பார்கள் என்ற நினைவுடன் வந்த கஜேந்திரனுக்குத் திருமணத்தைப் பற்றிப் பேச மனம் வரவில்லை. காண்டீபனின் குடும்பத்தினரால் சௌமியா வாழ்நாள் முழுவதும் துன்பப்படுவாள். பிறந்த நாள் தொடக்கம் துன்பப்பட்ட சௌமியாவும் தாயும் இனித் துன்பப்படக் கூடாது’’ என்று நினைத்தான்.

அவர்களின் பேச்சைக் கேட்ட பின்பு குருபரனால் யோசிக்கக் கூட முடியவில்லை; ‘சௌமியா பாவம்’ என்று கஜேந்திரனைப் போலவே நினைத்தான்.

அருணன் வெகுநேரமாக யோசித்து விட்டுச் சொன்னான்; ‘‘அம்மா கூறியவையெல்லாம் உண்மை. காதலிக்கும் ஆண், பெண்ணின் கவர்ச்சியைத் தான் முதலில் பார்ப்பான். அவளது அழகு தான் அவனை முதலில் கவர்ந்திழுப்பது. நாளாக நாளாக கவர்ச்சி குறையும். அப்போது தான் குடும்பத்தின் நிலையை உணர்வார்கள். ஆனால் காண்டீபனைப் பொறுத்தவரை சௌமியா மீதுள்ள அன்பு குறையவில்லை. அது நாளுக்கு நாள் பெருகி வளர்கிறது. இருந்த போதும் சௌமியா எனது சகோதரியாக இருந்தால் நான் கடைசி வரையும் காண்டீபனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுக்கமாட்டேன்’’

காண்டீபன் இதை எதிர்பார்க்கவில்லை. சற்று அதிர்ச்சிக்குள்ளானான். இதை அவதானித்த அருணன் சொன்னான்; ‘‘நாங்கள் படித்தனாங்கள். சமூகத்திற்கு முன் மாதிரியாக நடக்க வேண்டும். நீ சௌமியாவை விரும்புகிறாய். ஆனால் சௌமியா உன்னை விரும்பவில்லை. நீயும் உனது குடும்பத்தினரும் சௌமியாவின் நிலையை உணர்ந்து விட்டுக் கொடுத்து நடத்தல் வேண்டும். சௌமியாவின் குடும்பம் காதலால்

மிகவும் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டுள்ளது. அதே தண்டனையைத் திரும்பவும் பெற அவர்கள் தயாரில்லை. காதல் என்பது உணர்வுகளோடு அடங்கி விடுவதில்லை. அது வாழ்க்கையாக மாறினால் ஆயிரங் காலத்துப் பயிர். இன்று உனது தந்தையும் தாயும் சகோதரர்களும் உறவினர்களும் இங்கு வந்திருக்க வேண்டும். உனது தந்தைக்குப் பயந்து அவர்கள் வரவில்லை. பயம், பலாத்காரம், கொடுமை அல்ல வாழ்க்கை. அன்பு, பண்பு, பொறுமை தான் வாழ்க்கை. இதை உணராவிட்டால் வாழ்க்கை ஒரு போதும் சிறக்காது. அதனால் பாவப்பட்ட இந்தத் தாய்க்கு ஆலோசனை கூற முடியாது'' என்றான்.

காண்டீபன் எதுவும் பேசவில்லை; ''காண்டீ, ஆறுதலாக இருந்து யோசித்துப்பார். சௌமியா உன்னை நம்பி எப்படி உன்னுடன் வருவது. வீட்டுக்கு வரும் மருமகளை மகாலட்சுமி என்பார்கள். அதனால் மகாலட்சுமிக்குக் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் வீட்டுக்கு மருமகளாக வாறவளுக்கு கொடுத்தல் வேண்டும்.'' என்றான் கஜேந்திரன்

சில நிமிடங்கள் யாரும் பேசவில்லை. அதனால் சௌமியா சொன்னாள்; ''முதல் முதலாக வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். எமது வீட்டத்தோட்டத்தைப் பார்க்கலாம் வாருங்கள்'' என்றாள்.

நால்வரும் எழுந்து முற்றத்திற்கு வந்தனர். மதிலோரத்தில் விதம் விதமான குரோட்டன்கள் நின்றன. சாடிகளில் பல வகை ரோஜாச் செடிகள் பூத்துக் குலுங்கியபடி நின்றன. அவற்றின் அருகே பல நிறங்களான செவ்வரத்தைகள் நின்றன. முற்றமெங்கும் பூக்கன்றுகள் பூத்துச் சிரித்தன.

‘‘அழகான பூச்செடிகள். ஒரு பூந்தோட்டத்தில் நிற்பதைப் போன்ற பிரமை உண்டாகிறது’’ என்றான் கஜேந்திரன்.

‘‘இது எனது அம்மாவின் கைவண்ணம். எனது முயற்சி எதுவும் இல்லை. இதனால் நாம் மாதாந்தம் இருபத்தையாயிரம் ரூபா வரை பெறுகிறோம்.’’ என்றாள் சௌமியா.

எப்படி என்று கேட்பது போல் கண்களை மேலே உயர்த்தினான் கஜேந்திரன்.

‘‘திருமணம், சாமத்தியச்சடங்குகளின் போது மிக்ஸ்சிங் செய்ய இங்கே பலர் வருவார்கள்’’ என்றாள் சௌமியா.

பூக்கன்றுகளைப் பார்த்து விட்டு வீட்டின் பின்பக்கம் நால்வரும் வந்தனர். அந்தப் பகுதி பெருங் காடு போல இருந்தது. மதிலோரம் முழுவதும்

தென்னைகள் நின்றன. அதற்கடுத்து வரிசையாகக் கமுக மரங்கள் நின்றன; ‘‘தென்னை மரங்கள் எத்தனை உண்டு’’ என்று கேட்டான் அருணன்.

‘‘தென்னை மரங்கள் ஐந்நூறு உண்டு. கமுகு மரங்கள் ஆயிரம் உண்டு. அதை விட மா, பலா, தோடை, திராட்சை எனப் பல வகையான பழமரங்கள் உண்டு. சென்ற வாரம் முதிர்ந்த பத்துத் தேக்கமரங்களை முப்பது இலட்சரூபாவிற்கு விற்றோம். இதைப் பராமரிக்க ஐந்து கூலியாட்கள் உள்ளனர்.’’ என்றாள் சௌமியா. அவளது குரல் கரகரத்தது.

‘‘என்ன… என்ன நடந்தது?’’ என்று கேட்டான் அருணன்.

சில நிமிடங்கள் சௌமியா பேசவில்லை. பின் சொன்னாள்; ‘‘தேடுவாரற்றுக் கிடந்த தரிசு நிலத்தை அப்பா வாங்கித் திட்டமிட்டு மரங்களை நட்டுப் பராமரித்தார். அவை பயன் தருவதைப் பார்க்க அவரால் முடியவில்லை’’ என்று விம்மினாள் சௌமியா.

‘‘மாதா மாதம் மூவாயிரம் தேங்காய் விற்போம். பத்தாயிரம் பாக்குகள் விற்போம். இப்படி அப்பா நட்ட மரங்களின் உற்பத்திகளை விற்றுத் தான் ஆடம்பரமான மாளிகை கட்டினோம். அப்பா என்னை வைத்தியராக்க

வேண்டுமென்றவராம். அவள் வைத்தியரான பின் நான் விலை கூடிய கார் ஒன்று வாங்கிக் கொடுப்பேன். அவள் அதில் தான் வேலைக்குப் போக வேண்டும்'' என்றவராம். விம்மி விம்மி அழுதாள் சௌமியா. அவளின் அழுகை நிற்க வெகுநேரம் சென்றது.

''அப்பாவின் ஆசைகள் அனைத்தையும் அம்மா ஒவ்வொன்றாக நிறைவேற்றி வாறா. இப்போ இருபத்தைந்து இலட்ச ரூபாவுக்குப் புதிதாக ஒரு கார் வாங்கப் போகிறோம்'' என்று கூறிவிட்டு விக்கி விக்கி அழுதாள் சௌமியா. யாருக்கும் ஆறுதல் கூறத் தோன்றவில்லை.

பின்பக்கத்தில் இருந்த தொட்டிக்குள் நீரை மொண்டு முகத்தைக் கழுவி விட்டுத் துடைத்த சௌமியா. மகிழ்வுடன் சிரித்தாள். பின்பு; ''என்ரை சோகக் கதையைச் சொல்லி உங்களையும் கலங்க வைத்து விட்டேன். வாருங்கள் போவோம்'' என்றாள்.

அப்போது வெள்ளை நிறமுள்ள ஆடம்பரமான கார் ஒன்று வந்து முற்றத்தில் நின்றது. அதிலிருந்து இறங்கிய கணேசன்; ''சௌமி, நீ விரும்பிய காரைக் கொழும்பிலிருந்து கொண்டு வந்து விட்டேன்'' என்றவாறு காரின் சாவியை நீட்டினார்.

சௌமியா உடனே அவரது பாதங்களைப் பணிந்தாள். பின்பு எழுந்து சாவியை வாங்கித் தாயிடம் கொடுத்தாள்.

“இவர் கணேசன் மாமா. அப்பாவின் உயிர் நண்பன். எங்களுக்கு எல்லாம் இவர் தான்” என்றாள்.

கஜேந்திரன் சௌமியாவைப் பார்த்தான். சிறிது நேரத்திற்கு முன்பு கறுத்துச் சுருங்கியிருந்த முகம் பூரிப்பால் சிவந்திருந்தது; “இவ்வளவு மகிழ்வோடு இருக்கும் இவள் காண்டீபனைத் திருமணம் செய்யக் கூடாது” என்று நினைத்தான்.

அவர்கள் புறப்படத் தயாரானார்கள். சௌமியா காண்டீபனுக்கு அருகில் வந்து சொன்னாள்; “உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கு. அன்பானவர், பண்பானவர், இந்த நற்குணங்கள் பாராட்டுப் பெற உதவுமே தவிர வாழ்க்கைப்பட உதவாது. உங்களை உங்கள் குணத்திற்காக விரும்புகிறன். ஒரு சகோதரனாக. குறை நினைத்துக் கொள்ளாது வீட்டார் விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்து மகிழ்வுடன் வாழுங்கள்” என்றாள்.

அவள் பேசுவதைக் கேட்ட மூவரும் மெல்ல விலகினர்.

“சௌமி, உன்னைக் கண்ட நாள் முதல் உன் நினைவாகவே நான் வாழ்கிறேன். அது உனக்குத் தெரியும். இருந்த போதும் நீ என்னை விரும்பவில்லை. அது உனக்கு வந்த சோதனைகளால் உண்டான தன்மை. அதனால் நான் குறை நினைக்கவில்லை. அத்துடன் உன்னை வற்புறுத்தவும் மாட்டேன். என்ன செய்வது விதிப்படி நடக்கட்டும்” என்று கூறிவிட்டு நடந்தான். அவனது நெஞ்சுக்குள் பிரளயம் நடந்தது. சௌமியா அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவனை நினைக்கப் பாவமாக இருந்தது. அதற்காக பரிதாபப்பட்டால் தனது வாழ்வும் தாயாரின் நிம்மதியும் கெட்டுவிடும் என்று நினைத்தவாறு வீட்டுள்ச் சென்றாள்.

“நாளைக்கு நல்ல நாளம்மா. கார் பழகலாம்” என்றார் கணேசன்.

“சரி மாமா” என்றாள் சௌமியா. அவளின் மனம் பொங்கிப் பூரித்தது.

# 8

அன்று சௌமியாவின் வீட்டிற்குக் கஜேந்திரனின் தந்தை ஏகாம்பரமும் தாய் மங்களம்மாளும் வந்திருந்தனர். இருவரும் வைத்தியர்கள். அவர்களிருவரும் சௌமியாவுடன் வேலை செய்பவர்கள். சௌமியா நல்ல அழகி மட்டுமல்ல. நல்ல குணமுள்ளவள். பொறுமைசாலி, நோயாளர்களுடன் அன்பாகவும் மதிப்புடனும் உறவாடுபவள். சக ஊழியர்களை மதித்துப் பழகுவாள். அவளை மங்களம்மாளுக்கு மிகவும் பிடிக்கும். வீட்டுக்கு வந்தால் அவள் ஏகாம்பரத்தோடு சௌமியாவைப் பற்றி ஓயாது கதைப்பாள்.

காண்டீபனும் மிகவும் நல்லவன். அதனால் அவன் சௌமியாவுக்கு நல்ல கணவனாக இருப்பான் என எண்ணினாள். அதன் பின் நடந்த சம்பவங்களைப் பற்றி விபரமாகக் கஜேந்திரன் கூறிய பின் சௌமியாவில் உள்ள மதிப்பு பல மடங்கு அதிகரித்தது.

வேலைத்தலத்தில் சக ஊழியர்களோடு பழகுவதைப் போலவே ஆரம்பத்தில் மங்களம்மாள் சௌமியாவோடு பழகி வந்தாள். காலப்போக்கில் அவள் பழகிய விதத்தில் மிக்க விருப்பங் கொண்டு அவளைத் தனது மகளென்று சொல்வாள். அதனால் அடிக்கடி சௌமியா அவர்களின் வீட்டுக்குச் செல்வாள். சில

சமயங்களில் அவள் மங்களம்மாளின் வீட்டில் இரவில் தங்கியும் விடுவாள்.

மங்களம்மாள் ஒரு நாளைக்குச் சௌமியாவின் வீட்டுக்குச் செல்ல வெண்டுமென்று தினமும் நினைப்பாள். அவளுக்கு நேரமுள்ள போது ஏகாம்பரத்திற்கு நேரமிராது. ஏகாம்பரத்திற்கு நேரமுள்ள போது மங்களம்மாளுக்கு நேரமிராது. அதனால் இருவரும் சேர்ந்து செல்வது சரிப்பட்டு வராது என்று உணர்ந்த மங்களம்மாள் தனித்துச் செல்ல விரும்பினாள். அதை ஏகாம்பரம் விரும்பவில்லை. அவர் அன்று விடுப்பு எடுத்து நின்று சௌமியாவின் வீட்டுக்கு வந்தார். அவரின் மனதில் கஜேந்திரன் கூறிய சொற்கள் வலியை உண்டாக்கின.

“அப்பா, சௌமியாவைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை என்று எண்ணாதீர்கள். அவள் மென்மையானவள். பூவைப் போன்ற மனமுள்ளவள். பழகுவதற்கு இனியவள். ஆனால் நாம் யாரும் எதிர்பாராதளவு துணிவுள்ளவள். எச் செயலையும் நன்கு திட்டமிட்ட பின்பே செய்பவள். எதிர்காலத்தைக் கணித்து வைத்திருப்பவள். திடமான மனமுள்ளவள். ஏழெட்டு வருடங்களாகக் காண்டீபன் அவளை விரும்பிய போதும் அவள் விரும்பவில்லை. தனக்கென ஒரு கொள்கையை வகுத்து அதன்படி வாழ்ந்து வந்தாள். அதற்குக் காரணம் அவளது தாய் தான். எந்தச் சலனமோ, விருப்பு வெறுப்போ இல்லாமல்

மகிழ்வுடன் சிரித்துச் சிரித்து தனது எண்ணத்தைக் காண்டீபனுக்கு வெளிப்படுத்தினாள். காண்டீபன் மிகவும் துன்பப்பட்டுத் தன் நிலை இழந்த போதும் சௌமியா பதட்டப்படவில்லை, இரக்கப்படவில்லை. அவள் ஒரு இரும்புப் பெண்.''

தன் எதிரே இருந்து தன் மனைவியுடன் மகிழ்வுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும் சௌமியாவை நிமிர்ந்து பார்த்தார் ஏகாம்பரம். கஜேந்திரன் சொன்னது போல அவளின் முகத்தில் மகிழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை. கஜேந்திரன் சொன்னவை யாவும் உண்மையென வந்த ஒரு சில நிமிடங்களில் புரிந்து கொண்டார் ஏகாம்பரம்; ''சௌமியா நல்ல அழகி. திறமைசாலி. பண்புகள் அனைத்தும் உள்ள வைத்தியர். எம்மைத் தமது பெற்றோரைப் போல மதிப்பவள். அப்படியானவளை ஏன் கஜேந்திரனுக்குச் செய்து கொடுக்கக் கூடாது'' என்று எண்ணினார். அதைத் தனது மனைவியிடம் வெளியிட்டார். அவள் சொன்னாள்; ''சௌமியாவைக் கண்ட முதல் நாளே என்னை அவள் கவர்ந்து விட்டாள். நாளடைவில் எனது மனதில் அவ்வெண்ணம் துளிர்க்கத் தான் செய்தது. அதைக் கஜேந்திரனுக்குச் சொன்ன போது அவன் சொன்னான்; ''சௌமியாவைத் திருமணஞ் செய்பவன் பாக்கியசாலி. அப் பாக்கியசாலியைச்

சௌமியா தெரிவு செய்து விட்டாள். காண்டீபனுக்குச் சௌமியா மீது எல்லைகளற்ற காதல். அவளும் விரும்புகிறாள்'' என்றான். அதனால் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன். இப்போ சௌமியா காண்டீபனைக் காதலிக்கவில்லையென்று தெளிவாகத் தெரிகிறது. அதனால் கேட்டுப் பார்க்கலாம்'' என்றாள் மங்களம்மாள்.

காலையில் அவர் சௌமியாவின் வீட்டுக்குச் செல்லுமுன் கஜேந்திரனை அழைத்துக் கேட்டார்; ''நீ சௌமியாவைத் திருமணம் செய்தாலென்ன? அம்மாவுக்கும் எனக்கும் விருப்பம். சீதனம் எதுவும் தேவையில்லை. உனக்கு விருப்பமென்றால் நான் சௌமியாவின் தாயாருடன் கதைக்கிறேன்.''

''எனக்குச் சௌமியாவைச் செய்ய நல்ல விருப்பம். ஆனால் காண்டீபன் எமது இரத்த உறவினன். அத்துடன் நல்ல நண்பன். அதனால் பிரச்சினைகள் எதுவும் வரலாம். பொறுத்துக் கொள்ளுங்கோ கொஞ்ச நாட்கள் போகட்டும்'' என்றான் கஜேந்திரன்.

சௌமியா தேநீர் கொண்டு வந்து ஏகாம்பரத்திற்கு நீட்டியபடி சொன்னாள்; ''அங்கிள் உங்களுக்குச் சீனி போடவில்லை. அன்ரிக்கு மெல்லிசாய்ப் போட்டிருக்கிறன்.'' ''ம்'' என்று பெருமூச்சு விட்டு விட்டு ஏகாம்பரம்

சொன்னார்; “வீட்டில் தான் இந்தச் சோதனையென்றால் வந்த இடத்திலுமா…..”

“எங்கும் இதே நிலை தான்.” என்றாள் மங்களம்மாள்.

“சௌமி சரியான கட்டுப்பாடுடையவள். என்னையும் கண்ட கண்ட உணவுகளை உண்ண அனுமதிக்கமாட்டாள். ஆசைக்குக் கூடச் சில உணவு வகைகளை உண்ண முடியாது” என அலுத்துக் கொண்டாள் மல்லிகா.

சௌமியா எதுவும் கூறாது உதடு பிரியாது சிரித்தாள். அவளின் சிரிப்பை ரசித்தார் ஏகாம்பரம்.

“உங்களுக்கு ஆட்சேபனையில்லையென்றால் நான் ஒன்றைக் கேட்கலாமா?” என்றாள் மங்களம்மா.

“ஓம் கேளுங்கோ” என்றாள் மல்லிகா.

“சௌமியாவுக்குக் காண்டீபனைச் செய்வதில்லை என்று தீர்மானித்து விட்டீர்கள். இனி என்ன செய்வதாக உத்தேசம்?” என்று கேட்டாள் மங்களம்மாள்.

“காண்டீபனைச் செய்வதில்லையென்று எப்போதோ சௌமி தீர்மானித்து விட்டாள். என்னைப் பொறுத்தவரை

நிம்மதியான வாழ்வு தான் எமக்குத் தேவை. நான் காதலித்தவர் உத்தமமானவர். கடின உழைப்பாளி. நான் காதலித்து விட்டேன் என்பதற்காக எனது பெற்றோரும் அவர்களது உறவினர்களும் எமது குடும்பத்தை ஒதுக்கி வைத்து விட்டனர். அதனால் நாம் பட்ட துன்பங்களுக்கு அளவேயில்லை. அதைப் போல ஒரு துன்பத்தை இனிமேலும் தாங்க எம்மால் முடியாது. உணவில்லாமல் வாழலாம். உதவிக்கு உறவுகள் இல்லாமல் வாழ முடியாது. நான் தகுதி, தராதரம், பணம், பொருளைப் பார்க்கவில்லை. துன்பத்தைத் தவிர வேறு எதையும் அனுபவிக்காத சௌமியா இனி மேல் துன்பப்படக் கூடாது. அதை என்னால் தாங்க முடியாது'' என்று கூறும் போது மல்லிகாவின் கண்கள் கலங்கின. குரல் கரகரத்தது.

''சௌமியா, நீ இதைப் பற்றி என்னம்மா நினைக்கிறாய்?'' என்று கேட்டார் ஏகாம்பரம்.

''அம்மா சொன்னவற்றைத் தான் நானும் சொல்வேன். சிறுவயதில் எனக்குச் சோறு ஊட்டும் போது அம்மா எனக்கு இவற்றைக் கூறுவா. நான் வளர்ந்த பின்பும் சொன்னதையே சொல்வா. நான் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது அம்மா சொன்ன வார்த்தைகள் அதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது நினைவில் வரும். காண்டீபன் எனக்குப் பின்னால்

திரியும் போது அவ் வார்த்தைகள் இடியாகக் காதைத் தாக்கும்; ‘‘மகளே. காதல் புனிதமானது, தெய்வீகமானது. ஆனால் காதல் கொள்ளும் இருவரும் அதை நினைத்தால் போதாது. இருவீட்டாரும் அதை ஏற்க வேண்டும். இல்லாவிட்டால் நரகம் தான். உனது அப்பாவைப் போல உறுதியானவர்களைக் காண முடியாது. பல்கலைக்கழகங்களில் பொழுது போக்கிற்காகவும் காதலிப்பவர்கள் உண்டு. கந்தவனம் அண்ணனின் மகள் சரிதா பல்கலைக்கழகத்தில் தன்னோடு படிக்கும் மாணவனைக் காதலித்தாள். இருவீட்டாரும் அதை எதிர்த்தனர். கல்வி கற்று முடிந்ததும் இருவருக்கும் தொழில் கிடைத்தது. அதனால் இருவரும் பதிவுத்திருமணம் செய்தனர். இதை அறிந்த காதலனின் தந்தை தற்கொலை செய்து கொண்டார். அதன் பின் நடந்தவை, நடப்பவை யாவும் உனக்குத் தெரியும். அதனால் காதலிக்காதே’’ என்றவா. அதைத் தான் நான் பேணி வருகிறேன். எனக்கென்று எந்த ஆசையும் இல்லை. ஏனென்றால் நான் ஆசைப்பட்ட எதையும் அம்மா நிறைவேற்றாது விட்டதில்லை. அது போல அம்மா எனக்குப் பொருத்தமான மாப்பிளையைத் தெரிவு செய்து தருவா’’ என்ற சௌமியா மகிழ்வுடன் சிரித்தாள்.

‘‘அத்துடன் எம்மோடு எனது சித்தியும் இருக்கிறா. அவா எட்டு வருடங்கள் இயக்கத்தில் சேர்ந்து

போராடியவா. பின்பு புனர்வாழ்வு பெற்று விடுதலையாகியுள்ளா. அதனால் அவாவை விசாரிக்க அடிக்கடி இராணுவத்தினர் வீட்டுக்கு வருவார்கள். இதுவும் காண்டீபனின் பெற்றோருக்கு விருப்பமில்லை. சித்தியை வீட்டை விட்டு அனுப்பினால் தான் திருமணம் பற்றிப் பேச முடியும் என்று காண்டீபனின் தந்தையார் விடாப்பிடியாக இருக்கிறார். சித்திக்கு எம்மைத் தவிர வேறு யாரும் இல்லை. அவரை எங்கே அனுப்புவது. இயக்கம் ஆட்சியில் இருந்த போது காண்டீபனின் தந்தை இயக்கத்தின் பெரும் ஆதரவாளர். கூட்டங்களிலெல்லாம் உயிர்த்துடிப்புடனும் உணர்ச்சி வசப்பட்டும் பேசியவர். அவரது பேச்சைக் கேட்டே பலர் இயக்கத்தில் இணைந்தனர். இப்போ இயக்கம் அழிந்தவுடன் இயக்கத்திற்கு எதிராகப் பேசுகிறார். இது எந்த வகையில் ஞாயம்?'' என்று கேட்டுவிட்டு நிறுத்தினாள் சௌமியா.

ஏகாம்பரத்தால் பதில் கூற முடியவில்லை. சௌமியா உள்ளதைச் சொல்கிறாள். அதற்கு விடையே இல்லை. அப்படி இருக்க எப்படிப் பதில் கூற முடியும். ஏகாம்பரம் சற்றுக் குழம்பிப் போனார்.

‘‘உங்களுக்குத் தெரிந்த இடத்தில் சௌமியாவுக்குப் பொருத்தமான மாப்பிளை இருந்தால் கூறுங்கள். எனக்குப் பிறசர் இருக்கு. பயமாக இருக்கு.

சௌமியா திருமணம் செய்து சில காலங்கள் மகிழ்வுடன் இருப்பதை நான் பார்க்க வேண்டும்’’ என்றாள் மல்லிகா.

ஏகாம்பரம் தனது மனைவியைப் பார்த்துத் தலையசைத்தார். அதற்கு மங்களம்மாள் வேண்டாமெனத் தலையசைத்தாள்.

இருவரது செயல்களையும் சௌமியா பார்த்தாள். அவளுக்கு எதுவும் புரியாவிட்டாலும் இரகசியமாக எதையோ பேசுகிறார்கள் என்று புரிந்து கொண்டாள். தொடர்ந்து ஏகாம்பரம் சைகையால் எதையோ தெரிவிக்க அதற்கு மங்களம்மாள் மறுப்புத் தெரிவித்துக் கொண்டிருந்தாள். அது ஏகாம்பரத்திற்குச் சற்றுக் கோபத்தை உண்டாக்கியது.

சௌமியா தன்னைப் பார்ப்பதை உணர்ந்த ஏகாம்பரம்; ‘‘கஜன், இந்த வீடு அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது என்றவன். உண்மை தான். அழகாய்த் தான் இருக்கு’’ என்றார் ஏகாம்பரம்.

அப்போது இரைச்சலுடன் ஓர் இராணுவ வாகனம் வந்து நின்றது. அதிலிருந்து மூன்று இராணுவத்தினர் இறங்கினர். சௌமியா எழுந்து அவர்களை நோக்கிச் சென்றாள்.

# 9

ஏகாம்பரம் பரபரப்புடன் எழுந்து இராணுவ ஜீப் நின்ற இடத்தை நோக்கி நடந்தார். அவரின் போக்கில் அதிர்ச்சி காணப்பட்டது.

“நீங்கள் போக வேண்டாம். பிரச்சினை இல்லை. அவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கொரு முறை காயத்திரியை வந்து பார்த்து விசாரித்து விட்டுச் செல்வார்கள். அவ்வளவு தான். சௌமியா தான் அவளுக்குப் பொறுப்பானவள். காயத்திரியும் சென்றுள்ளாள். நீங்கள் வந்து இருங்கோ” என்றாள் மல்லிகா.

ஏகாம்பரம் வந்து மீண்டும் இருக்கையில் அமர்ந்து கொண்டார். எனினும் அவரது மனம் பரபரத்தது.

“இதெல்லாம் எமக்குப் பழகிவிட்டது. புனர்வாழ்வு பெற்ற போராளிகள் அனைவரையும் இராணுவம் கண்காணிக்கும். அதனால் பிரச்சினை இல்லை. நாம் ஏதாவது இசகு பிசகாய்ச் செய்தால் தான் பிரச்சினை. இங்குள்ள சிலர் தமது முன் பகையைத் தீர்க்க இல்லாத

பொல்லாதவற்றை எழுதுவார்கள். அப்படி எழுதினால் தான் பிரச்சினை. எமக்கு எதிரிகள் இல்லை. அதனால் பிரச்சினைகளும் இல்லை. எமது ஊரில் இருக்கும் வளர்மதி என்ற பெண் இயக்கத்தில் இருக்கும் போது சற்றுக் கடுமையாக நடந்து கொண்டாள். அதனால் அவளுக்கு அடிக்கடி பெட்டிசம் போகும். அதனால் இராணுவத்தினர் அடிக்கடி அவளை விசாரிக்க வருவார்கள். அவள் காயத்திரியின் தோழி. அவள் விடுதலையான பின்பு காயத்திரியை வந்து சந்திப்பாள். அதனாலும் பிரச்சினைகள் வந்தன. பின் நான் அவளைச் சந்தித்து பிரச்சினைகளைக் கூறி இங்கு வர வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டேன். இப்போ அவள் வருவதில்லை. அதனால் பிரச்சினையும் இல்லை'' என்றாள் மல்லிகா.

``அப்படியானவர்களும் இருக்கிறார்களா…..?'' என்று ஆச்சரியப்பட்டார் ஏகாம்பரம்.

``முன்பு இயக்கத்தைப் பலர் எதிர்த்தனர். ஆனால் பகிரங்கமாக எதிர்க்கப் பயம். அதை இப்போ காட்டுகிறார்கள். வளர்மதி எமது ஊருக்குப் பொறுப்பாளராக இருந்தவள். அதனால் பெரும் பிரச்சினைகள். தமது சொத்துக்களைக் காப்பாற்றுவதற்காக வளர்மதியோடு சேர்ந்திருந்த பலர் மேலிடத்தின் செயற்பாட்டால் பாதிக்கப்பட்டனர். அந்தப்

பாதிப்பு வளர்மதியால் தான் வந்ததென நினைத்து இப்போது பழி வாங்குகின்றனர். நன்றாகப் படித்தவர்களுக்குக் கூட இது விளங்குவதில்லை'' என்றாள் மல்லிகா.

இராணுவத்தினர் சென்றதும் சௌமியாவும் காயத்திரியும் வந்தனர். காயத்திரி ஏகாம்பரத்திற்கு அருகே வந்து சொன்னாள்; ''என்னால் சௌமியாவுக்கும் பெருந்துன்பங்கள் வருகின்றன. இராணுவத்தினர் என்னைப் பற்றிய விபரங்கள் பொய்யானால் சௌமியாவைத் தானாம் தண்டிப்பினை. எனக்காகப் பொறுப்பு நின்று கையொப்பமிட்டதால் வந்தவினை. இந்த வீட்டை விட்டு வெளிக்கிட்டு எங்காவது கண்காணாத இடத்திற்குப் போகலாமென்றாலும் முடியாமல் இருக்கு. இராணுவத்தினருக்கு அறிவிக்காமல் போக முடியாது. போனால் சௌமியா தண்டிக்கப்படுவாள். அந்த நேரம் உணர்ச்சிப் பெருக்கால் ஆராயாது சென்றதற்கு நான் மட்டுமல்லாது எனது குடும்பத்தினரும் பாதிக்கப்படுகின்றனர்.'' கலங்கினாள் காயத்திரி.

''உறவினர்களென்று இருப்பவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் உதவத் தானே வேண்டும்'' என்றாள் சௌமியா.

“உதவுவதில் பிரச்சினையில்லை. ஆனால் முன்பு இயக்கத்தின் தூண்களாக இருந்தவர்களால் தான் இப்போது பிரச்சினை. நாகமணி ஆசிரியர் முன்பு இயக்கத்திற்கு ஆள்ச் சேர்த்தவர். இப்ப இராணுவத்திற்குத் தகவல் கொடுக்கிறார். இவற்றை நினைக்கத் தான் கவலையாக இருக்கு.” என்றாள் காயத்திரி.

“சரி நாங்கள் வரப்போறம்..” என்று எழுந்த ஏகாம்பரம் சற்றுத் தயங்கினார். அவர் எதையோ கேட்க விரும்புகிறார் என்று நினைத்தாள் மல்லிகா.

“நாங்கள் சௌமியாவின் திருமண விடயமாகப் பேச வந்தோம். இன்று சரி வராது போல இருக்கிறது” என்றாள் மங்களம்மாள்.

“இராணுவம் வருவது போவதெல்லாம் சாதாரண விடயம். அதை நாம் ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லலாம்” என்றாள் மல்லிகா.

“நான் சுற்றி வளைத்துப் பேச விரும்பவில்லை. நேரடியாகவே கேட்கிறேன்…” என்று கூறிவிட்டுத் தனது கணவனைப் பார்த்தாள் மங்களம்மாள்.

“நீரே சொல்லும்” என்றார் ஏகாம்பரம்.

“கஜேந்திரனுக்குச் சௌமியாவை பெண் கேட்கத் தான் நாம் வந்தோம்” என்றாள் மங்களம்மாள்.

மல்லிகாவும் சௌமியாவும் திகைத்துப் போனார்கள். மல்லிகாவால் சம நிலைக்கு வர முடியவில்லை. காயத்திரி அதன் பின் அங்கு நிற்பது அழகல்ல என நினைத்து உள்ளே சென்றாள்.

“நாம் கஜேந்திரனுக்கு இதைப் பற்றி விபரமாகக் கூறிச் சம்மதம் கேட்டு விட்டுத் தான் வந்தோம். உங்கள் தங்கை காயத்திரி உங்களுடனேயே இருக்கலாம். எமக்குச் சீதனமாக எவையும் தேவையில்லை. அத்துடன் உங்களைப் பற்றி முழுமையாக எமக்குத் தெரியும்” என்று கூறிவிட்டு மூச்சு விட்டாள் மங்களம்மாள்.

“சௌமியா, கஜேந்திரனைப் பற்றி அடிக்கடி கூறுவாள். அவளின் மனதில் என்ன இருக்கிறதோ தெரியவில்லை. எனக்குப் பூரண சம்மதம். இருப்பினும் எனது மகளின் விருப்பம் தான் எனது முடிவு” என்றாள் மல்லிகா.

சௌமியாவுக்குத் திகைப்பு மட்டுமல்ல அதிர்ச்சியாயும் இருந்தது. அவளால் தீர்க்கமான முடிவுக்கு உடனே வரமுடியவில்லை. கஜேந்திரன் மிகமிக நல்லவன். பண்பாகப் பேசுபவன். திறமை மிக்க வைத்தியன். அத்துடன் அவனது தாயும் தகப்பனும்

வைத்தியர்கள். அவர்களோடு அவள் பல வருட காலமாக நெருக்கமாகப் பழகுகிறாள். எந்த ஒரு நெருக்கடியான வேளையிலும் அவர்கள் மனம் தளர்ந்ததில்லை. அவர்களுக்கு ஒரே ஒரு மகள். பட்டதாரி. திடீரென்று இரத்தப் புற்றுநோய் வந்துவிட்டது. இருவரும் துடிதுடித்துப் போனார்கள். இருந்தும் சில நாட்களில் மனத் தைரியமடைந்து அவளைக் கலங்காமல் பாதுகாத்தனர். அவர்களில் ஒருவராவது தமக்கு வந்த துன்பத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவே இல்லை, எல்லாம் விதி. என்ன தான் விஞ்ஞானம் வளர்ந்த போதும் அந்த விஞ்ஞானத்தால் இயற்கையைக் கண்டு கொள்ளவே முடியவதில்லை. எல்லாம் இறைவன் செயல்'' என்று ஒரு நாள் கூறியதோடு சரி. அப்படிப்பட்டவர்களுடன் வாழ்வது இன்பமானது என்று அவள் நினைப்பதுண்டு. ஆனால் கஜேந்திரனைக் கணவன் என்ற நிலையில் ஒரு கணம் கூட அவள் நினைத்ததில்லை.

``நாம் அவசரப்படவில்லை. சௌமியா நன்றாக யோசித்து முடிவெடுக்கட்டும். காண்டீபனைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதால் தான் நாம் கேட்டோம். யாரையோ ஒருவரைத் திருமணம் செய்யப் போகின்ற சௌமியா ஏன் கஜேந்திரனைச் செய்யக் கூடாது என்று நினைத்தே கேட்டோம். தவறாக இருப்பின் சம்மதிக்காது விடலாம்'' என்றார் ஏகாம்பரம்.

‘‘மனதில் உள்ளவற்றை மறைப்பது தான் தவறு. மனதில் உள்ளவற்றைச் சொல்வது தவறாகாது. உங்களைப் போன்றதோர் அருமையான குடும்பத்தை நான் இதுவரை கண்டதில்லை. போட்டியும் பொறாமையும் வஞ்சம் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் தான் எனது இனத்தவர்களில் பலர் வாழ்கின்றனர். நான் உங்களோடு இருந்து உங்களது பண்புகளைக் கண்ணாரக் கண்டிருக்கிறேன். இருப்பினும் திருமணம் என்றால் அனைத்தையும் நன்கு ஆராய்ந்த பின்பே முடிவெடுத்தல் வேண்டும். இதற்காக நீங்கள் தவறானவர்கள் என்றில்லை. எனினும் எனது மனதில் சில அச்சங்கள் உண்டு. தயவுசெய்து எனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தாருங்கள். பிளீஸ்...’’ கலங்கினாள் சௌமியா.

‘‘இதற்கெல்லாம் ஏனம்மா கலங்குகிறாய். திருமணம் என்பது இறுதிக்காலம் வரை தொடரும் உறவு. அதைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும். இரண்டு நாட்களல்ல இரண்டு வாரங்கள் கூடப் பொறுத்திருக்க நாம் தயார். நீ ஆறுதலாகச் சிந்தித்து முடிவெடு’’ என்றார் ஏகாம்பரம்.

மங்களம்மாள் எழுந்து சென்று தாம் கொண்டு வந்து காரினுள் வைத்த பையொன்றை எடுத்து வந்து அதைச் சௌமியாவிடம் கொடுத்தாள்.

சௌமியா சிறிது தடுமாற்றத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு , ‘‘நன்றி’’ என்றாள்.

‘‘நாம் சென்று வருகிறோம். இரண்டு நாட்களின் பின் உனது முடிவைச் சொல். அதற்காக வீடு தேடி வர வேண்டாம். போனில் சொன்னாற் போதும்’’ என்றாள் மங்களம்மாள்.

சௌமியா உதடுகள் பிரியாது சிரித்தாள்; ‘‘நாங்கள் வரப்போகிறோம்’’ என்றபடி நடந்தாள் மங்களம்மாள். மல்லிகாவும் சௌமியாவும் அவர்களின் பின்னால் கேற்வரை வந்தனர்.

அவர்கள் சென்று விட்டார்கள். சௌமியா வந்து நெடுநேரம் வரை கோலில் அமர்ந்திருந்தாள். அவள் ஏதாவது சொல்வாள் என எதிர்பார்த்தபடி மல்லிகாவும் காயத்திரியும் காத்திருந்தனர்; ‘‘மிகவும் நல்ல இடம் இதற்கேன் இவ்வளவு யோசிக்கிறாள். இவளது யோசனையைப் பார்த்தால் இவளுக்குப் பிடிக்கவில்லைப் போலத் தெரிகிறது’’ என்று எண்ணிக் கலங்கினாள் மல்லிகா.

‘‘பிரச்சினைகள் இல்லாத குடும்பம். அத்துடன் பெரும் பணக்காரக்குடும்பம். கஜேந்திரன் வாட்டசாட்டமான இளைஞன். பெரும் உத்தியோகத்தன்.

அதை விட அவளால் நன்கு அறியப்பட்டவன். அப்படியிருக்க ஏன் யோசிக்கிறாள்.'' என்று நினைத்தவாறு இருந்தாள் காயத்திரி.

''காண்டீபனின் தந்தை டொனேசனாக இருபத்தைந்து இலட்சரூபா கேட்கிறார். அத்துடன் நான் அவர்களுடன் இருப்பது பிடிப்பதில்லை. அந்த இரண்டு காரணங்களுக்காகவும் காண்டீபனை வெறுத்தொதுக்கிய சௌமியா எதையும் எதிர்பாராத ஏகாம்பரத்தின் குடும்பத்தை வெறுக்கமாட்டாள். அவள் கட்டாயம் கஜேந்திரனைத் திருமணம் செய்வாள். அவனைத் திருமணம் செய்வதால் அக்காவின் விருப்பங்கள் யாவும் பூர்த்தியாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காகச் சௌமியா கஜேந்திரனை விரும்புவாள்'' என்று நினைத்த காயத்திரிக்குச் சௌமியாவின் நீண்ட நேர யோசனையும் மௌனமும் சற்றுக் கலக்கத்தைக் கொடுத்தது. அதனால் பொறுமையை இழந்த அவள் எழுந்து சென்று சௌமியாவுக்கு அருகே அமர்ந்து அவளது முகத்தைச் சிறிது நேரம் பார்த்தாள். பின்பு; ''சௌமி, அவர்கள் சென்று மூன்று மணித்தியாலமாகின்றது. இன்னும் யோசிக்கிறாயா..? இதில் யோசிக்க என்ன இருக்கிறது?'' என்ற கேட்டாள்.

''நிறைய இருக்கு நான் யோசித்துப் பார்த்தேன். இந்தச் சம்பந்தம் சரிவராது.'' என்றாள் சௌமியா.

“சரி வராதோ..” அதிர்ச்சியுடன் கேட்டாள் காயத்திரி. மல்லிகா அதிர்ந்து போனாள்.

# 10

“என்னடி சொல்லுறாய்..?” அதற்கு மேல் மல்லிகாவால் பேச முடியவில்லை. விக்கி விக்கி அழுதாள். அவளால் துயரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

“எல்லாவற்றையும் சிந்தித்தா கதைக்கிறாய்? எங்கடை சமூகத்திலை ஒரு கல்யாணத்தைச் செய்து கொடுப்பது இயலக் கூடிய காரணமா…? உத்தியோகம் இருந்தும் வீடுவாசல் தோட்டந்துரவு பணம் பொருள் இருந்தும் திருமணமாகாது இருக்கும் பெண்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. சாதகம் என்பினை, சாதி என்பினை, சமயமென்பினை, சாதிக்கலப்பென்பினை. கலியாணம் பேசத் தொடங்கின பிறகு ஒவ்வொரு புதுப் பிரச்சினைகள் முளைக்கும். ஏகாம்பரம் ஐயா எதையும் பாராது உன்னைத் தனது மருமகளாக்குவதாகக் கூறுகிறார். இப்படி ஒருவர் எமக்குக் கிடைப்பாரா…? காண்டீபனின் தந்தை வீட்டுக்கே வர மறுத்தவர். அதனால் நீ போய்க் கதைத்தனீ. அவர் தனது பிள்ளைக்குத் தகுந்த பெண்ணைத் தேடாமல் தமது குடும்ப அந்தஸ்துக்குத்

தகுந்த பெண்ணைத் தேடினவர். அது மட்டுமல்லாமல் டொனேசன், சீதனம், வீடுவளவென்று எத்தனையைக் கேட்டவர். அது தவிர எங்களது குடும்பத்தைப் பற்றிக் கேவலமாகப் பேசியவர். அத்தானின் குடும்பத்தில் சாதிக்கலப்பிருக்கென்றும் திருமணத்திற்கோ அல்லது அதன் பின் உறவென்று சொல்லிக் கொண்டோ அவை யாரும் வீட்டுக்கு வரக்கூடாதென்றும் சொன்னவர். மகன் ஆசைப்பட்டமையால் வேறு வழியின்றி மனம் ஒப்பாமல் சம்மதிக்கிறேன். திருமணத்திற்கு முன்பே இயக்கத்திற்குச் சென்றவள் வீட்டை விட்டுச் செல்ல வேண்டும் என்றும் சொன்னவர். அப்படியிருக்கும் போது நீ வலிய வரும் சீதேவியைக் காலால் உதைக்கிறாய். பிற்காலத்தில் அதைப் பற்றி யோசிச்சுக் கவலைப்படுவாய்...'' என்றாள் காயத்திரி.

சௌமியா எதுவும் பேசவில்லை. அவள் காயத்திரி சொன்னதை கேட்டதாகவும் காட்டிக் கொள்ளவில்லை. அதனால் மல்லிகாவுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. அவளை இழுத்துப் போட்டு நான்கு அடி அடிக்க வேண்டும் போல இருந்தது. அப்போது மாதவன் சொன்ன வார்த்தைகள் அவளின் நினைவுக்கு வந்தன.

‘‘மல்லி, நாம் சௌமியாவை முற்போக்குச் சிந்தனையுள்ள பெண்ணாக வளர்க்க வேண்டும். அவள்

தனது வாழ்க்கையை நன்கு திட்டமிட்டு வாழப் பழக்குதல் வேண்டும். அவளுக்குப் பூரணமான கல்வியைக் கொடுத்தல் வேண்டும். அவள் கற்ற கல்வி அவளுக்குத் துணையாக இருந்து அவளை வழிநடத்தல் வேண்டும். எந்தச் செயலையும் அவள் விரும்பியபடி செய்யவிடல் வேண்டும். தேவையேற்பட்டாலொளிய அவளது செயல்களில் தலையீடு செய்தலாகாது. அவளை ஒருபோதும் வற்புறுத்தக்கூடாது. அத்துடன் எமது விருப்பு வெறுப்புக்களைத் திணிக்கவும் கூடாது. அவள் ஒரு தேவதை. மாதவனின் மகள் எந்த ஒரு விடயத்திலும் தோல்வியைச் சந்திக்கக் கூடாது''

மல்லிகா தடுமாறிப் போனாள். அவள் இதுவரை சௌமியாவுக்குப் புத்திமதி கூறியதில்லை, ''இப்படிச் செய்யம்மா'' என்று கூறியதும் இல்லை. அவளாகக் கேட்டால் மட்டும் சொல்வாள். ஆனால் இதுவரை மல்லிகாவின் விருப்பத்திற்கு மாறாகவும் அவள் நடந்ததில்லை.

''என்னக்கா நீ பேசாமல் இருக்கிறாய். நீ அவளின் எந்த விடயத்திலும் தலையிடுவதில்லை. அதனால் தான் இப்படிச் சொல்கிறாள். ஊருக்குள் பெண்களை வைத்திருப்போர் படும்பாடு உனக்குத் தெரியாதா? கதிரேசண்ணை மகளின் திருமணம் நாள்க் குறித்த பின்பு குழம்பியதால் பின் பேசிவரும்

திருமணங்கள் முன்பு குழம்பியதைக் காரணங் காட்டிக் குழம்புகின்றன என்று போனகிழமை கதிரேசன் வந்து தனது மகளின் பிரச்சினைகளைக் கூறிக் கதறி அழுததை மறந்து விட்டாயா..?'' ஆத்திரமாகக் கேட்டாள் காயத்திரி.

''காயத்திரி, சௌமியா அறியாத பெண்ணல்ல. வயது வந்தவள். பொறுப்பான பதவியில் இருக்கிறாள். அவளுக்கு எல்லாம் தெரியும். அவர் சௌமியாவை எப்படி வளர்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டாரோ அப்படி வளர்த்து விட்டுள்ளேன். அவள் தனது வாழ்வைத் தீர்மானிக்கட்டும். ஊரில் நடக்கும் பிரச்சினைகள் யாவும் அவளுக்குத் தெரியும். இப்போ காலம் போய் விடவில்லை. ஏகாம்பரம் ஐயா இரண்டு கிழமை அவகாசம் தந்துள்ளார். அவள் இரண்டு நாள்க் கேட்டவள். இப்போ இரண்டு மணித்தியாலம் தானே முடிந்திருக்கு. அவள் ஆறுதலாகச் சிந்திக்கட்டும்'' என்றாள் மல்லிகா.

''தாயையும் மகளையும் திருத்தவே முடியாது'' என்றாள் காயத்திரி.

அப்போது வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. கஜேந்திரன் காரில் இருந்து இறங்கி உள்ளே வந்தான்.

சௌமியா வாசல் வரை சென்று அவனை அழைத்து வந்தாள். கஜேந்திரன் அவளது முகத்தைப் பார்த்தான். அதில் எந்தவிதமான உணர்வுகளும் இல்லை. வழமை போலவே இருந்தது.

“அம்மாவும் அப்பாவும் இன்று உங்கள் வீட்டைப் பார்ப்பதற்காக என்னையும் வரச் சொன்னார்கள். நான் சற்றுத் தாமதமாக வருகிறேன் என்று சொன்னேன். இன்னும் அவர்கள் வரவில்லையா..?” என்று கேட்டான் கஜேந்திரன்.

“அவர்கள் வந்து சென்றுவிட்டனர்” என்றாள் சௌமியா.

“அப்படியா… எனக்குத் தெரியாது.” என்றவாறு தயங்கினான் கஜேந்திரன்.

“பரவாயில்லை. உள்ளே வாருங்கோ.” என்றான் சௌமியா.

“ஏகாம்பரமும் மங்களம்மாளும் சௌமியாவின் வீட்டிலிருந்து வந்த பின் யாவற்றையும் கஜேந்திரனுக்குக் கூறி அவனை அங்கு அனுப்பி வைத்திருந்தனர்.

“சௌமியா கஜேந்திரனது முகத்தைப் பார்த்தாள். அது வழமையாக இருப்பதை விடப் பூரிப்பாக இருந்தது.

திட்டமிட்டு அலங்காரஞ் செய்யப்பட்டிருப்பதைப் போலிருந்தது. கஜேந்திரன் ஒருநாளும் கொலொன் பாவித்ததில்லை. அன்று கொலொன் கமகமத்தது. ‘‘கஜேந்திரனோடு கதைத்தனாங்கள். அவனுக்கு விருப்பம்’’ என்று மங்களம்மாள் சொன்னது நினைவுக்கு வந்தது. அவன் தனது சம்மதத்தைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் வந்திருக்கிறான் என்று நினைத்தாள் சௌமியா. எனினும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

‘‘முதன்முதலாக உங்களின் வீட்டுக்கு வரும்போது உங்களுக்கு ஏதாவது பரிசுப்பொருள் கொண்டு வர விரும்பி என்ன கொண்டு செல்லலாமென அம்மா கேட்டா. சென்ற வாரம் டொக்ரர் மைதிலி உடுத்தியிருந்த சேலை மிகவும் அழகாக இருக்கிறதென்று கூடிக் கதைத்தீர்கள். நான் பல கடைகளுக்குச் சென்று கஷ்டப்பட்டுத் தேடி அச் சேலையைக் கண்டு பிடித்தேன். அதுவும் மைதிலியோடு தொடர்பு கொண்டு எந்தக் கடையில் வாங்கினீர்கள் என்று கேட்ட பின்பே அங்கு சென்ற வாங்கினேன்’’ என்றான் கஜேந்திரன்.

அதைச் சொல்லும் போது அவனது முகத்தில் ஒரு பரவசம் இருந்ததைச் சௌமியா கண்டு கொண்டாள்., ‘‘அப்படியா….? எனது ஆசை உங்களைத்

தொல்லைப்படுத்தி விட்டது. அதற்கும் சேர்த்து நன்றி'' என்று சிரித்தாள் சௌமியா.

''நீங்கள் எதிர்காலத்தைப் பற்றி நிறையத் திட்டமிட்டுள்ளீர்கள். நான் இது வரை என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நினைக்கவே இல்லை. இப்போது தான் நினைக்கிறேன். அப்பாவும் அம்மாவும் கூட எனது வாழ்க்கை எப்படி அமைய வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆனால் இப்போ நினைக்கிறார்கள்'' என்றான் கஜேந்திரன்.

''வாழ்க்கையை நாம் திட்டமிடுகிறோம். ஆனால் விதி வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. விஞ்ஞானத்திற்கும் மெஞ்ஞானத்திற்கும் அப்பாற்பட்ட சக்தி தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது'' என்றாள் சௌமியா.

பலமாகச் சிரித்தான் கஜேந்திரன்; ''ஒரு மருத்துவர் தத்துவம் பேசுவது ஆச்சரியாக உள்ளது''

''இது தத்துவமல்ல அனுபவம். சிலருக்குக் கடவுள் அறியாப் பருவத்திலேயே சோதனைகளைக் கொடுத்து வாழ்க்கையைப் புரிய வைக்கிறார். சிலருக்கு இளமையப்பருவத்திலும் வேறு சிலருக்கு முதுமைப் பருவத்திலும் சிலருக்குப் புரியாமலும் வைக்கிறார். உங்களுக்கு இப்போது தான் புரிகிறது போலும்''

சிரித்தாள் செளமியா. கீழ்உதடு அசைந்து மூன்றாம் பிறை போலத் தென்பட்டது.

மல்லிகா தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். தேநீரைச் செளமியா தந்திருந்தால் மகிழ்ந்திருப்பேன் என்று நினைத்தான் கஜேந்திரன்.

தேநீர் கொடுத்து விட்டு உள்ளே செல்லச் சென்ற மல்லிகாவைப் பார்த்துச் சொன்னாள் செளமியா; ‘‘நீங்கள் இந்தச் சோபாவில் இருங்கோ. சித்தியையும் வரச் சொல்லுங்கோ…’’

மல்லிகா எதுவும் பேசாமல் ஒரு கணம் செளமியாவை உற்றுப் பார்த்தாள். செளமியாவின் எண்ண அலைகளை அவளது முகங் காட்டவில்லை. தனக்குக் கஜேந்திரனில் விருப்பமில்லை என்பதைச் சொல்லப் போகிறாள் என்று மல்லிகாவுக்குத் தோன்றியது. காயத்திரியும் அங்கு வந்து அமர்ந்தாள்.

‘‘கஜன், நீங்கள் மிகவும் நல்லவர், உங்கள் குடும்பத்தினரும் நல்லவர்கள் முற்போக்கான சிந்தனைகளை உடைய மேதாவிகள். உங்களைத் திருமணஞ் செய்யும் பெண் கொடுத்து வைத்தவள். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் மற்றவர்களை மதித்துப் பழகுபவர்கள். அதனால் வீட்டுக்கு வரும் மருமகளை மகளாகவே எண்ணுவீர்கள். இதெல்லாம்

எனக்குத் தெரியும். இருந்தும்....'' நிறுத்தி விட்டுத் தாயை ஒரு கணம் பார்த்தாள். தாயின் முகத்தில் தெளிவில்லை. பின் காயத்திரியின் முகத்தைப் பார்த்தாள். அது கலவரமடைந்திருந்தது. அதன் பின் கஜேந்திரனது முகத்தைப் பார்த்தாள். அது பூரண சந்திரனைப் போலப் பிரகாசித்தது. அன்று அவனது அலங்காரத்தையும் உற்சாகத்தையும் கண்ட போது சௌமியாவுக்கு மனவருத்தமாக இருந்தது.

``கஜன் உங்களை நான் திருமணஞ் செய்ய விரும்பவில்லை....''

கஜேந்திரன் தன்னை அறியாமல் இருக்கையை விட்டெழுந்தான். அவனுக்கு அது பேரதிர்ச்சியாக இருந்தது. அவளைக் கண்ட முதல் நாளே அவனது மனம் சலனப்பட்டது. பின் அவள் தான் காண்டீபனின் காதலி என்று அறிந்த போது சமாதானப்பட்டது. பின் அவள் கஜேந்திரனைக் காதலிக்கவில்லை என்று அறிந்த போது குதூகலப்பட்டது. கனவுகள் கண்டது. கற்பனைகள் செய்தது. இப்போ அவள் தன்னை விரும்பவில்லை என்று கூறியதும் உடைந்து சிதைந்து விட்டது. அவனால் சிந்திக்க முடியவில்லை.

மல்லிகாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்து விக்கல் விசும்பலாக வெளிப்பட்டது. தாய் இதுவரை அழுததை அவள் கண்டதில்லை. அதனால்

அவள் சற்றுத் தடுமாறினாள். எனினும் அத் தடுமாற்றத்தைச் சிரமப்பட்டு அடக்கி விட்டுச் சொன்னாள்; ‘‘நான் காண்டீபனுக்குத் துரோகஞ் செய்யவில்லை’’

மல்லிகா நிமிர்ந்து சௌமியாவைப் பார்த்தாள்; ‘‘இவளுக்கென்ன விசர் பிடித்துவிட்டதா’’ என நினைத்தாள்.

கஜேந்திரன் எதுவும் புரியாமல் தடுமாறினான்; ‘‘அப்போ, முன்பு இவள் சொன்னதெல்லாம் ஏமாற்றா..?’’

‘‘காண்டீபன் பாவம். சௌமியா மீது உயிரையே வைத்திருக்கிறான். சௌமியாவின் முடிவு சரி’’ என நினைத்தாள் காயத்திரி.

# 11

மல்லிகா குழம்பிப் போனாள். காண்டீபனின் தந்தை முரட்டுச் சுபாவமுள்ளவர். அவரால் சமூகத்தில் ஏற்படும் சிறுசிறு மாற்றங்களைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாது. அவரது மகள் கௌரி கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது அங்கு செல்ல அவளை அவர் அனுமதிக்காததால் அவள் பல்கலைக்கழகக் கல்வியை இழந்துள்ளாள். இன்றைய

எமது சமூக நிலையில் பெண்கள் நன்றாகக் கற்றுத் தொழிலைப் பெற்றுக் கொண்டால் தான் எதிர்கால வாழ்வு சிறக்கும். இன்றைய சூழ்நிலையில் பல்வேறு காரணங்களால் திருமணமாகாத ஆயிரக் கணக்கான பெண்களுக்குத் தொழில் தான் வாழ்வளிக்கிறது. ஒரு பெண் திருமணமாகாவிட்டால் தன் தொழில் மூலம் கிடைக்கும் ஊதியத்தால் வாழ்வாள். இல்லாவிட்டால் உணவு, உடைக்குக் கூட அவள் துன்பப்பட நேரிடும். இப்படியான முரட்டுச் சுபாவமுள்ள மனிதனோடு எப்படிக் காலந் தள்ளப் போகிறாள்'' என்று நினைத்துக் கலங்கினாள் மல்லிகா.

``பத்து வருட காலமாகக் காண்டீபன் சௌமியாவைக் காதலிக்கிறான். ஆனால் சௌமியா தான் அவனைக் காதலிக்கவில்லை என்று வாயோயாமல் கூறிக் கொண்டிருக்கிறாள். ஆனால் காதல் எப்படியானதென்று காயத்திரிக்குத் தெரியும். அவள் இயக்கத்திற்குச் சேர்ந்த புதிதில் அவனோடு கடமையாற்றியவன் ரவீந்திரன். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட அவனுக்கு இயக்கம் வைத்த பெயர் பாண்டியன். மாங்குள இராணுவமுகாம் தாக்குதலின் போது இருவரும் ஒரே படையணியில் கடமையாற்றினர். ஆரம்ப காலத்தில் பாண்டியன் இயக்கச் சட்டதிட்டங்களுக்கமையவே காயத்திரியுடன் பழகி வந்தான். அவனது நடையுடை பாவனை அவளுக்குப்

பிடித்திருந்தது. காட்டில் வாழும் வாழ்க்கையின் போது தனிமை கொடுமையாக வாட்டும். அவ் வேளைகளில் கூட்டம் கூட்டமாக இருந்து பொது விசயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவர். சமீப காலமாகப் பாண்டியன் தன்னோடு மிகமிக நெருகக்மாக சற்று உரிமையுடன் பழகுவதை உணர்ந்தாள் காயத்திரி. அதனால் அவனைக் காணும் போது விலகிவிடுவாள். ஆனால் அவன் எப்போதாவதொரு நாள் காணும் சந்தர்ப்பங்களில் செயல்களால் தனது அன்பை வெளிப்படுத்துவான். ஆனால் அவற்றை அவள் கண்டு கொள்வதில்லை.

ஒரு நாள் அவள் காட்டில் பாதை தவறிவிட்டாள். அவளைத் தேடிப் பல போராளிகள் சென்றனர். கடைசியாக அவளைக் கண்டு பிடித்தது பாண்டியன் தான். அப்போது அவன் சொன்னான்; “ஒரு போராளி காணாமற் போனால், அவள் எதிரியிடம் அகப்பட்டிருப்பாள். அல்லது காயமேற்பட்டு அந்த இடத்தில் விழுந்து கிடப்பாள். இல்லாவிட்டால் வீரமரணம் அடைந்திருப்பாள். நான் உங்களைக் காணவில்லை என்று அறிந்ததும் துடிதுடித்துப் போனேன். எனது உயிர் பிரிந்து விட்டதைப் போலிருந்தது. துக்கத்தைத் தாங்க முடியாது. எனது பொறுப்பாளரிடம் கூறி அனுமதி பெற்று உன்னைத் தேடினேன். இப்போது தான் போன உயிர் மீண்டது. காயத்திரி இனிமேலும் எனது மனதில் உள்ளதைச் சொல்லாது என்னால் வாழமுடியாது.

உன்னை முதல் முதலாகக் கண்டன்றே நான் என்னை இழந்துவிட்டேன். அதைச் செயல்கள் மூலம் உனக்குப் பலமுறை தெரிவித்தேன். ஆனால் நீ அதைக் கண்டு கொள்ளவில்லை. எமது இயக்கத்தைப் பொறுத்தவரை காதலிக்கக் கூடாதென்றில்லையே. நீ நாட்டின் மீது பெரும் பற்று வைத்திருக்கிறாய். அதை நான் கெடுக்கமாட்டேன். நாம் இருவரும் நாட்டைக் காதலிப்பது போலக் காதலிப்போம். தீர்வு வந்த பின் இணையலாம்''

அவள் மறுத்துவிட்டாள். அதன் பின் அவளைக் காணும் போதெல்லாம் சோகத்தின் மூலம் தன் அன்பை வெளிப்படுத்துவான். இவ்வாறு ஐந்து வருடங்களின் பின் அவனது துயரத்தைத் தாங்க முடியாது; அவள் அவனது காதலை ஏற்றாள். அது போலச் சௌமியாவின் மனதுள்ளும் காண்டீபனின் சோகம் படிந்திருக்கும் என்று நினைத்தாள் காயத்திரி.

''எனக்கு யார் மீதும் வெறுப்பு இல்லை. எமக்குத் துன்பஞ் செய்தவர்களையும் நான் மன்னிப்பேன். ஒருவர் இன்னொருவருக்குத் துன்பஞ் செய்கிறாரென்றால் அது அவரின் அறியாமையால் தான் செய்யப்படுகிறது. காண்டீபனின் தூய அன்பு என்னைச் சிந்திக்க வைக்கும். ஆனால் அந்தத் தூய்மையான அன்புக்காக நான் அவரை ஏற்கத் தயாரில்லை. ஏனென்றால் காண்டீபனின் பெற்றோர் மூடநம்பிக்கையுள்ளவர்கள். அதற்காகக்

காண்டீபனை அவர்களிடமிருந்து பிரிக்க நான் விரும்பவில்லை. ஒவ்வொரு பெற்றோரும் பெரும் கனவுகளுடன் தம் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குகின்றனர். அக் கனவுகள் காதல் என்ற போதையால் கலைக்கப்பட்டால் அவர்கள் நொடிந்து போவார்கள். அவர்களால் தம் மக்களின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது. அதனால் தான் என் மீது மிக்க அன்பு கொண்ட காண்டீபனை ஒதுக்கினேன். காண்டீபனின் இரத்த உறவினன் கஜேந்திரன். அத்துடன் உயிர் நண்பன். அப்படி இருக்கையில் நான் கஜேந்திரனைத் திருமணம் செய்தால் காண்டீபனின் மனம் எப்படித் தாங்கிக் கொள்ளும்? இருவரினது வீடுகள் பக்கத்திலேயே உள்ளன. அதனால் என்னைக் காண்டீபன் அடிக்கடி சந்திப்பார். என்னைக் காணும் போது அவரது மனம் பாதிக்கப்படும். அத்துடன் தனக்குக் கிடையாத நான் தன் நண்பனுக்குக் கிடைத்து விட்டேன் என அவர் நினைத்து மனம் வருந்துவார். ஒருவரின் இழப்புக்களால் வரும் இன்பம் எனக்குத் தேவையில்லை. அத்துடன் கவலையால் காண்டீபனது மனம் பாதிக்கப்பட்டால் இருவீட்டாரும் நிம்மதியாக இருக்க முடியாது. அதனால் தான் நான் கஜேந்திரனைத் திருமணம் செய்ய விரும்பவில்லை'' என்றாள் சௌமியா.

மல்லிகாவுக்கு அவள் கூறுவது நியாயமாகப்பட்டது. உறவுகளுக்குள் பிரிவு ஏற்படக்

கூடாது என்று நினைத்தாள். அவளை நினைக்க மல்லிகாவுக்குப் பெருமையாக இருந்தது. அவள் சாயலில் தான் மாதவனைப் போலிருக்கிறாள் என்று நினைத்திருந்தவளுக்கு இன்றைய ஆணித்தரமான பேச்சு செயலிலும் மாதவன் தான் என நினைக்க வைத்தது.

கஜேந்திரன் இடிந்து போனான். அவனால் பேச முடியவில்லை. சௌமியா கூறுவது நியாயம். அதை எப்படி மறுத்துரைப்பது என்று புரியாது தவித்தான் கஜேந்திரன்.

‘‘சௌமியா விபரம் தெரியாத சின்னப்பிள்ளையல்ல. சகலதும் தெரிந்த மனிசி’’ என்று நினைத்தாள் காயத்திரி.

‘‘கஜேந்திரன், என்னைக் குறை நினைக்காதைங்கோ. உங்களின் நண்பனின் துன்பத்தில் பங்கேற்று அவரது மனதைத் திடப்படுத்தி அவர் இன்பமாக வாழ வழி செய்யுங்கள். எப்போதும் போல நான் உங்களுடன் பழகுவேன்’’ என்றாள் சௌமியா.

‘‘யோசித்துப் பார்த்தால் நீங்கள் கூறுவது சரி. உங்களைத் திருமணம் செய்த பின் உங்களை அழைத்துக் கொண்டு அவர்களின் வீட்டுக்கு எப்படிச் செல்வது. நீங்கள் புத்திசாலி. பல கோணங்களில் சிந்தித்தீர்கள். நான் என்னைப் பற்றி மட்டுமே

சிந்தித்தேன். அது தவறு என்று இப்போது புரிகிறது'' என்றான் கஜேந்திரன்.

''ஒவ்வொருவரின் செயல்கள் தான் அக் குடும்பத்தின் ஏற்ற இறக்கங்களைத் தீர்மானிக்கிறது. எதையும் ஆராய்ந்து திடமான முடிவெடுத்த பின் செய்தால் யாருக்கும் பாதிப்பு உண்டாகாது. நீங்கள் தயவுசெய்து காண்டீபனுக்கு நிலைமையை விளங்கப்படுத்துங்கள். பிள்ளைகளின் வாழ்வு பெற்றோரின் மகிழ்ச்சியில் தான் தங்கியுள்ளது. பெற்றோரை மகிழ்விக்காத பிள்ளைகளின் வாழ்வு சிறக்காது. பெற்றோர் தெரிந்து செய்தாலும் சரி தெரியாமற் செய்தாலும் சரி அவர்கள் செய்வதை ஏற்கத் தான் வேண்டும் என்பதைக் காண்டீபனுக்கு உணர்த்துங்கள். இதைத் தான் நான் உங்களிடம் வேண்டுவது'' என்றாள் சௌமியா.

''உங்களின் விருப்பத்தை நான் கட்டாயம் நிறைவேற்றுவேன்'' என்ற கஜேந்திரன் எழுந்தான். சௌமியா வாசல்வரை வந்து அவனை வழியனுப்பினாள்.

அவளைத் திருமணம் செய்யலாம் என்ற நினைப்புடன் வந்த கஜேந்திரனுக்கு அவளது பதில் ஏமாற்றத்தைத் தந்த போதும் அது நியாயமாகவே இருந்தது.

கஜேந்திரன் வீட்டுக்கு வந்த போது அங்கே காண்டீபன் இருந்தான்; ‘‘காண்டீபன் வெகுநேரமாக உன்னைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறான்’’ என்றார் ஏகாம்பரம்.

‘‘ஒரு போன் பண்ணயிருக்கலாம்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘பண்ணியிருக்கலாம் தான். ஆனால் நீ ஏதாவது முக்கிய விசயமாகச் சென்றிருப்பாய். எனக்கு எந்த வேலையும் இல்லை. அதனால் காத்திருந்தேன்’’ என்றான் காண்டீபன்.

கஜேந்திரன் வந்து காண்டீபனுக்கு அருகில் இருந்தான். அவனது முகத்தில் லேசாகத் தாடி வளர்ந்திருந்தது. தினமும் சேவ் செய்யும் அவன் இரண்டு மூன்ற தினங்களாகச் சேவ் செய்யவில்லை.

‘‘என்ன சொல்லு?’’

சிறிது நேரம் பேசாதிருந்தான் காண்டீபன். அவனது கண்கள் கலங்கியிருந்தன, ‘‘கஜன்…’’ என்றவாறு கஜேந்திரனின் கையைப் பிடித்த காண்டீபன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பின், ‘‘கஜன், என்னால் சௌமியாவை மறக்க முடியவில்லை. அவள் கிடைக்கமாட்டாள் என்று எனக்கு முன்பே தெரியும்.

ஆனால் அவள் வெளிப்படையாகச் சொன்ன பின் வாழ்க்கை வெறுத்துவிட்டது. ஏ.எல் படிக்கும் போது அவளைக் கண்டு காதலித்தேன். ஆனால் சொல்ல முடியவில்லை. பல்கலைக்கழகத்திற்கு அவள் வந்த போதும் சொல்ல முடியவில்லை. எனது போக்கைக் கவனித்த அவள் தனது நிலையைச் சொன்னாள். தனது தந்தையின் விருப்பத்தைச் சொன்னாள். தாயின் நிலையையும் சொன்னாள். அவள் எமக்கு அன்று சொன்னவற்றையே முன்பு எனக்குச் சொன்னாள். அவள் சொல்வது நியாயமானது. எனது தந்தையின் நிலை பற்றி அவள் விபரமாகக் கூறுகிறாள். ஆனால் அவளை மறந்து வாழ என்னால் முடியவில்லை. நீ எனது அப்பாவுடன் கதைக்கிறியா..? சௌமியாவை அவசரப்பட வேண்டாமென்று சொல்வாயா….? எனது ஆசையைப் பூர்த்தி செய்வாயா..?'' தழுதழுத்தான் காண்டீபன்.

கஜேந்திரனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவனின் வேதனை புரிந்தது. இரண்டு நாட்களாக விரும்பும் தனது மனத்திற்கே சமாதானம் கூற முடியவில்லை. பத்து வருடங்களாக விரும்பித் தவிக்கும் மனதிற்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது.

``காண்டீ, உனது தகப்பனார் எதைச் சொன்னாலும் கேட்கமாட்டார். யார் சொன்னாலும் ஏற்கமாட்டார். அது உனக்குத் தெரியும். பெரியவர்கள்

சொன்னாலும் கேளாத உனது தந்தை நான் சொல்லிக் கேட்பாரா...? யோசித்துப் பார்'' என்றான் கஜேந்திரன்.

“உண்மை தான். ஆனால் என்னாலை சௌமியாவை இழக்க முடியாது'' என்று அழுதான் காண்டீபன்.

# 12

காண்டீபனின் தாய்மாமனான நடராசா காண்டீபனின் தந்தையான சிவகுருவின் அருகே இருந்தார். வெகுநேரமாகியும் சிவகுரு எதுவும் பேசவில்லை. நடராசா சிவகுருவின் வீட்டுக்கு நல்லது கெட்டது நடந்தால் மட்டும் தான் வருவார். வந்தாலும் தனது தங்கையுடனும் காண்டீபனுடனும் பேசிவிட்டுச் சென்றுவிடுவார். அவருக்குச் சிவகுருவைப் பிடிக்காது. எதையும் சிவகுரு ஏற்றுக்கொள்ளமாட்டார். ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் அர்த்தங்கள் கண்டுபிடிப்பார். காண்டீபன் மனமுடைந்து சாப்பாட்டைக் கூடச் சாப்பிடாது களையிழந்து திரிவதைப் பொறுக்கமாட்டாத காண்டீபனின் தாய் லட்சுமி தனது சகோதரனான நடராசாவைச் சந்தித்து அழுது குழறியதால் தங்கையின் துயரத்தைத் தாங்க முடியாது லட்சுமியின் வீட்டுக்கு வந்தார். சிவகுரு

அவரை நிமிர்ந்து பார்த்து; ‘‘என்ன? இரு’’ என்று சொன்னாரே தவிர வேறெதுவும் சொல்லவில்லை. அது நடராசாவுக்க அவமானமாக இருந்தது. எனினும் தனது தங்கைக்காகப் பொறுத்துக் கொண்டார்.

லட்சுமி திருமணஞ் செய்த நாளில் இருந்து இதுவரை மகிழ்ச்சியாகச் சிரித்ததை அவர் காணவில்லை. அதனால் தான் அவர் அவ் வீட்டுக்கு வருவது குறைவு. லட்சுமி சிவகுரு வீட்டில் இல்லாத போது நடராசாவின் வீட்டுக்கு வந்து செல்வாள். தனது தங்கையின் நிலை பற்றி அவர் இப்போது சிந்திப்பதில்லை. ஏனென்றால் சிந்திப்பதால் பிரயோசனமில்லை.

‘‘அண்ணா காண்டீபனை நினைக்க எனக்குப் பயமாக இருக்கிறது. இவர் ஒருபோதும் சௌமியாவைச் செய்ய விடமாட்டார். அவளைச் செய்யாவிட்டால் இவனுக்கு விசர் பிடித்துவிடும். சௌமியாவும் தாயும் சரியான பிடிவாதக்காரர். இவர் சம்மதிக்காவிட்டால் பரவாயில்லை, நீ சௌமியாவைக் கூட்டி வா. காலப்போக்கில் எல்லாம் சரி வந்து விடும் என்று நான் பல முறை காண்டீபனுக்குச் சொல்லிவிட்டேன். அவனுக்கு விருப்பம். ஆனால் தாயும், மகளும் அதற்கு ஒத்துக்கொள்ளுகிறார்களில்லை. தாய் காதலித்துத் திருமணஞ் செய்தமையால் தாயின் பெற்றோர் இது

நாள்வரையும் தம்மை ஏற்றக்கொள்ளவில்லையாம். அப்படியான ஒரு நிலை மீண்டும் ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லையாம். நான் என்ன செய்வது? என்னை ஒரு பொருட்டாக அவர் மதிப்பதில்லை. அவர் உங்களையும் மதிக்கமாட்டார். இருந்த போதும் யாராவது கேட்டிருந்தால் சம்மதித்திருப்பேன் என்றும் சொல்வார். அதனால் அண்ணா தயவுசெய்து அவருடன் ஒருமுறை கதை. அவர் உன்னை அவமானப்படுத்துவார். அதொன்றும் புதியதல்லவே. எனக்காக இதைச் செய் அண்ணா…'' என்றுலட்சுமி ஒப்பாரி வைத்த பின்பே வேறு வழிவகை அறியாது ஊர்ப்பிரமுகரான பரமசிவத்தையும் அழைத்துக் கொண்டு வந்தார்.

சிவகுரு அவர்கள் வந்திருப்பதைக் கண்டு கொள்ளாதவர் போல அன்றைய தினப் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தார். அது நடராசாவுக்குப் பிடிக்கவில்லை. பரமசிவத்திற்கு அவமானமாக இருந்தது.

''நாங்கள் இங்கு ஏன் வந்தோம் என்று நீ கேட்கத் தேவையில்லை. அலுவலாக வந்த நாங்கள் தான் வந்த விசயத்தைச் சொல்ல வேண்டும்'' என்றார் பரமசிவம்.

''சொல்லுங்கோ'' என்றார் சிவகுரு.

''எதையும் விபரமாக உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. எல்லாம் உங்களுக்குத் தெரியும்.

காண்டீபனின் திருமணம் பற்றிப் பேச வந்தோம்'' என்றார் நடராசா.

''அது பற்றிய எனது முடிவைச் சொல்லிவிட்டேன்'' என்றார் சிவகுரு.

''காண்டீபன் உனது முடிவால் விசர் பிடித்தவன் போலத் திரிகிறான். அதைப் பற்றி நீ சிறிதளவாவது சிந்திக்க வேண்டும்'' என்றார் பரமசிவம்.

''அவள் இவனைத் தான் காதலிக்கவில்லை என்று சொல்கிறாள். பிறகேன் இவன் அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்'' என்று கேட்டார் சிவகுரு.

''அவள் காதலிக்காவிட்டாலும் இவன் காதலிக்கிறான். அவள் காதலிக்காவிட்டாலும் நீங்கள் சம்மதித்தால் தனக்கு விருப்பமென்கிறாள்'' என்றார் பரமசிவம்.

''எல்லாம் புதுமையாக இருக்கு..'' என்று சிவகுரு கூறும் போது இடைமறித்துப் பரமசிவம் சொன்னார்; ''ஒன்றும் புதுமையாக உலகில் நடைபெறுவதில்லை. நடந்தவை தான் திரும்பத் திரும்ப நடைபெறுகின்றன. அதை அறியாதவர்கள் தான் அதைப் புதுமை என்கின்றனர். முருகன் வள்ளியை விரும்பினார்.

ஆரம்பத்தில் வள்ளி முருகனை விரும்பவில்லை. அத்துடன் அந்தக் குடும்பத்தில் உள்ள யாரோ ஒருவர் சாதி மாறிக் கல்யாணம் செய்ததாகவும் அது உனது குடும்ப மதிப்பை இழக்கச் செய்யும் என்றும் சொல்கிறாய். எமது கடவுள் மாரே சாதி பாராது திருமணம் செய்துள்ளனர். முருகன் சிவனின் மகன். வள்ளி வேடுவப்பெண். மிருகங்களைக் கொன்று தின்பவர்கள். அவர்களைச் சாதி பார்த்து வணங்காமல் விடுகிறோமா….?'' என்று கேட்டார் பரமசிவம்.

சிவகுருவால் அதற்குப் பதில் கூறமுடியவில்லை. அவர் முருகபக்தர். கந்தசட்டி விரதத்தை முறைப்படி அனுட்டிப்பவர். அவரால் பதில் கூற முடியவில்லை.

''சௌமியா வாய்க்காரி. அவளின் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. நீ மற்றவர்களை நம்பியா பிள்ளைகளைப் பெற்றனீ என்று கேட்காமல் கேட்கிறாள்.'' என்றார் சிவகுரு.

''உங்கடை பேச்சுப் பிழை. பெண்ணென்றால் அடிமை என்று நினைத்துக் கதைத்தால் படித்த அவள் அப்படித் தானே பேசுவாள்'' என்றார் சிவகுரு.

''காண்டீபனும் சௌமியாவும் ஒரே தொழிலைச் செய்கின்றனர். வருமானமும் ஓரளவு தான். முன்னைய காலத்தில் பெண்கள் கல்வி கற்பதில்லை. அதனால்

தான் பெற்றோர் தம்மிடமுள்ள சொத்தைப் பெண்களுக்குக் கொடுத்தனர். ஆண்களுக்குக் கல்வியைப் புகட்டினர். இன்று ஆண், பெண் என்ற வேறுபாடு கல்வியிலோ தொழிலிலோ இல்லை. அதனால் நாம் கற்ற பெண்களை மதித்தேயாக வேண்டும். சௌமியாவுக்குக் காதலில் நம்பிக்கையில்லை. அதனால் அவள் யாரையும் காதலிக்கமாட்டாள். இவன் தான் அவள் மீது காதல் கொண்டு பித்துப் பிடித்தவன் போல அலைகிறான். அதனால் பாதிப்பு அவனுக்கும் உனக்கும் தான்'' என்றார் நடராசா.

‘‘கொஞ்ச நாட்களுக்குப் பாதிப்பு இருக்கும் அந்தப் பெண் திருமணம் செய்துவிட்டால் பின் இவனுக்கு அவளின் நினைப்பு இராது'' என்றார் சிவகுரு.

‘‘முன்பு நடந்தவைகள் அனைத்தையும் மறந்துவிட்டுக் கதைப்போம். இப்போ காண்டீபனின் மனம் குழம்பக்கூடாது. வேதனைப்படக்கூடாது என்று மட்டும் நினைத்துக் கருமமாற்ற வேண்டும்'' என்றார் நடராசா.

‘‘காதலென்றால் மனங்குழம்பும். பிரச்சினைகள் வருமென்று நினைத்துக் கதைத்தல் வேண்டும். இது காதல் இல்லையே. அதனால் நான் இன்னோர் இடத்தில் பேசுகிறேன். அவர்கள் பெருந் தனவந்தர்கள். ஐம்பது இலட்ச ரூபாய் டொனேசனாகத் தர ஒப்புக்

கொண்டுள்ளனர்'' என்றார் சிவகுரு. மேற்கொண்டு என்ன பேசுவதென்று இருவருக்கும் புரியவில்லை. ஏற்கனவே சௌமியாவுடனும் மல்லிகாவுடனும் இருவரும் கதைத்திருந்தனர். மல்லிகா டொனேசனாக இருபத்தைந்து இலட்ச ரூபாய் கொடுக்கச் சம்மதிக்கிறாள். ஆனால் சௌமியாவுக்கு அது விருப்பமில்லை. அத்துடன் சிவகுருவை அவள் முழுமையாகப் புரிந்து வைத்திருக்கிறாள். அந்தக் குடும்பத்தினர் நரகலோகத்தில் தான் வாழ்கிறார்கள். அப்படியானதொரு குடும்பத்தில் வாழ்க்கைப்பட எனக்கு விருப்பமில்லை. வாழ்க்கை என்பது எப்போதும் இன்பமானதாகவும் இனிமை மிக்கதாகவும் இருத்தல் வேண்டும். தினமும் பிரச்சினைப்பட்டு வாழும் நேரம் முழுவதும் துயரத்துடன் வாழ நான் தயாரில்லை. டொனேசனாக எதுவும் கொடுக்க முடியாது. அவரின் தங்கைக்குத் திருமணம் நடைபெறும் போது வேண்டியளவு பணம் கொடுக்கலாமே தவிர முற்கூட்டிக் கொடுக்க முடியாது'' என்று திடமாகக் கூறிவிட்டாள்.

''பாவம் அம்மா காண்டீபன். அவனால் என்ன செய்ய முடியும். அவன் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து வருபவன். தந்தையின் சொல்லை மீறமாட்டான்'' என்றார் பரமசிவம்.

‘‘பாவம் பார்த்து வாழ முடியாது. நீதி நியாயத்தின்படி தர்மமாக வாழ வேண்டும். பெற்றோரைப் பணிந்து நடப்பவர்கள் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக ஒருபோதும் நடக்கக்கூடாது. அது பிற்கால வாழ்க்கையைப் பாதிக்கும்’’ என்றாள் சௌமியா.

‘‘நீ விரும்பும் கொள்கைகளை உடைய ஒருவன் உலகில் வாழ்வான் என்ற நீ நம்புகிறாயா…?’’ என்று கேட்டாள் மல்லிகா.

‘‘அம்மா தீயவர்கள் மட்டுமா உலகில் வாழ்கின்றனர். தர்மவான்களும் வாழ்கிறார்கள். உத்தம புரிசர்களும் வாழ்கிறார்கள். நேற்று வந்த ஏகாம்பரம் ஐயாவும் மங்களம்மாவும் எப்படியானவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?’’ என்று கேட்டாள் சௌமியா.

மல்லிகாவால் பதில் சொல்ல முடியவில்லை. ‘‘அம்மா மகாபாரதக்கதையில் தருமன் ஒரு கெட்டவனை நாடு முழுவதும் தேடினானாம். ஆனால் கிடைக்கவில்லை. துரியோதனன் ஒரு நல்லவனை நாடு முழுவதும் தேடினானாம். நல்லவன் கிடைக்கவில்லையாம். இதிலிருந்து என்ன தெரிகிறது. தேடுகிறவர்களின் மனநிலையைப் பொறுத்தது தான் முடிவு. எனவே பயப்படாதீர்கள். நான் விரும்பிய கொள்கைகளை

உடைய மருமகன் உன்னைத் தேடி வருவான்'' என்றாள் செளமியா.

பரமசிவத்தின் மனதில் செளமியா சொன்ன வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருந்தன; ''காண்டீபன் சில நாட்களாகக் கவலையுடன் இருப்பதை அவதானித்ததால் தான் நாங்கள் வந்தோம். நீங்கள் இறங்கி வருவதாக இல்லை. அது போலச் செளமியாவும் தனது கொள்கையில் இருந்து விடுபடுவதாக இல்லை. இடையில் வந்த நாம் என்ன செய்வது?'' என்று கூறியவாறு எழுந்தார் பரமசிவம். அவரைத் தொடர்ந்து நடராசாவும் எழுந்து நடந்தார்.

வாசலில் அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தான் காண்டீபன். தகப்பனின் குணம் அவனுக்குத் தெரியும். அவர் ஒரு முரட்டுப் பிடிவாதக்காரர். கடைசி வரையும் சம்மதிக்கமாட்டார். இருப்பினும் இருதயத்தின் ஒரு மூலையில் சிறிது நம்பிக்கை இருந்தது.

''கொப்பரைப் பற்றி உனக்குத் தெரியும் தானே. அவர் வேறு இடத்தில் சம்மந்தம் பேசுகிறார். கொப்பரைப் போலச் செளமியாவும் பிடிவாதக்காரி. இருவரும் பிடித்த பிடியாக இருந்தால் என்ன செய்ய முடியும்?'' என்றார் பரமசிவம்.

“நீங்கள் சௌமியாவைப் பற்றித் தவறாக நினைக்கிறீர்கள். அவள் அருமையான பெண். கஷ்டப்படுவதை விரும்பாததால் தான் அப்படிச் சொன்னவள். சிவகுருவோடு வாழமுடியுமே…?” என்று கேட்டார் நடராசா.

# 13

மல்லிகாவின் தோட்டத்தில் நான்கு புனர்வாழ்வு பெற்ற போராளிகள் வேலை செய்தனர்.

வசந்தினி முல்லைத்தீவைச் சேர்ந்தவள். பெற்றோர் இறுதி யுத்தத்தில் காணாமற் போனமையால் காயத்திரியுடன் வந்தவள். காயத்திரியோடு புனர்வாழ்வு பெறும் போது தனது குடும்பநிலையைக் கூறியமையால் காயத்திரி இரக்கப்பட்டு மல்லிகாவுக்குச் சொல்ல அவள் அழைத்து வந்தாள். அவளது இனத்தவர்களுக்கு இராணுவத்தினர் அவளை அழைத்துச் செல்லும்படி பலமுறை கூறியும் யாரும் வராமையால் மல்லிகா பொறுப்பேற்று அழைத்து வந்தாள். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த அவள் உயர்தரப்

பரீட்சை எழுதியுள்ளாள். அதற்கான செலவுகளை மல்லிகா ஏற்றிருந்தாள்.

ரதினி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள். அவள் பதினெட்டு வயதில் திருமணமானவள். தனக்கு விரும்பிய ஒருவனைக் காதலித்தாள். அக்காதலை இருவீட்டாரும் ஏற்காததால் தான் விரும்பியவனுடன் சென்று பதிவுத் திருமணம் செய்து கொண்டாள். அதை இருவீட்டாரும் ஏற்காமையால் தனியாக வாழ்ந்து வந்தாள். அவன் சந்தை வியாபாரம் செய்பவன். ஒருநாள் சந்தையில் வியாபாரஞ் செய்யும் போது அங்கு நின்ற இராணுவத்தினர் மீது கைக்குண்டு வீசப்பட்டது. உடனே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் அவன் கொல்லப்பட்டான். அதனால் அவள் அநாதையாக்கப்பட்டாள். காலப்போக்கில் காயத்திரியின் நட்பு அவளை இயக்கத்தில் சேர்த்தது. பின் புனர்வாழ்வு பெற்ற பின் சௌமியா பொறுப்பேற்றுள்ளாள். அவள் க.பொ.த சாதாரண வகுப்பில் கற்கும் போது காதல் கொண்டு அவனுடன் சென்றமையால் அவள் படிக்கவில்லை. மல்லிகா அவளைக் கல்வி கற்கும்படி வற்புறுத்தி வருகிறாள்.

மாதவியின் பெற்றோர் மிகவும் வறியவர்கள். மாதவிக்கு ஐந்து சகோதாரிகள். அவர்களில் இருவர் ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர். ஒருத்தி பட்டதாரிப் பயிலுனர். இருவர் கல்வி கற்கின்றனர். அவள்

புனர்வாழ்வு பெற்ற பின் பெற்றோரால் பொறுப்பேற்கப்பட்டாள். ஜி.ஏ.கியு பரீட்சையில் சித்தியடைந்து கலைப்பட்டதாரிப் பரீட்சை எடுத்திருந்தாள். அவளும் மல்லிகாவின் தோட்டத்தில் வேலை செய்கிறாள்.

செல்வி பிறந்த போது தாய் இறந்துவிட்டாள். அவளுக்கு இரு சகோதரர்கள் உண்டு. தாய் இறந்ததும் தகப்பன் மறுமணம் செய்து கொண்டார். அதன் பின் மூன்று பெண்கள் பிறந்தனர். காயத்திரி போராளியின் உடை தரித்து துப்பாக்கியுடன் வரும்போது ஆவலுடன் அவளைப் பார்ப்பாள். துப்பாக்கியை வாங்கித் தனது தோளில் கொழுவிப் பார்ப்பாள். அவளுக்குத் துப்பாக்கியைக் கொழுவ விருப்பமாக இருந்தது. அதனால் அவள் காயத்திரியுடன் சென்றுவிட்டாள். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று ஏ எடுத்த அவளுக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. புனர்வாழ்வு பெற்ற பின் சௌமியாவின் வற்புறுத்தலுக்காக வெளிவாரியாகப் பட்டப்படிப்புப் படிக்கிறாள். அவளும் மல்லிகாவின் தோட்டத்தில் வேலை செய்து வருகிறாள்.

பட்டணத்து வியாபாரி ஒருவன் ஆயிரம் தேங்காய்கள் வேண்டுமென வந்திருந்தான். முன்பு கணேசன் பார்த்த வேலையை இப்போது அந்த நால்வரும் பார்த்தனர்.

ரதினிக்கு இடைக்கிடை காதலனின் நினைவு வரும். அப்போது அவள் தனிமையில் இருந்து அழுவாள். அவளைக் காணாவிட்டால் காயத்திரி அவளைத் தேடி வருவாள். அவள் கிணற்றடிக்கு அருகில் உள்ள பலாமரத்தின் அருகிலேயே இருக்க விரும்புவாள். அது மல்லிகாவைத் திருமணம் செய்த போது மாதவன் நட்ட மரம். அதற்கருகில் மல்லிகா அடிக்கடி வந்து கலங்குவாள். அந்த மரத்தைத் தொட்டுப் பார்த்தால் ஆறுதல் கிடைக்கும் என்று மல்லிகா சொல்வாள். அதனால் ரதினி அதற்குக் காதலர் மரம் என்று நாமமிட்டு அதைப் பூசித்து வந்தாள். அந்த மரத்தைச் சுற்றி ஒரு கயிறு கட்டி அதனுள் ரதினி பூக்களைச் செருகி விடுவாள். அது மல்லிகாவுக்குப் பிடித்திருந்தது. அதனால் மல்லிகா அந்த மரத்தினடியில் சிட்டி விளக்கொன்றை வைத்துக் கொளுத்தினாள். அதை இருவரும் வழிபட்டு வந்தனர்.

பலாமரத்தினருகில் இருந்து கண் கலங்கிய ரதினியைக் காயத்திரி அனுதாபத்துடன் பார்த்தாள். இயக்கத்தில் இருக்கும் போதும் அவள் தனது காதலனின் நினைவு வந்தால் பைத்தியக்காரி போல நடந்து கொள்வாள்.

‘‘காதலை எதனோடும் ஒப்பிட முடியாது. அந்த இழப்பைச் சீர்செய்யவும் முடியாது. கொஞ்ச நேரம் அழுது விட்டு வா’’ என்று சொல்லும் போது

காயத்திரியின் கண்கள் கலங்கின. அவளுக்குப் பாண்டியனின் நினைவு வந்தது.

பாண்டியன் சுறுசுறுப்பானவன். எந்த வேலையையும் உடனே முடித்து விடவேண்டும் என நினைப்பவன். அதனால் அவனைத் தலைமைப்பீடத்திற்குப் பிடிக்கும்.

காயத்திரி இருந்த படையணிக்கு அவனே தலைமை தாங்கினான். ஒரு தலைவருக்குரிய அத்தனை பண்புகளும் அவனிடமிருந்தன.

அன்று அவனின் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட போராளிகள் தாக்குதலில் ஈடுபட்டனர். காயத்திரியும் அப்படையணியில் இருந்தாள்.

அவர்கள் புறப்படுமுன் பாண்டியன் அவளைத் தனிமையில் சந்தித்தான்; ‘‘காயத்திரி, இன்று நாமிருவரும் போருக்குச் செல்கிறோம். போரில் மரணம் வரலாம். அங்கங்களை இழக்கலாம். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இயக்கத்தில் சேர்ந்தவனுக்கு எப்போதும் மரணம் வரலாம். நான் உன்னை விரும்புகிறேன். உயிருக்குயிராக விரும்புகிறேன். அதற்காகப் போராட்டத்தில் ஈடுபாடு கொள்ளவில்லை என்று நினைக்க வேண்டாம். போராட்டம் தான் என் உயிர் மூச்சு. உன் மீது கொண்ட காதல் எனது விருப்பம். நீ என்னை விரும்பவில்லை. கட்டாயப்படுத்திய

போது சம்மதம் தெரிவித்தாய். நாம் இருவரும் கலந்து பேசவில்லை. கடிதம் எழுதவில்லை. நான் உன் மீது கொண்ட காதலைப் பற்றி நிறைய எழுதியுள்ளேன். அதை வாகீசனிடம் கொடுத்துள்ளேன். அவன் காலம் வரும் போது தருவான்.'' அதன் பின் பாண்டியனை அவள் காணவில்லை. இறந்தவர்களின் உடல்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் போது அவளும் செலுத்தினாள். மூன்று நாட்கள் கழிய வாகீசன் ஒரு கட்டுக் கடிதங்களைக் கொண்டு வந்து அவளிடங் கொடுத்தான். அவள் அதை வாசித்த பின்பு தான் அவன் மீது காதல் கொண்டாள். அதனால் அவளுக்குக் காதலின் வலி தெரியும்.

``அக்கா, நான் அவரோடு காதல் கொண்ட நாட்கள் தான் உயிரான நாட்கள். அவர் என்னை உயிருக்குயிராக நேசித்தார். அவர் பணக்காரர். தாயும் தகப்பனும் அரசசேவையில் உள்ளனர். இவர் படிப்பைக் குழப்பி விட்டுக் காதலித்தது தான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பெற்றோரின் நெருக்கடியைத் தாங்க முடியாது என்னை அழைத்துக் கொண்டு தனது வீட்டுக்குச் சென்றார். பெற்றோர் ஏற்கவில்லை. அதனால் நண்பனின் உதவியோடு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து வாழ்ந்தோம். இவர் நல்ல கைராசிக்காரர். அதனால் வியாபாரம் ஓகோவென்று நடந்தது. ஒரு வருட காலத்தில் ஒரு இலட்ச ரூபா சம்பாதித்து விட்டார்.

இன்னும் ஐந்து வருடங்களில் நாம் பெரிய பணக்காரராகி விடுவோம். அதன் பின் எம்மை எதிர்த்தவர்கள் எம்மைச் சேர்ப்பார்கள். பணம் தான் சமூக அந்தஸ்தைக் கொடுக்கிறது. நாம் பத்துப் பதினைந்து இலட்ச ரூபாவைச் சேமித்தால் பின் பெருவாழ்வ வாழலாம். அதுவரை நாம் குழந்தைகள் பெறக்கூடாது'' என்றார். நானும் சம்மதித்தேன். அதற்கிடையில் அவர் போய் விட்டார்.'' விம்மினாள் ரதினி.

''எல்லாம் அவரவரின் விதிப்பயன். எம்மால் என்ன செய்ய முடியும். விதியை வெல்ல முடியுமா என்ன? இன்னும் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்கப் போகிறோமோ தெரியவில்லை'' என்றாள் காயத்திரி.

''நான் திருமணம் செய்து பத்து வருடங்களாகின்றன. ஒரு வருடம் தான் நான் அவரோடு வாழ்ந்தது. அப்போது பொருளாதார நெருக்கடி இல்லை. உறவினர்கள் தான் கொடுமையாக நடந்து கொண்டனர். அவரின் பெற்றோர் மிகமிகக் கொடுமையாகத் தண்டித்தனர். அவர் இறந்த போது ஒப்புக் கூட வரவில்லை. அவரின் மரணத்தில் பெரும் சிக்கல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் தனித்து நின்றே சமாளித்தேன். அவர் இறந்து மூன்று மாதங்கள் கூடக் கழியவில்லை. அவருடைய சகோதரிக்கு வெளிநாட்டு மாப்பிளையைத் திருமணம் செய்தார்கள். மிகமிக

ஆடம்பரமாக அத் திருமணம் நடைபெற்றது. அவருக்கு ஐந்து சகோதரர்கள். ஐந்து பேரும் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். இப்போ அவரின் தாய் பாத்ரூமில் வழுக்கி விழுந்து காலை உடைத்துக் கொண்டாள். அதனால் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவரைப் பராமரிக்கும்படி அவரது ஐந்து சகோதரர்களும் ஓயாது போன் பண்ணுகிறார்கள். நான் தவித்திருந்த காலத்திலை உதவாதவை இப்ப சொந்தங் கொண்டாடீனை. வசதியான வீடு கைநிறையப் பணம் அனுப்புகிறோம். வீட்டை போயிருந்து அம்மாவையும் அப்பாவையும் பார்.'' என்கிறார்கள். அவர்களைப் பராமரிக்கத் தான் நான் தேவை.'' விம்மினாள் ரதினி.

''வாழ்க்கை என்பது சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. நாம் தானதர்மம் எதற்காகச் செய்கிறோம்....? ஏன் கடவுளை வணங்குகிறோம் நல்வாழ்வுக்காகத் தானே. பொதுவாக எந்த ஒரு செயலிலும் பொது நலத்தை விடச் சுயநலம் தான் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் அவையின் கதைகளை விடு, உனக்கு விருப்பமானால் அங்கு சென்று அவர்களைப் பராமரி'' என்றாள் காயத்திரி.

''இது நாள்வரையும் என்னை ஒரு பொருட்டாக நினைக்காதவர்கள் இப்போ தமது தேவைக்காக நடிக்கிறார்கள். தமது தேவை முடிந்தபின் எப்படி

நடத்துவார்கள் என்று தெரியாது. நான் இங்கு மனமகிழ்வுடன் வாழ்கிறேன். அதை விட மல்லிகா அக்காவும் சௌமியாவும் நீங்களும் எனது நலனில் அக்கறை கொண்டுள்ளீர்கள். இங்கு வாழ்வதால் தான் எனது துன்பங்களை மறக்க முடிகிறது. இது போதும் எனக்கு. இவர்கள் அக்கறை உள்ளவர்களாக இருந்தால் அவரைத் தாம் வாழும் நாட்டிற்கு அழைத்திருப்பார்கள். இல்லாவிட்டால் முன்பே கதைத்திருப்பார்கள். அவர் இறந்து ஒன்பது வருடங்கள் முடிந்து விட்டன. இந்த ஒன்பது வருடங்களும் தேடாதவர்கள் இப்போ தேடுவது தமது பெற்றோரைப் பராமரிக்க. அதற்கு நான் ஒருபோதும் இடங் கொடுக்கமாட்டேன். தாய் தகப்பனில் எவ்வளவு அக்கறை. ஒரு நாளைக்குப் பத்து முறை ரெலிபோன் பண்ணுகிறார்கள். அதனால் இப்போது நான் ரெலிபோனை ஓவ் பண்ணி வைத்துள்ளேன்'' என்றாள் ரதினி.

அவள் சொல்வது காயத்திரிக்கு நியாயமாகப்பட்டது; ‘‘காதலிப்பவர்கள் பாவம் செய்தவர்களா…?'' என்று எண்ணினாள் காயத்திரி.

# 14

ரதினியும் காயத்திரியும் இருந்த இடத்திற்கு மாதவி வந்தாள். அவளின் தந்தை வீரசிங்கம் இயக்கத்தின் தூண். இயக்கத்திற்காக எந்த வேலையையும் செய்வார். வீட்டில் எந்த நேரமும் போராளிகள் இருப்பார்கள். அவர்கள் விரும்பும் தீன்பண்டங்களை அவரது மனைவியும் பிள்ளைகளும் செய்து கொடுப்பார்கள். காயத்திரி அங்கு அடிக்கடி வருவாள். மாதவி அவளுடன் நெருங்கிப் பழகுவாள். அந்த நெருக்கம் அவளை இயக்கத்தில் சேர்த்து வைத்தது. அவள் இயக்கத்திற்குச் செல்லும் போது ஏ.எல். பரீட்சை எழுதியிருந்தாள். வீரசிங்கத்திற்கு ஆறு பெண் பிள்ளைகள். அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. கல்வி அறிவுள்ள மாதவி இயக்கத்திற்குச் சென்ற சில மாதங்களில் கல்விக்குப் பொறுப்பானவளானாள்.

வீரசிங்கத்திடம் குடியிருக்கக் காணி இல்லை. அந்த ஊரில் கனடாவுக்குச் சென்ற துரைசிங்கத்தின் வீட்டில் அவர்கள் குடியமர்ந்தனர். தொண்நூற்றைந்தாம் ஆண்டு இடம்பெயர்ந்து வந்த பின் பட்டணத்திற்குச் சென்ற வீரசிங்கம் வீட்டுக்கு வரவில்லை. மாதவியின் தாயும் பிள்ளைகளும் அவரைத் தேடி அலைந்தது தான்

மிச்சம். அவரைப் பற்றிய எந்தத் தகவலையும் அறிய முடியவில்லை.

வீரசிங்கம் குத்தகைக்கு நிலம் எடுத்து விவசாயம் செய்து வந்தார். கரண்ட் இல்லாமையால் நீர் இறைக்கும் இயந்திரத்தால் தான் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சினார். அந்தக் காலத்தில் மண்ணெண்ணைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. பெரும் செலவு செய்து பயிரை நட்டு விட்டு நீர் பாய்ச்சுவதற்காக மண்ணெண்ணைக்கு அலைவது தான் மிச்சம். மணணெண்ணெய் கிடைக்காததால் பயிர்களெல்லாம் அழிந்ததால் அவர் தோட்டச் செய்கையைக் கைவிட்டு விட்டு கூலிவேலை செய்து வந்தார்.

அவர் காணாமற் போன பின்பு அவரின் மனைவி மகாலட்சுமி மல்லிகாவின் தோட்டத்தில் வேலை செய்து வந்தாள். பாடசாலை நேரம் தவிர ஐந்து பெண்களும் தென்னந்தோப்பில் வேலை செய்தனர். மல்லிகா மிகுந்த இரக்கக்குணம் உள்ளவள். பார்த்துப் பாராது கூலியைக் கொடுப்பாள். அத்துடன் பிள்ளைகள் படிக்க உதவியும் செய்வாள்.

‘‘நடந்தவையைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் எதிர்காலத்தில் எதுவும் செய்ய முடியாது. உலகில் வாழ்பவர்களில் துன்பப்படாதவர்கள் யார்? நாங்கள் இயக்கத்திலை பயிற்சி பெற்றனாங்கள்.

எதற்கும் அஞ்சாது துணிவுடன் செயலாற்ற வேண்டுமென்பதே எமது பயிற்சியின் நோக்கம். அத்துடன் புனர்வாழ்வு பெறும் போது ஏதோ சில பயிற்சிகளை எமக்கு வழங்கினர். நாம் பெற்ற பயிற்சி எதிர்கால நல்வாழ்வுக்கு உதவாவிட்டாலும் கவலை கொள்வதாலோ, தயங்குவதாலோ, தாமதிப்பதாலோ வாழ்வு முன்னேறாது. கலங்காத மனத்துடன் துணிவோடு செயற்பட வேண்டும் என்றார்கள். கலங்குவதாலும், பழையதை எண்ணிக் கவலைப்படுவதாலும் வாழ்வின் துன்பங்கள் போய் விடுமா என்ன? நடந்ததை நினைத்து துக்கம், கவலை கொள்ளாது துணிவுடன் செயலாற்ற வேண்டும் என்று கூறும் காயத்திரி அக்காவா சோர்ந்து போனா…? ஆச்சரியமாக இருக்கு. உங்கள் துணிவு எங்கே? வீரம் எங்கே?'' என்று கேட்டாள் மாதவி.

காயத்திரி வெறுமையாகச் சிரித்தாள்; ''எல்லாம் உபதேசிப்பதற்கு நல்லதாக இருக்கும். வாழ்க்கை என்று வந்தால் தான் அதன் தார்ப்பரியம் தெரியும். தாங்கமுடியவில்லை. நாம் எதிர்பார்த்த சமுதாயம் ஒன்று. ஆனால் அதற்கு எதிர்மாறான சமூகத்தில் தானே வாழ வேண்டியிருக்கு. சுயநலனும், போட்டியும் பொறாமையும், பகையும் ஆதிக்கமும் உள்ள சமூகத்தில் எம்மால் வாழமுடியாது. பொருளாதாரம் தான் வாழ்க்கை அல்ல. அக்காவிடம் எல்லாம் இருக்கு ஆனால் சௌமியாவை நல்ல முறையில் வாழ வைக்க முடியவில்லையே. அதை

நினைக்கக் கவலையாக உள்ளது'' விம்மினாள் காயத்திரி.

''எல்லாம் விதிப்பயன்'' என்றாள் ரதினி.

''விதியென்று எதுவும் இல்லை. தன்நம்பிக்கையில்லாதவர்கள் தான் தடைகளையும் கோட்பாடுகளையும் விதியென்கின்றனர். விதியென்று எடுத்துக் கொண்டால் காண்டீபனின் தந்தை பணம் பொருளைக் கேட்பாரா…? உழைக்கத் தெரியாதவர்கள் பிறரின் தோளின் மீது ஏறிச் சவாரி செய்ய விரும்புகிறார்கள். உழைப்பவன் விதியை நம்பமாட்டான்'' உணர்ச்சி வசப்பட்டாள் காயத்திரி.

''யாழ்ப்பாணப் பொம்பிளைகள் அனைவருக்கும் சீதனத்தால் கலியாணம் குழம்ப வேண்டுமென்று விதியா? ஒரு மேசனுக்கு, ஒரு சைக்கில் றிப்பியர் பண்ணுறவனுக்குள்ள மதிப்பு ஒரு பட்டதாரிப் பெண்ணுக்கில்லை. சென்ற வாரம் எனது தங்கை தாரிணிக்கு மேசன் ஒருவனைக் கலியாணம் பேசி வந்தான் ஒரு தரகன். வீடுவாசல் இல்லை. அதனால் இருபத்தைந்து இலட்சம் சீதனமாகத் தரட்டாம். இது எந்த வகையிலை நியாயம்? ஒரு பட்டதாரிக்கு மேசனைப் பேசலாமா…? பேசினாலும் பரவாயில்லை இருபத்தைந்து இலட்சம் காசு வேணுமாம். முன்னைய ஆளாக

இருந்தால் காதிலை வெடி வைச்சிருப்பன்'' என்று ஆத்திரப்பட்டாள் மாதவி.

''கலை பண்பாடு கலாசாரம் என்று பேசுவதில் வீரர்கள் தான் எம்மவர். பெண்ணைத் தாயாக பூமியாக நதியாக பெறுமதி மிக்க பொருட்களாக ஏன் தெய்வமாகக் கூட நினைக்கும் எம்மவர் கலியாணம் என்றதும் நாயாகக் கூட மதிக்கிறார்களில்லை. இது இனத்துக்கே அவமானம்'' என்றாள் காயத்திரி.

அப்போது வீட்டு முற்றத்தில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து காண்டீபன் இறங்கி வந்தான். அவனது முகம் சில நாட்களாக மழிக்கப்படாமையால் கறுத்திருந்தது. காயத்திரி அவனருகே சென்று சொன்னாள்; '' அக்கா இல்லை. சௌமியா வேலைக்குப் போய்விட்டாள். நீங்கள் மூன்று நாட்களாக வேலைக்கு வரவில்லை என்று சொன்னாள்''

காண்டீபன் எதுவும் பேசாமல் காயத்திரியைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனாகச் சொல்லட்டும் என்று காத்திருந்தாள் காயத்திரி.

''அப்பா எனக்குப் பெண் பார்த்து விட்டார். என்னால் அப் பெண்ணை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. பத்து வருடங்களாகச் சௌமியாவை எண்ணி மகிழ்ந்த மனம் அவளை ஏற்றுக்கொள்ள

மறுக்கிறது. ஒருத்தியை நினைத்துக் கொண்டு இன்னொருத்தியுடன் எப்படி வாழ்வது?'' கலங்கினான் காண்டீபன்.

காயத்திரிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. மௌனமாக நின்றாள்; ''எனக்குத் துணிவு இருக்கு. காதலிப்பவர்களின் பெற்றோர் பலர் காதலை விரும்புவதில்லை. காதலிப்பவர்கள் திருமணம் செய்தால் தாம் தற்கொலை செய்வோம் என மிரட்டுவார்கள். எனினும் அப்படிச் செய்பவர்கள் மிகமிகக் குறைவு. அதைச் சௌமியா உணர்கிறாளில்லை. என்னுடன் வா என்று கேட்டால் வரமறுக்கிறாள். என்னால் அவளின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது'' என்றான் காண்டீபன்.

''சௌமியா பெருந் துன்பப்பட்டவள். இனியும் துன்பப்பட அவள் விரும்பவில்லை. காதல் என்பது வாழ்வின் ஒரு பகுதியே தவிர வாழ்க்கை அல்ல. காதலிப்பவர்கள் எல்லோரும் திருமணம் செய்து கொள்வதில்லை. காதலித்துத் திருமணஞ் செய்த பலர் இன்பமாக வாழவில்லை. காதலிப்பது இன்பமானது. சுகமானது தான். அதற்காகக் காதலித்துக் கொண்டு இருக்க வேண்டுமே தவிரக் கல்யாணம் செய்யக்கூடாது'' என்று சிரித்தாள் காயத்திரி.

“நான் உங்களது அக்காவைச் சந்தித்து எனது நிலையைக் கூறி அதற்கு முடிவு சொல்லும்படி கேட்கத் தான் வந்தேன். அவா இல்லை. பிறகு வருகிறேன்” என்று புறப்பட்டான் காண்டீபன்.

“அக்காவின் முடிவைச் சௌமியா ஏற்றுக்கொள்ள மாட்டாள். அதை விடச் சௌமியா ஏற்காத முடிவை அக்கா அவள் மீது திணிக்கமாட்டா. பெற்று வளர்த்து ஆளாக்கிக் கனவுகளோடு இருக்கும் பெற்றோரை ஏமாற்றி விட்டுத் திருமணம் செய்வது நிம்மதியான வாழ்க்கையைத் தராது. அதற்கு நல்ல உதாரணம் அக்கா. அக்கா காதலித்துத் திருமணம் செய்ததை இருவீட்டாரும் இன்றுவரை ஏற்கவில்லை. காதல் என்பது கலியாணம் வரை சுவைக்கும். கஷ்டம் கரைச்சல்கள் வந்தால் வாழ்வு துன்பமாகி விடும். பொருத்தம் பார்க்காமையால் தான் துன்பங்கள் வந்தன என்ற எண்ணம் வரும். என்னைப் பொறுத்த வரை உங்களைச் சௌமியா காதலிக்கவில்லை. அக்கா சிறுவயதிலிருந்தே தனது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களைச் சொல்லிச் சொல்லித் தான் வளர்த்தவா. அதனால் அவளுக்கு காதலில் நம்பிக்கை இல்லை. அதனால் தான் அவள் உங்களையல்ல வேறு எவரையும் விரும்பவில்லை. இருந்தும் நீங்கள் அவளை விரும்பிவிட்டீர்கள்…” மூச்சுவிட்டாள் காயத்திரி.

காண்டீபன் அவள் சொல்லப் போவதை ஆவலோடு எதிர்பார்த்தான்; ‘‘அவள் விரும்பவில்லை. எனினும் உங்கள் பெற்றோர் விரும்பி வந்து கேட்டிருந்தால் அவள் முழு மனதுடன் சம்மதித்திருப்பாள். ஆனால் உங்களது தந்தைக்கு எமது குடும்பத்தில் பெண் எடுக்கத் துளியும் விருப்பமில்லை. நீங்கள் கேட்டதற்காக ஒப்புக்கென்றாலும் அவர் வந்திருக்கலாம். ஆனால் வரவில்லை. அதனால் அவள் உங்களின் வீட்டுக்கு வந்தாள். அதையும் உங்கள் தந்தை விரும்பவில்லை. எமக்கென்று யார் இருக்கிறார்கள்? அக்கா காதல் திருமணம் செய்ததால் இருந்த உறவுகள் யாவும் பிரிந்துவிட்டன. அதை விட அத்தானின் உறவினர்கள் பலர் ஏழைகள். அவர்களை உங்களின் தந்தை ஏற்கமாட்டார். அவர்களிற் சிலர் உங்கள் வீட்டில் கூலிவேலை செய்பவர்கள்.’’

‘‘மதிப்பான குடும்பத்தில் கலியாணம் செய்தல் வேண்டும். அவள் கெட்டித்தனமாகப் படித்து வைத்தியராகி விட்டாள். அவளது உறவினர்கள் ஏழைகள். கூலிவேலை செய்பவர்கள். அவர்களோடு சமமாகப் பந்தியில் இருந்து நான் எப்படிச் சாப்பிடுவது. கல்யாணம் முடிந்தால் அவர்கள் வந்து போவார்கள். சௌமியா திமிரானவள். தனது உறவினர்களை விட்டுக் கொடுக்கமாட்டாள். அதனால் அவளை மறந்து விட்டு நான் பேசும் பொம்பிளையைச் செய். ஓரிரு நாட்களுக்குக்

கவலை இருக்கும். அதைப் பற்றிய யோசனை இருக்கும். அதன் பின் எல்லாம் மறைந்து விடும்'' தகப்பன் சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் இடித்தன.

அப்போது வெளியே சென்ற மல்லிகா வீட்டுக்கு வந்தாள். அவனுக்கு வேறு இடத்தில் திருமணம் பேசி முற்றான விசயத்தை ஏற்கனவே சௌமியா கூறியிருந்தாள். அதனால் காண்டீபன் ஏன் இங்கு வந்தானென யோசித்தாள்

``நான் வந்த விசயத்தை உங்கள் தங்கையிடம் கூறியிருக்கிறேன். என்னால் எதையும் சிந்திக்க முடியவில்லை. தங்கையிடம் கேட்டறிந்த பின்பு முடிவைச் சொல்லுங்கள்'' என்றான் காண்டீபன்.

``உங்கள் தந்தை தனக்குச் சமமான இடத்தில் பெண்ணைத் தெரிவு செய்து முடிவும் கட்டிவிட்டதாக நான் அறிந்தேன். இனி முடிவு சொல்ல என்ன இருக்கிறது? பெற்றோரின் மனதைப் புண்படுத்தாது நடந்து கொள்ளுங்கள்'' என்று கூறிக் கரங் குவித்தாள் மல்லிகா. அவளைத் துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் காண்டீபன். உலகம் இருண்டு விட்டதைப் போலிருந்தது அவனுக்கு.

# 15

சௌமியா வீட்டுக்கு வந்த போது காண்டீபன் சென்று கொண்டிருந்தான். காண்டீபனைக் கண்டதும் சௌமியா தான் ஓட்டி வந்த வாகனத்தை ஒழுங்கையில் ஓரமாக நிறுத்தினாள். அதைக் காண்டீபன் கவனித்ததாகக் காட்டாது வேகமாகச் சென்று விட்டான். அதைச் சௌமியா பெரிதாக நினைக்கவில்லை. காரை முற்றத்தில் நிறுத்திவிட்டு வீட்டினுள்ளே சென்றாள்.

வீட்டினுள் மாதவியின் தாய், மகாலட்சுமி, காயத்திரி, மாதவி ஆகியோர் இருந்தனர். சௌமியாவைக் கண்டதும் மகாலட்சுமி எழுந்தாள். அவளது கையில் ஒரு கடிதம் இருந்தது.

“அம்மா உனது கருணையால் தான் எமது குடும்பம் வாழ்கிறது. யாருமற்ற நிலையில் அநாதையாய் இருந்த எம்மை அழைத்து வந்து உணவும் உறைவிடமும் தந்தனி. படிக்கமாட்டன் என்று அடம்பிடித்த மாதவியைப் படிக்கப் பண்ணியபவள் நீ. உனது கரைச்சலுக்காகவே அவள் பீ.ஏ பரீட்சை எடுத்தாள். அதன் பெறுபேறு வந்துள்ளது. மாதவி பரீட்சையில் சித்தியடைந்து பட்டதாரியாகி விட்டாள். அதை நான் இதுவரை யாருக்கும் சொல்லவில்லை. இந்தா கடிதம்” என்று நீட்டினாள் மகாலட்சுமி.

மாதவி திகைத்துப் போனாள். காலை ஒன்பது மணிக்கு வந்த கடிதத்தை இரவு ஆறு மணிக்கு வெளிப்படுத்தியதை நினைக்க அவளுக்கு ஆத்திரம் வந்தது. எனினும் அதை வெளிக்காட்ட அவளால் முடியவில்லை.

காயத்திரியால் தான் அவர்கள் மல்லிகாவுடன் நட்பு வைத்தனர். அவள் வேலைக்கு வந்தன்று சௌமியா அவளின் அருகே வந்து கேட்டாள்; ‘‘நீ எது வரை படித்திருக்கிறாய்?’’

‘‘ஏ.எல் சித்தியடைந்துள்ளேன். கம்பஸ்சுக்குத் தெரிவாகினனான் போகவில்லை.’’

‘‘அப்படியா…?’’ என்று கேட்டுவிட்டு சிறிது நேரம் யோசித்தவள் பின்பு சொன்னாள்; ‘‘ இப்போ இறக்கும் வரையும் கல்வி கற்கக் கூடிய வசதிகள் உண்டு. தொடர்ந்து படி.’’ என்றாள் சௌமியா.

‘‘ஏற்கனவே எனது சகோதரிகள் ஐவரும் படிக்கிறார்கள். அப்பா இல்லாததால் வருமானம் எதுவும் இல்லை. நான் உழைத்துத் தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்’’

‘‘நீ நினைப்பது சரி. இப்போ எக்ஸ்ரேணலாய்ப் படிக்கலாம். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துவிட்டு

சனி, ஞாயிறு தினங்களில் வகுப்புக்குப் போ. ஏனைய தினங்களில் இங்கு வேலை செய்யலாம். அத்துடன் நீங்கள் அனைவரும் விரும்பினால் எமது தோட்டத்தில் வேலை செய்யலாம்'' என்றாள் சௌமியா.

''உங்களுக்கேன் வீண்கரைச்சல். எனக்குப் படிக்க விருப்பமில்லை'' என்றாள் மாதவி.

''ஏன் படிக்க விரும்புகிறாயில்லை? பெண்களுக்கு உயிரானது கல்வி. இன்றைய சமூகநிலையில் கற்ற பெண்கள் ஒரு வேலையைத் தேடிக் கொண்டால் உயிர் உள்ளவரை அவ் வேலை காப்பாற்றும். நீ இயக்கத்திற்குச் சென்றவள். இயக்கம் இருந்த போது இயக்கத்தினைத் தேவராக நினைத்துப் போற்றியவர்கள் இயக்கம் அழிந்த பின் நாயாகக் கூட மதிப்பதில்லை. அத்துடன் கற்று உத்தியோகம் பார்க்கும் பெண்களைக் கூடச் சீதனமின்றி ஒரு மடையன் கூடக் கல்யாணம் செய்யமாட்டான். உன்னை யார் செய்வார்கள்? உனக்கு என்ன வேலை தெரியும்...? அதனால் படி. அதற்கு நான் உதவி செய்கிறேன்'' சௌமியா கூறியது காதில் ஒலித்தது.

''மிகவும் நன்றி. உங்களால் நான் ஒரு பட்டதாரியாகி விட்டேன்'' கண் கலங்கியபடி அவளது பாதத்தைப் பற்றினாள் மாதவி.

“சீ இதென்ன….. எழும்பு” என்று பரபரத்தாள் செளமியா.

“நீங்கள் என்னிலும் வயது குறைந்தாலும் எனக்குத் தெய்வம் போன்றவர். உங்கள் உதவியில்லாவிட்டால் நான் கற்றிருக்க முடியாது. இயக்கத்தில் இருக்கும் போது சமூகத்தை நாம் நன்றாகப் புரியாமையால் தான் இநத நிலையை அடைந்தோம். உங்களைப் போலப் பலர் இருந்தால் புனர்வாழ்வு பெற்றவர்களுக்கெல்லாம் ஒளிமயமான எதிர்காலம் அமையும்” கண் கலங்கினாள் மாதவி.

“அது சரி. காண்டீபன் எமது வீட்டின் அருகே என்னைக் கண்டும் காணாதவர் போலச் செல்கிறார். இங்கு ஏன் வந்தவர்?” என்று கேட்டாள் செளமியா.

“அவருக்குத் திருமணம் முற்றாகிவிட்டதாம். அப்படியிருந்தும் அவரின் மனதில் ஒரு நம்பிக்கை இருந்திருக்கு. கடைசி நேரத்திலென்றாலும் நீ ஒப்புக்கொண்டால் உன்னைத் திருமணம் செய்யலாம் என்று நம்பி வந்தார். அக்கா உங்கள் பெற்றோரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தா.” என்றாள் காயத்திரி.

“அவருக்கு திருமணம் முற்றாகிவிட்டதென்ற செய்தி எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. பல காலமாக நெஞ்சை உறுத்திய விசயம் இன்று நீங்கிவிட்டது.” மகிழ்வுடன் சிரித்தாள் சௌமியா.

“இரண்டு மகிழ்ச்சியான விடயங்களையும் நாம் இன்று இரவு கொண்டாடுவோம். அம்மா கணேசன் மாமாவைக் கொண்டு கோழி உரிப்பீ. அவர்களையும் சாப்பாட்டுக்கு வரச்சொல்” என்றாள் சௌமியா.

மகாலட்சுமி திகைத்துப் போனாள், “உண்மையில் மல்லிகா அக்கா கொடுத்து வைத்தவா. சௌமியாவைப் போன்றதொரு பிள்ளையைப் பெறத் தவம் செய்தல் வேண்டும். மாதவன் ஐயா இவற்றையெல்லாம் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை” விம்மினாள் மகாலட்சுமி.

அதைக் கேட்டதும் மல்லிகாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. விம்மினாள். தாயைப் பார்க்க சௌமியாவுக்குத் துன்பமாக இருந்தது. அப்போது கணேசன் அங்கே வந்தார்.

“அம்மா, மாமா வருகிறார். போய்க் கோழிகளைப் பிடித்துக் கொடுங்கோ.” என்றாள் சௌமியா.

“மாமா இன்று நான் மிகமிகச் சந்தோசமாக இருக்கிறேன். இந்தாருங்கோ இதில் ஆயிரம் ரூபா

இருக்கு. எனது சந்தோசத்தை நீங்கள் கொண்டாடுங்கோ. இன்றைக்கு உங்களுக்கு ஒரு இனிப்பான செய்தி சொல்லப் போகிறேன்'' என்றாள் சௌமியா மகிழ்வுடன்.

``நீ சொல்கின்ற செய்திகளெல்லாம் எனக்கு இனிப்பான செய்தி தானே. அதை விட இனிப்பாக என்ன சொல்லப் போகிறாய்?'' ஆவலோடு கேட்டார் கணேசன்.

``அது இரகசியம். இரவு சாப்பிட்டு முடிந்தவுடன் கேளுங்கள் சொல்கிறேன்.'' கண் சிமிட்டினாள் சௌமியா.

கணேசன் அவள் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றார். அவள் உருவத்திலும் சரி நடத்தையிலும் சரி அச் சொட்டாக மாதவன் தான்.

மாதவனுடன் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்தவன் தான் கணேசன். இருவரும் உயிர் நண்பர்கள். கணேசன் இடையில் படிப்பை நிறுத்தி விட்டு விவசாயம் செய்தான். அப்போது தனது மாமன் மகளை விரும்பித் திருமணம் செய்து கொண்டான். அவனுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் அங்கஜன் கணக்காளராகப் பதவி வகிக்கிறான். இரண்டாவது மகள் கலைமகள். பட்டதாரி ஆசிரியை. திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தாய். மூன்றாவது மகள் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கல்வி கற்கிறாள்.

மாதவன் மல்லிகாவைக் காதலித்த போது எல்லா வகையிலும் உதவியாக இருந்தவன் கணேசன். அவளைத் திருமணம் செய்த பின் அப்பெரும் தோப்பை மாதவன் உருவாக்குவதற்கு உதவியாக இருந்தவன். அவர்கள் இருவரும் சேர்ந்தே இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குச் சென்றனர். தென்மராட்சியில் இருப்பதிலும் பார்க்க வன்னிக்குச் சென்று வாழலாம் என்று மாதவன் விரும்பினான். ஆனால் கணேசனுக்கு வயதான தந்தை பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டிருந்ததால் அவன் வன்னிக்குச் செல்ல விரும்பவில்லை. அதனால் மாதவன் மட்டும் வன்னிக்குச் சென்றான்.

தென்மராட்சியை இராணுவம் பிடித்த பின்பு அங்கு இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய போது மல்லிகா கணேசனது குடும்பத்தினருடன் ஊருக்கு வந்தாள். அன்றிலிருந்து மல்லிகாவுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் கணேசன் தான் செய்து வருகிறான். இரு குடும்பங்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றன.

''என்ன இனிப்பான செய்தியைச் சௌமியா கூறப் போகிறாள்'' என்று சிந்தித்துச் சிந்தித்து கணேசனுக்கு விசர் வந்துவிட்டது. அவள் 'மாமா' என்று அழைத்தால் கணேசன் உருகிப் போவான். அப்படித் தான்

சௌமியாவும் இருந்தாள். அவனை ஒரு நாள் பார்க்காவிட்டாலும் தேடிச் சென்று விடுவாள். அவனுக்கு இப்போ மருத்துவம் பார்ப்பது அவள் தான். கணேசன் மாதத்தில் ஓரிரு முறை மதுபான வகைகளைக் குடிப்பான். அப்படிக் குடித்தால் சௌமியாவின் வீட்டுக்கு வரமாட்டான். குடிப்பது சௌமியாவுக்குப் பிடிக்காது. இருந்தும் அவனைக் கண்டிக்க மனம் வராமையால் அவள் கண்டிக்கமாட்டாள். கணேசனுக்கு அறுபது வயதிருக்கும். வயது சென்றவர் தனது விருப்பத்தை நிறைவேற்றட்டும் என்று நினைப்பாள்.

கோழிகளைப் பிடித்து வந்து மல்லிகா கொடுக்கும் போது கணேசன் சொன்னான்; ‘‘தங்கச்சி, இன்று மருமகள் சாப்பிட்ட பின்பு ஏதோ ஒரு இனிப்பான செய்தியைக் கூறப் போகிறாளாம். அப்படி என்ன செய்தியாக இருக்கும். அவள் சொன்ன நேரத்தில் இருந்து எனக்கு யோசித்து யோசித்து விசரே பிடித்து விடும் போலத் தெரிகிறது. அதோடு எனது செலவுக்கென்று ஆயிரம் ரூபா தந்தவள். அதைச் செலவு செய்யவும் மனம் வரவில்லை’’ என்றார் கணேசன்.

‘‘இனிப்பான செய்தியோ….. அப்படி என்ன..?’’ மல்லிகாவுக்குப் புரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள விரும்பிச் சௌமியாவின் அருகே வந்தாள்; ‘‘மாமா மிகவும் சந்தோசமாக இருக்கிறார். ஆயிரம் ரூபா

குடுத்தனியாம். அதோடை ஒரு இனிப்பான செய்தியை இரவு சாப்பிட்டு முடிந்ததும் சொல்லுறதாய்ச் சொன்னனியாம். அதாலை அவர் விசர் பிடித்த மாதிரி இருக்கிறார். அவர் சொன்ன பிறகு எனக்கும் நிம்மதியில்லை.'' என்றாள் மல்லிகா.

சௌமியா பூரணமாகச் சிரித்தாள். அப்படி அவள் மகிழ்ச்சியாகச் சிரித்ததை அவள் கண்டதில்லை. மல்லிகாவுக்கு அருகே வந்த சௌமியா அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டாள். அதன் பின் காதினுள் கிசுகிசுத்தாள். அதைக் கேட்டு உறைந்து போனாள் மல்லிகா.

# 16

தனது அறைக்கு வந்த காயத்திரிக்குக் காண்டீபனை நினைக்கப் பாவமாக இருந்தது. கடைசி நேரம் வரை அவனால் சௌமியாவைப் பிரிவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாவம் அவன். பெற்றோருக்காகத் தனது காதலைத் தியாகம் செய்ய நினைக்கிறான். இருந்தும் கடைசி நேரத்திலாவது

சௌமியா ஒத்துக்கொள்வாள் என்ற நம்பிக்கை மனதில் இருந்திருக்கிறது.

பாண்டியன் அவள் மீது கொண்ட காதலைப் பல முறை வெளிப்படுத்தியும் அவள் ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் நாட்டுப்பற்று. ஒவ்வொரு போராளியும் காதலிக்கத் தொடங்கினால் தாம் கொண்ட புனிதமான செயல் வலுவிழந்து விடுமென்று அவள் நம்பினாள். இருந்த போதும் அவன் காதல் கொண்டாலும் தனது இலட்சியத்தில் இருந்து விடுபடமாட்டான் என்ற நம்பிக்கையால் அவள் அவனை ஏற்றுக்கொண்டாள். இருந்த போதும் சந்தித்துக் கதைப்பதில்லையென்றும் தம் இலட்சியம் நிறைவேறியதும் தாம் இணைவோம் என்றும் கூறினாள். அதைப் பாண்டியன் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டான். அவனின் திடமான மனம், மாறாத இலட்சியம் ஆகியன அவளை ஈர்த்தன. அதனால் அவள் அவனுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தாள். அதற்குப் பதிலாக அவன் கடிதம் எழுதினான். ஆனால் அக் கடிதம் அவன் இறந்த பின்பே அவளது கைக்குக் கிடைத்தது.

அலுமாரியில் பௌத்திரப்படுத்தி வைத்திருந்த அக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள். அதைப் பல முறை வாசித்துவிட்டாள். எனினும் ஒவ்வொரு முறையும் அதை வாசிக்கும் போதும் புதுமையான உணர்வுகள் அவளின் உடலில் கிளர்ந்தெழும். கண்களில் நீர் மல்க அக்

கடிதத்தை எடுத்துப் பிரித்தாள். அவளின் கைகள் நடுங்கின.

“அன்பான காயத்திரி, ஒரு இளைஞன் பலநூறு பெண்களைத் தினமும் காண்கிறான். பாடசாலையில், வேலைத் தலத்தில், பொது இடங்களில் இப்படி எத்தனையோ இடங்களைச் சொல்லலாம். காண்பவர்களை எல்லாம் நினைவில் வைத்திருப்பதில்லை. நினைவில் உள்ளவர்களையும் மீட்டுப் பார்ப்பதில்லை.”

“உன்னை நான் எமது படையணிக்கு வந்த போது முதன் முதலாகக் கண்டேன். அப்போது எனக்கு உன்னில் ஈடுபாடு தோன்றவில்லை. சக போராளி என்றே நினைத்தேன். அடிக்கடி சந்திப்பதால் இருவருக்கிடையிலும் ஒரு நெருக்கம் உண்டானது. அந்த நெருக்கம் காதலாகப் பரிணமித்தது. சாகும் வரை காதலிலீடுபடக்கூடாது என்று தான் நான் இயக்கத்தில் சேரும் போது நினைத்தேன். அந்த நினைவு எமது இலட்சியம் நிறைவேறும் வரையும் தொடர்ந்திருக்கும் என்று தான் நினைத்திருந்தேன். அதில் சிறிது தளர்வேற்பட்டுவிட்டது.”

“உனது உறுதியான போக்கு, பேச்சு, துணிவான செயல்கள் யாவும் என்னைக் கவர்ந்தன. நீ உனது திறமையால் கல்விப் பொறுப்பாளராக உயர்ந்த போது

உன் மீதிருந்த மதிப்புப் பல மடங்கு உயர்ந்தது. நான் உனது அழகின் மீது ஆசை கொள்ளவில்லை. வளமான உடல் மீது காதல் கொள்ளவில்லை. நீ கொண்ட இலட்சியத்தின் மீது கொண்ட உறுதியின் மீது காதல் கொண்டேன், உனது துணிவின் மீது காதல் கொண்டேன். இக் காதல் பேசியோ அல்லது சந்தித்தோ வளர வேண்டும் என்ற நியதி இல்லை. நினைவுகளாலேயே அது வளர்ந்து வேரூன்றி விருட்சமாகும். விருட்சமாகிவிட்டது. இனி அதைத் தகர்க்க முடியாது. நான் பேசும் போது வெறுப்படைந்து மனதுள் சபிப்பாய்….''

அந்த இடத்தில் கடிதத்தை வாசிப்பதை விடுத்து கண்களை மூடினாள். விழிக்குள் பாண்டியன் தோன்றிச் சிரித்தான்; ''அன்பானவரே, நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். நான் கொண்ட இலட்சியத்திற்கு இழுக்கு நேர நான் விரும்பவில்லை. நீங்கள் முதன்முதலாகக் காதலை வெளிப்படுத்தி என்னைப் பார்த்தன்றே எனது மனம் தன்னை இழந்துவிட்டது. அதைச் சொல்லி நானும் குழம்பி உங்களையும் குழப்ப விரும்பவில்லை. அதனால் தான் சந்திக்கக் கூடாது கதைக்கக் கூடாது என்று கடிதம் எழுதினேன்'' சிறிது நேரம் விம்மினாள்.

பின்பு கடிதத்தைத் தொடர்ந்து வாசித்தாள்; ‘‘எமது மக்கள் எமக்காக எதையும் இழக்கச் சித்தமாக இருக்கிறார்கள். நாம் போரில் மரணமடைந்தால் உலகம் உள்ள வரை எம்மைப் போற்றித் துதிப்பார்கள். நாம் ஊனமுற்றால் எம் உயிர் உள்ள வரை எம்மைப் பாதுகாப்பார்கள். இந்த நம்பிக்கை எனக்குண்டு.’’

அதை வாசித்து விட்டு அவள் விம்மி விம்மி அழுதாள். அவளால் துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை; ‘‘நீங்கள் எமது சமூகத்தவர்களைப் பற்றித் தவறாக நினைத்து ஏமாந்து விட்டீர்கள். அவர்களெல்லாம் பயம் காரணமாகவே எம்மோடு சேர்ந்து எமது ஆதரவாளர்களைப் போல நடித்தார்களே தவிர உண்மையாக எம் மீது விசுவாசம் கொள்ளவில்லை. நானும் இயக்கத்தில் இருக்கும் போது உங்களைப் போலத் தான் நினைத்தேன். ஆனால் இப்போ பார்க்கும் போது நம்ப முடியவில்லை. எமக்காக உயிரையே கொடுக்கத் தயாரென்று கூறிய பலர் இப்போ புனர்வாழ்வு பெற்றவர்களைக் கண்டு கொள்கிறார்களில்லை. படிப்பபைக் குழப்பி விட்டு இயக்கத்தில் சேர்ந்த பலர் இப்போ வாழ வழி தெரியாது துன்பப்படுகின்றனர். இதில் பெண்கள் படும் துன்பங்களுக்கு அளவேயில்லை. பெண்களை யாரும் மதிப்பதேயில்லை. சீதனமுள்ள படித்த உத்தியோகம் பார்க்கும் பெண்களையே எமது சமூகத்தவர்கள் மதிப்பதில்லை. அப்படியிருக்க

புனர்வாழ்வு பெற்ற பெண்களை மதிப்பார்களா என்ன..?'' விம்மி விம்மி அழுதாள் காயத்திரி.

''எனக்கு அக்கா இருப்பதால் எல்லா வசதிகளும் இருக்கின்றன. அக்கா இல்லாவிட்டால் என்ன செய்திருப்பேன்?'' என்பதை நினைக்க அவளுக்குத் தலை சுற்றியது.

அப்போது அங்கே மாதவி வந்து வாசலில் நின்றாள்; ''வா உள்ளே'' என்று காயத்திரி அழைக்க மாதவி உள்ளே வந்து கட்டிலில் அமர்ந்தாள்.

''பாண்டியனின் கடிதத்தை வாசித்தேன். அவர் எமது மக்களை எப்படி நம்பியிருந்தார்....'' பெருமூச்சு விட்டாள் காயத்திரி.

''உலகில் உள்ள எல்லோரும் நடிகர்கள்'' என்று காயத்திரி சொல்ல; ''அப்படிச் செல்லாதே நல்லவர்களும் இருக்கிறார்கள். மல்லிகா அக்கா செளமியா போன்றவர்களும் இருக்கிறார்கள். என்னைப் படிக்கச் சொல்லி உற்சாகப்படுத்தியதோடு படிப்பதற்கான செலவுகளையும் மல்லிகா அக்கா தந்தவா. அவா இல்லாவிட்டால் நான் பட்டதாரியாகி இருக்கமாட்டேன்'' கண் கலங்கினாள் மாதவி.

“உன்னை விரும்பிய உனது மாமனின் மகன் வெளிநாட்டால் வந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். உன்னை வந்து சந்தித்தானா..?” என்று கேட்டாள் காயத்திரி.

“அவனுக்கு எனது நினைவு இருக்குமோ தெரியாது. மூன்று கிழமைக்கு முன் வந்தவன். நாளையிண்டைக்குப் போறானாம். கோயிலில் அம்மாவைக் கண்டு கதைத்தவன். என்னைப் பற்றிக் கேட்கவே இல்லை..” என்றாள் மாதவி.

“அவன்ரை மனைவி கான்சர் வந்து செத்துப் போனாளாம். அம்மாவை விட்டுக் கேட்கலாம் தானே.” என்றாள் காயத்திரி.

“இரண்டாம் தாரம் செய்யுறவனும் சீதனத்தை எதிர்பார்க்கிறான். பெண் அழகாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறான். எனது இடது காலில் காயம்பட்டு நான் தாண்டித் தாண்டி நடக்கிறேன். அது அவனுக்குப் பிடிக்குமா..?” என்று கேட்டாள் மாதவி.

“விரும்பித் தானே காதலித்தவன். அந்த விருப்பமிருந்தால் செய்யலாம் தானே. அதோடு அவன் வெளிநாட்டில் இயக்கத்தின் வேலைகளைச் செய்தவன்.”

“யாரையும் நம்ப முடியவில்லை. என்னில் விருப்பமிருந்தால் கேட்கலாம் தானே. கணேசண்ணை அவன்ரை சொந்தக்காரன். அவர் மாதவியைக் கட்டி வெளிநாட்டுக்குக் கூட்டிக் கொண்டு போவன். நீ காதலித்த பொம்பிளை தானே” என்றவராம். அதுக்கு அவன் மனிசி செத்து ஒரு வருடம் கூடச் செல்லவில்லை. அதுக்குள்ளை கட்டுறது சரியில்லை” என்றவனாம்; “இப்ப நீ கட்டத் தேவையில்லை. நீ சம்மதித்தால் ஆண்டுத் துவசம் முடியச் செய்யலாம்” என்று சொல்லியிருக்கிறார். அதற்கு அவன்; “ஆறுதலாகப் பிறகு வந்து சந்திக்கிறேன்” என்றவனாம். அதை நம்பிக் கணேசண்ணை இரண்டு மூன்று தடைவை போனவர். அவன் ஒளிச்சிட்டான். தாய்; “உனக்கேன் இந்த வேலை. வந்தவங்களை நிம்மதியாய் இருக்க விடு” என்றவாவாம். காதல் என்பது பதின்ம வயதில் வந்தால் உணர்ச்சிப் பெருக்கால் நிறைவேறும். இப்ப முப்பது வயதிலை காதல் வருமே? காசாசை தான் வரும். தாய் வெளிநாட்டைச் சாட்டிக் காசு வாங்க நினைக்கிறா. ஊரிலை உள்ள சிலர் குடிகாரணெண்டாலென்ன வெறிகாறணெண்டாலென்ன வெளிநாட்டிற்கு அனுப்பத் தான் யோசிக்கினை. எனக்கு இந்தப் படிப்புப் போதும். ஒரு தொழில் கிடைத்தால் சரி” என்றாள் மாதவி.

“அக்கா எத்தனையோ தரம் என்னைப் படிக்கச் சொல்லி வற்புறுத்தினவா. நான் கேட்கவில்லை. உன்னுடன் சேர்ந்து படித்திருந்தால் நானும் இன்று பட்டதாரியாகியிருக்கலாம். என்ன தான் உறவுகள் சொந்தங்கள் இருந்தாலும் யாரையும் நம்ப முடியாது. நான் படிக்க நினைக்கிறேன்” என்றாள் காயத்திரி.

அப்போது சௌமியா; “சமையல் முடிந்து விட்டது. எல்லோரும் சாப்பிட வாருங்கள்” என்று அழைத்தாள்.

காயத்திரியும் மாதவியும் வெளியே வந்த போது கணேசனின் குடும்பம் கோலில் இருந்தது. அங்கஜன் அழகான உடைகளை அணிந்திருந்தான்.

“எல்லோரும் வாருங்கோ….” என்று மேசையில் இருந்த கோப்பைகளில் சோற்றை வைத்துக் கறிகளையும் வைத்தாள் சௌமியா.

சோற்றைப் பிசைந்தபடி; “என்னம்மா இனிப்பான செய்தி அதைச் சொல்” என்றார் கணேசன்.

“நான் உங்கள் வீட்டு மருமகளாக வர ஆசைப்படுகிறேன்” என்றாள் சௌமியா சிரித்தபடி

# 17

“நீ பிறந்தன்றே எனக்கு மருமகள் தானே அம்மா. இனி விசேட மருமகளோ…?” மகிழ்வுடன் சிரித்தார் கணேசன்.

“விசேட மருமகள் அல்ல, வீட்டு மருமகள். என்று கூறிவிட்டு அங்கஜனைப் பார்த்தாள் சௌமியா.

அங்கஜன் அதை எதிர்பாராமையால் சற்றுத் தடுமாறினான். பலரின் முன் சௌமியா அப்படிச் சொல்வாளென அவன் எதிர்பார்க்கவில்லை.

அங்கஜன் கூச்ச சுபாவமுள்ளவன். சிறுவயதிலிருந்தே இருவரும் ஒன்றாகப் பழகிய போதும் அவன் சற்று வெட்கத்துடனேயே சௌமியாவுடன் பழகுவான். ஆனால் சௌமியா அப்படியல்ல. துணிச்சலுடன் செயற்படுவாள். ஐந்தாம் வகுப்பில் அவன் படிக்கும் போது சௌமியா நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கஜனுடன் கல்வி கற்கும் ரகுராமன் என்பவன் குறும்புக்காரன். அவன் தன்னுடன் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு அடிப்பான், தள்ளி விழுத்தவான், மண்ணை அள்ளிக் கொட்டுவான். அவர்கள் ஆசிரியருக்குச் சொன்னால்

ஆசிரியர் கண்டிப்பார். அக் கண்டிப்புக்களுக்கு அவன் பயப்படமாட்டான். மீண்டும் மாணவர்களுடன் பிரச்சினைக்குப் போவான். அங்கஜனுக்கு அவனைக் கண்டால் பயம். அதனால் பாடசாலைக்குச் செல்லப் பயப்படுவான்.

பாடசாலைத் தெருவால் வரும்போது அன்று அங்கஜனைத் தள்ளி விழுத்தி விட்டு அவன் மீது மண்ணை அள்ளிக் கொட்டினான் ரகுராமன். பின்னால் வந்த சௌமியாவுக்குச் சரியான கோபம் வந்துவிட்டது. உடனே ஓடிச் சென்று ரகுராமனை நிலத்தில் விழுத்தி விட்டுப் பல முறை அவனின் கன்னத்தில் அடித்தாள் சௌமியா. ரகுராமன் அதை எதிர்பாராமையால் பயந்துவிட்டான். அதைப் பற்றி ரகுராமன் வீட்டாருக்குச் சொல்லவில்லை. மறுநாள் கூட வந்த மாணவர்கள் வகுப்பாசிரியருக்குச் சொல்ல வகுப்பாசிரியர் அவர்களைக் கண்டித்தார். அதன் பின் சௌமியா அங்கஜனின் கையைப் பிடித்துக் கூட்டி வருவாள். அவளைக் கண்டால் ரகுராமன் பயப்படுவான். அதன் பின் ரகுராமன் அங்கஜனுக்கு அடிப்பதில்லை.

அங்கஜன் இருப்புக் கொள்ளாமல் தவிப்பதைக் கண்டதும் சௌமியாவுக்குச் சிரிப்பு வந்தது. அதைச் சிரமப்பட்டு அடக்கினாள். அங்கஜனால் சாப்பிட முடியவில்லை. சோற்றைப் பிசைந்து கொண்டிருந்தான்.

மல்லிகாவுக்கு ஏற்கனவே சந்தேகம் இருந்தது. அவள் யோசித்துக் கொண்டிருப்பாள். தன்னை அறியாமல் சிரிப்பாள். அடிக்கடி அங்கஜனைப் பற்றிக் கதைப்பாள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அவன் வீட்டுக்கு வராவிட்டால் பரபரப்படைவாள். அங்கஜன் வீட்டுக்கு வந்தால்தடல்புடலாக வரவேற்பாள். பிறந்தன்றில் இருந்தே இருவரும் ஒன்றாகப் பழகி வருவதால் அப்படிப் பழகுகிறார்கள் என்று நினைப்பாளே தவிர அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புவார்கள் என்று நினைக்கவில்லை. பெரிதாகச் சந்தேகப்படும்படியாகவும் அவர்கள் பழகவில்லை.

கணேசனது குடும்பம் இல்லாவிட்டால் அவள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டிருப்பாள். மாதவன் தொலைத்த நாளில் இருந்து இன்று வரை உடன் பிறந்த சகோதரனைப் போல உதவி வருகிறார். அவரது மனைவியும் பிள்ளைகளும் மிகமிக அன்பாகவும் பண்பாகவும் பழகி வருகின்றனர். இந்த நிலையில் அங்கஜனைச் சௌமியா செய்வது மிகமிக அதிட்டமென்றே கூறுதல் வேண்டும். இருவரையும் சேர்த்து வைத்தால் இருவரது வாழ்வும் சிறக்கும் என்று அவள் பல முறை எண்ணியுள்ளாள். அத்துடன் கடவுளையும் வேண்டியுள்ளாள். தனது பிரார்த்தனையைப் பிள்ளையார் நிறைவேற்றி வைத்தமைக்கு நன்றி செலுத்த ஆயிரம்

மோதகங்கள் அவித்துப் படைக்க வேண்டும் என்று சௌமியா சொன்னவுடன் நினைத்துக் கொண்டாள்.

‘‘பிள்ளை சௌமி நீ சொல்லுறது எனக்கு விளங்கவில்லை. அங்கஜனைச் செய்ய உனக்கு விருப்பமே….? அப்படி விரும்பினாயானால் நான் பெரும் பாக்கியசாலி. பிள்ளையாருக்கு ஆயிரம் தேங்காய் அடிப்பன்’’ மகிழ்வுடன் கூறினார் கணேசன்.

காயத்திரியால் நம்ப முடியவில்லை; ‘‘இந்தப் பூனையும் பால் குடிக்குமா…? குடித்து விட்டதே.’’ என்று மகிழ்ந்தாள் காயத்திரி.

மாதவி அங்கு நடைபெறும் உரையாடலைக் கவனியாது; ‘‘இன்று கோழிக்கறி மிகவும் சுவையாக இருக்கு, எத்தனையோ நாட்கள் இங்கு கோழிக்கறி சாப்பிட்டனான். ஆனால் இன்று போல் சுவைக்கவில்லை’’ என்றாள்.

‘‘நீ சரியான சாப்பாட்டு இராமி. இஞ்சை பெரிய அதிசயம் நடைபெற்றுக் கொண்டிருக்கு. நீ அதைக் கவனிக்காது சாப்பாட்டைப் பற்றிக் கதைக்கிறாய்’’ என்று கோபப்பட்டாள் காயத்திரி.

“எனக்கு உந்த விசயம் எப்பவோ தெரியும்” என்ற மாதவி கோழிக்கறியை எடுத்துப் போட்டுஅதை உண்டாள்.

“உனக்கு எப்பவோ தெரியுமோ….? அப்பேனடி எனக்குச் சொல்லவில்லை. மற்றவையின் கதைகளைத் துருவித் துருவிக் கேட்பாய்… நீ பொல்லாத ஆள். உன்னோடு உறவு வைக்கக் கூடாது” என்றாள் காயத்திரி.

“சொல்ல வேண்டாம் என்று கூறிச் சொன்னவற்றைச் சொல்வது நம்பிக்கைத் துரோகம். சௌமியா படித்து வைத்தியராக இருந்தாலும் அவளும் ஒரு பெண் தானே. மனிதர்களுக்குள்ள உணர்வுகள் இருக்கத் தானே செய்யும். காதல் கொண்டால் அக் காதலைப் பற்றி நம்பிக்கையானவர்களுக்குக் கூறினால் தான் அது சுவைக்கும். இல்லாவிட்டால் அது காதல் இல்லை. காதலிக்காத உனக்குத் தெரியாது….” என்று வாய்தவறி வந்த வார்த்தைகளை மறைத்தாள் மாதவி.

“அப்ப நீயும் காதலித்திருக்கிறாய் போலத் தெரிகிறது” என்றாள் காயத்திரி.

“ஏன் அவா காதலிக்கவில்லையே? காதலித்த மச்சான், மனைவி இறந்த பிறகும் மாதவியை ஏற்க மறுக்கிறார்” என்றாள் ரதினி.

மாதவிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாது; “எல்லாம் விதி. இன்று தேவையில்லாத கதையை விட்டுவிட்டுச் சௌமியாவின் விருந்தை மகிழ்வுடன் கொண்டாடுவோம்” என்றாள்.

“கணேசு மாமா, எப்ப சௌமியாவை வீட்டை கூட்டிக்கொண்டு போகப் போகிறீர்கள்? கல்யாண அறிவிப்பே இப்படியென்றால் கலியாண விருந்து எப்படி இருக்கும்?” என்றாள் ரதினி.

“இன்னும் என்னால் நம்பமுடியவில்லை. சௌமியா எனது மருமகள் தான். ஆனால் அவள் அங்கஜனை விரும்புவாள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. காண்டீபனைச் செய்யப் போவதாகக் கதை உலாவியது. காண்டீபனைச் செய்தால் கடைசி வரையும் சௌமியாவின் வாழ்வு சிறக்காதென்று எனக்குத் தெரியும். மல்லிகாவை விடப் பத்து மடங்கு கஷ்டப்படப் போகிறாள் என்று நினைத்துப் பிள்ளையாரே இக் கல்யாணத்தைக் குழப்பினால் மோதக பூசை செய்வேன்

என்று நேர்த்தி வைத்தேன்….'' என்ற கணேசன் பேசுவதை சில கணங்கள் நிறுத்தினார்.

''சௌமியா வாழ்நாள் முழுவதும் இன்பமாக வாழ வேண்டும். அவளுக்கு எந்தக் குறையும் வரக்கூடாது. நல்லதொரு மாப்பிளை அமைய வேண்டும் என்று தினமும் காலையும் மாலையும் பிள்ளையாரை வணங்குவேன். காண்டீபனின் தகப்பனை எனக்கு நெடுங்காலமாகத் தெரியும். அவர் சமூகத்துடன் ஒத்துப் போகாதவர். சௌமியாவை மருமகளாக அடைய அவர் நூறாண்டுகள் தவஞ் செய்ய வேண்டும்'' உணர்ச்சி வசப்பட்டார் கணேசன்.

மல்லிகா உருகிப் போனாள். இனித் தான் இறந்தாலும் பரவாயில்லை. எனது ஆசை மகளைக் காப்பாற்ற கணேசன் அண்ணாவின் குடும்பம் இருக்கிறது என்று நினைத்தாள்.

''அண்ணா, நீங்கள் செய்த உதவிக்குப் பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் முடியாது. இவ்வளவு நாளும் செய்தது போல எனது மகளையும் ஏற்று அவள் கண் கலங்காதபடி வாழ வழி செய்யுங்கள்'' விம்மி விம்மி அழுதாள் மல்லிகா.

''இதென்னம்மா பேச்சு. சௌமியா எமது வம்ச விளக்கு. நான் அவளைத் தூக்கி வளர்த்தவன். அவள்

சிரித்தால் தான் நான் சிரித்தனான். இப்ப என்னுடைய மருமகளாக இல்லை மகளாக வந்துள்ளாள்’’ உணர்ச்சி வசப்பட்டார் கணேசன்.

வசந்தினி, ரதினி, மாதவி, செல்வி ஆகியோர் அங்கஜனைக் கேலி செய்வார்கள். அவர்களைக் கண்டால் அங்கஜன் வெட்கப்படுவான்.

‘‘மாப்பிளை என்ன சீதனம் கேட்கிறீர்கள்?’’ என்று கேட்டாள் ரதினி.

‘‘சௌமியாவின் குணத்திற்கும் தொழிலுக்கும் உவர் தான் சீதனம் கொடுத்து எடுக்க வேண்டும். நாங்கள் சீதனம் கொடுக்க மாட்டம்’’ என்றாள் வசந்தினி.

‘‘சீதனம் கொடுக்காவிட்டால் நாங்கள் மாப்பிளை தரமாட்டம். கணேசு மாமா.. இவையென்ன விளையாடீனை. நறுக்காய்ப் பேசுங்கோ’’ என்றாள் செல்வி.

‘‘ஐயோ, என்ரை பிள்ளையை எடுக்கச் சீதனம் தேவையில்லை. நாங்கள் கொடுத்துத் தான் எடுப்போம்’’ என்றார் கணேசன்.

“மாப்பிளை சேர்… கதைகள் பிழையாக இருக்கு. அவதானமாயிருங்கோ. ஏமாற்றிப் போடுவினை” என்றாள் செல்வி.

“அவர் ஏற்கனவே ஏமாந்திட்டார். இனி ஏமாற எதுவும் இல்லை” பலமாகச் சிரித்தாள் மாதவி.

“அங்கீகாரம் கிடைச்சிட்டுது. நீங்கள் எல்லாம் எழும்புங்கோ” என்ற ரதினி சௌமியாவின் அருகே சென்று மிகவும் மெதுவாகச் சொன்னாள்; “நாங்கள் போறம். மாப்பிளை பல நாளாய் ஆசைப்பட்டிருப்பர். சோற்றை ஊட்டி விடு” என்று கூறிவிட்டுப் பலமாகச் சிரித்தாள்.

“சௌமியாவின் முகம் சிவந்தது; “போடீ” என்று தலைகுனிந்தாள் சௌமியா.

“கன காலத்திற்குப் பிறகு நாங்கள் எல்லோரும் மிகவும் சந்தோசமாகச் சிரித்துக் கதைத்து உணவை இன்று உண்டோம். அதற்கு சௌமியாவுக்கு நன்றி கூறுதல் வேண்டும்” என்றாள் காயத்திரி.

# 18

செல்வியின் தகப்பன் நாகநாதன் அன்று காலை மல்லிகாவின் வீட்டுக்கு வந்தார். அவர் மிகவும் நல்லவர். சொந்தத் தோட்ட நிலத்தில் பயிர் வகைகளைச் செய்து வாழ்ந்து வந்தார். செல்வி அவரது மூத்த தாரத்தின் மூத்த பெண் பிள்ளை. மூன்றாவது பிள்ளையைப் பெற்ற போது மனைவி இறந்துவிட்டாள்.

வைத்தியர்கள் குறித்துக் கொடுத்த நாளுக்கு இரண்டு வாரங்கள் முன்னதாக இரவு பன்னிரண்டு மணிக்கு அவளுக்குப் பிரசவ வேதனை உண்டானது. அப்போது மண்ணெண்ணையில் தான் வாகனங்கள் ஓடின. கார் வைத்திருக்கும் செல்லத்தம்பியை எழுப்பிக் காரை இயக்க இரண்டு மணி நேரஞ் சென்றது. ஊரில் உள்ள பலர் வந்து பலமுறை தள்ளிய பின்பு தான் கார் முதலாவது தடவையாக இயங்கியது. அதன் பின் எல்லோருமாகச் சேர்ந்து பலமுறை முயன்ற பின் அவ் வாகனம் இரங்கி இயங்கத் தொடங்கியது. காரில் ஏற்றும் போதே நாகநாதனின் மனைவி மயங்கிவிட்டாள்.

“எங்கடை நிலைமையை நினைக்கக் கவலையாக இருக்கு. காரைத் தள்ளிய நேரம் அவளை ஏற்றித் தள்ளிக் கொண்டு போயிருக்கலாம்” என்றார் ஒரு வயோதிபர்.

ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்த பின் வைத்தியர் நாகநாதனை அழைத்துச் சொன்னார்; “உங்கள் மனைவியின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. உடனே சத்திர சிகிச்சை செய்து தான் குழந்தையை எடுத்தல் வேண்டும். அதற்குச் சம்மதமா…?”

“ஓம் ஐயா.” என்று அவர்கள் கொடுத்த படிவத்தில் கையொப்பமிட்டார் நாகநாதன்.

குழந்தை தப்பிவிட்டது. அவரது மனைவி இறந்துவிட்டாள். அதன் பின் குழந்தையைக் கவனிப்பதா தொழிலைக் கவனிப்பதா என்ற நிலை. இனத்தவர்கள் ஒன்று சேர்ந்து தெய்வானை என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தனர்.

தெய்வானை ஏற்கனவே திருமணமானவள். அவளுக்கு ஒரு பெண் குழந்தை மூன்று வயதில் இருந்தது. அவளது கணவன் வியாபாரத்திற்காக வவுனியாக்குச் சென்று அங்கே பொருட்களை வாங்கி வந்து விற்பவன். ஒருமுறை கேரதீவுப் பாதையால் பொருட்களுடன் வரும்போது கெலி வந்து சுட்டதில் அவன் மரணமடைந்து விட்டான்.

தெய்வானையின் பெற்றோர் மிகவும் வறியவர்கள். தெய்வானைக்குக் கீழே மூன்று சகோதரர்கள் இருந்தனர்.

அத்துடன் தெய்வானையின் தகப்பனின் பெற்றோரும் கூட இருந்தனர். அதனால் தான் அவர்களுக்குப் பாரமாக இருக்கக்கூடாது என்று நினைத்து அவள் நாகநாதனைத் திருமணம் செய்தாள். அதன் பின் அவளுக்கு மூன்று பெண்கள் பிறந்தனர். இப்போது அவள் தான் திருமணம் செய்யாதிருந்திருக்கலாம் என்று எண்ணுவாள்.

மல்லிகா, நாகநாதனும் தெய்வானையும் வந்திருப்பதை அறிந்து அவர்களைச் சந்திப்பதற்காக வெளியே வந்தாள். நாகநாதனும் தெய்வானையும் அவளைக் கண்டதும் எழுந்து நின்றனர்.

‘‘நான் எத்தனை முறை சொன்னாலும் உங்களுக்கு விளங்குவதில்லை. நீங்கள் என்னை விட வயதில் மூத்தவர்கள். இனிமேல் எழும்பக்கூடாது’’ கண்டிப்புடன் கூறினாள் மல்லிகா.

‘‘நீங்கள் எமது குடும்பத்திற்கு எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறியள். நீங்களில்லாவிட்டால் எமது குடும்பத்தில் சிலர் பட்டினியால் இறந்திருப்பர். இந்தக் காலத்திலை யாருக்கும் யாராலும் உதவி செய்ய முடியாது. தினமும் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபா உழைக்கிறவனே கஷ்டப்படுகிறான். வவுனியாவிலை முப்பது ரூபா விற்கும் அரிசி இஞ்சை நூற்றைம்பது ரூபா விக்குது. எப்படி உதவுவது…? ஆனால் நீங்கள் எப்போதும் உதவி வருகிறீர்கள். உங்களை

மதிக்காவிட்டால் பாவம் தான் வந்து சேரும்'' கலங்கினான் நாகநாதன்.

மேலே பேச மல்லிகாவால் முடியவில்லை; ''சரி வந்த விசயத்தைச் சொல்லுங்கோ....'' என்றாள் மல்லிகா.

''பெரியஇக்கட்டுக்கை மாட்டுப்பட்டுப் போனன். மூத்தவள் செல்வி இருக்கத்தக்கதாக அவளின் தம்பிமார் இருவரும் திருமணம் செய்தது உங்களுக்குத் தெரியும். அவர்கள் இருவரும் மதிப்பான அரசாங்கத் தொழிலில் இருந்ததாலை மாமன்மார் காசாசையைக் காட்டி மடக்கிப் போட்டினை. நான் கேட்டதற்குச் செல்வி இயக்கத்திலை இருக்கிறாள். அவளுக்கு எப்படித் திருமணம் செய்து கொடுப்பது என்று இருவரும் கேட்டார்கள். அவர்கள் கேட்டது சரி. ஆனால் கலியாணம் செய்த பின் இருவரும் வீட்டுக்கே வருவதில்லை. இப்போ என்னையும் நோய்கள் தாக்கிவிட்டன. சலரோகம் வந்திட்டுது. உழைப்புப் பிழைப்புக் குறைவு. அவர்கள் இருவரும் நல்லாய் இருக்கிறாங்கள். ஆனால் உதவி செய்வதில்லை'' விம்மினார் நாகநாதன். அவரைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

சிறிதுநேரம் விம்மியவர் பின்பு சொன்னார்; ''தெய்வானையின் மூத்ததாரப் பிள்ளைக்கு இருபத்தாறு வயதாகிறது. அவளுக்கொரு கலியாணம் செய்து

கொடுக்கச் சொல்லி தெய்வானை கரைச்சல் கொடுக்கிறாள். அது நியாயம் தான். அவளை விடச் செல்விக்கு ஐந்து வயது கூட. அவளுக்குச் செய்யாமல் எப்படி இவளுக்குச் செய்கிறது. செல்வி தான் கலியாணம் செய்யமாட்டேன் என்கிறாள். தெய்வானைச் சித்தியின் மகள் மாலினிக்குச் செய்து கொடுக்கும்படி கூறுகிறாள். அது எனக்கு விருப்பமில்லை. நீங்கள் செல்விக்குச் சொன்னால் கேட்பள். சொல்லுங்கோ'' என்றார் நாகநாதன்.

மல்லிகா பொதுவாக எல்லோரிடமும் அன்பு கொண்டவள். செல்வியின் மாமனின் மகன் சுகுமார் சௌமியாவுடன் படித்தமையால் தேவையேற்படும் போது அங்கு வருவான். நாட்டு நிலைமை காரணமாக அவன் ஏ.எல் பரீட்சைக்கு விண்ணப்பித்து அதை எடுக்கு முன் பிரான்சுக்குச் சென்றுவிட்டான். அவன் பிரான்சில் இருக்கும் போதும் அவர்களுடன் தொடர்பு கொள்வான். ஆறு மாதங்களுக்கு முன்பு அவன் ஊருக்கு வந்த போது அவனது தகப்பனார் அவனுக்குத் திருமணம் பேசினார். அப்போது ஒரு நாள் அவன் மல்லிகாவின் வீட்டுக்கு வந்திருந்த போது மல்லிகா சொன்னாள்; ''சுகு, உமக்குத் திருமணம் பேசுவதாக அறிந்தேன். உமக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் நான் ஒன்று சொல்லட்டா....?''

''பிரச்சினையில்லைச் சொல்லுங்கோ''

செல்வி நல்ல பிள்ளை. இயக்கத்திலிருந்து புனர்வாழ்வு பெற்று விடுதலையாகி வந்துள்ளாள். அவள் உமது மாமன் மகள் தானே. நீர் இங்கை இருக்கும் போது இயக்க வேலை செய்தனீர். பிரான்சுக்குச் சென்ற பின்பும் அங்கும் இயக்கத்திற்காக வேலை செய்வதாக அடிக்கடி எனக்குக் கூறினீர். அதனால் இயக்கத்திற்குச் சென்ற ஒரு பெண்ணைத் திருமணம் செய்யலாம் தானே.''

சுகுமார் உடனே அதற்குப் பதில் கூறவில்லை. வெகுநேரம் யோசித்தான். பின்பு சொன்னான்; ''வாழ்க்கை வேறை. எமது செயல்கள் வேறை. நாம் இயக்கத்திற்காகக் காசைக் கொடுக்கலாம். உதவிகளைச் செய்யலாம். ஆனால் வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தக் கூடாது. பத்து வருடங்கள் இயக்கத்தில் இருந்தவள். அதனால் மிடுக்கு, விட்டுக் கொடுக்காத தன்மை, திமிர் என்பன இருக்கும். அதிகாரத்தைத் தன் கையில் வைத்திருந்தவள் குடும்பத்திற்குரிய பண்புகளுடன் இருப்பாளென நம்ப முடியாது. நான் அனுபவப்பட்டனான். அதைப் பற்றிக் கதைக்க விரும்பவில்லை. வேண்டுமானால் கொஞ்சப்பணம் கொடுக்கிறேன். கலியாணம் செய்ய முடியாது'' என்றான்.

''இயக்கத்திற்காக எதையும் செய்யத் தயார்'' என்று கூறிய சுகுமாரே ஓர் இயக்கத்திற்கு உண்மையாக

உழைத்த பெண்ணைத் திருமணம் செய்ய மறுத்தால் சாதாரணமான ஓர் இளைஞன் எப்படிச் சம்மதிப்பான்.

சுகுமார் திரும்பத் தான் வாழும் நாட்டிற்குச் செல்லும் போது இரண்டு இலட்ச ரூபாவைக் கொண்டு வந்து மல்லிகாவிடம் கொடுத்துச் செல்விக்குக் கொடுக்கும்படி கூறினான். ஆனால் மல்லிகா எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதைச் செல்வி வாங்காததால் மல்லிகா அதை வாங்கி வங்கியில் அவளின் பெயரில் நிரந்தர வைப்பிலிட்டாள்.

‘‘என்ன தங்கச்சி நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் யோசிக்கிறாய்’’ நாகநாதன் கேட்டான்.

திடுக்கிட்டுச் சுயநினைவடைந்த மல்லிகா சொன்னாள்; ‘‘உங்களுக்கு நிலைமை தெரியும். இயக்கத்தில் இருந்த ஒரு பெண்ணை ஏற்க ஆண்கள் தயங்குவார்கள். அதனால் தெய்வானையின் மூத்த தாரப்பெண் பிள்ளைக்குத் திருமணத்தைச் செய்து கொடுங்கோ. பிறகு செல்வியைப் பற்றி யோசிக்கலாம்….’’

நாகநாதன் அதற்கு உடனே பதில் கூறவில்லை. சில கணங்கள் யோசித்தார்; ‘‘நீங்கள் சொன்ன மாதிரித் தான் பலரும் சொல்கிறார்கள். ஆனால் எனக்கு மனங் கேட்குதில்லை. செல்வீன்ரை சகோதரங்களுக்குச் சொன்னால்; ‘‘இவா என்னத்திற்கு இயக்கத்திற்குச்

சென்றவா….? இவா போனாப் பிறகு இராணுவத்தாலை நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டனாங்கள். எங்களுக்கும் அந்த அக்கறை இருக்கு. அதனால் நாலைந்திடத்திலை கேட்டனாங்கள். அவங்கள் அடியாத குறை. நீங்கள் எங்காவது பேசிக் கொண்டு வாங்கோ நாங்கள் சீதனம் தாறம். எங்களாலை பேச முடியாது'' என்கிறார்கள்'' கவலைப்பட்டார் நாகநாதன்.

‘‘சந்தர்ப்பம் வரும்போது அதைக் கைவிடக்கூடாது. தெய்வானையின் முதல் புரிசனின் சகோதரியின் மகனுக்கு அனுப்பச் சகோதரி விரும்புகிறா. என்னோடை கதைத்தவா. அதனால் அவர்களோடு கதைத்து அனுப்புங்கோ. இன்னும் மூன்று குமரிருக்கு. அதை நினைவில் வைத்துக் கொண்டு செயலாற்றுங்கோ. இதைப் பற்றியெல்லாம் செல்வி என்னுடன் கதைத்தவள். அதனால் செல்வி கவலைப்படுவள் என்று நினைக்க வேண்டாம்'' என்றாள் மல்லிகா.

தெய்வானை மகிழ்வுடன் சிரித்தாள். நாகநாதனின் முகம் மலரவில்லை. இருப்பினும் வலிந்து புன்னகையை வரவழைத்துக் கொண்டு; ‘‘சரி. நீங்கள் செல்வியைச் சமாதானப்படுத்துங்கோ'' என்றார்

# 19

நாகநாதன் மல்லிகாவின் தோப்பிற்குச் சென்றார். அங்கே ரதினியும் காயத்திரியும் நிலத்தில் விழுந்திருந்த தேங்காய்களைப் பொறுக்கிக் குவித்துக் கொண்டிருந்தனர். செல்வி வியாபாரி ஒருவருக்குத் தேங்காய்களை எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்ததும் அவரது கண்கள் கலங்கின.

“நீ எவ்வளவு கெட்டித்தனமாகப் படித்தனி. ஏ.எல்லில் மூன்று ஏ எடுத்தனி. பல்கலைக்கழகம் சென்று படித்திருந்தால் நீயும் சௌமியாவைப் போல வைத்தியராகி இருப்பாய். குழப்பிப் போட்டு இயக்கத்துக்குச் சென்றாய். இப்போ உன்னை யாரும் மதிப்பதில்லை. அத்துடன் உன்னைத் திருமணம் செய்யவும் யாரும் முன் வருகிறார்களில்லை. மல்லிகாவின் உதவியால் நிம்மதியாக இருக்கிறாய். அவற்றை நினைக்க எனக்கு நெஞ்சு வெடித்து விடும் போலுள்ளது. நன்றி கெட்ட சனம். இயக்கம் மதிப்போடும் மரியாதையோடும் இருக்கேக்கை தாம் இயக்கக்காரன் என்று பெருமைப்பட்டவர்களெல்லோரும் இன்று நன்றி கெட்டத்தனமாக நடந்து கொள்கிறார்கள்.” என்றார் நாகநாதன்.

‘‘இல்லையப்பா இப்போதும் இயக்கத்தைத் தான் பெரும்பான்மையானவர்கள் ஆதரிப்பதாக நடிக்கிறார்கள். பல்வேறுபட்ட கொடுமைகளை இராணுவம் செய்தது என்று கூறிப் பாதிக்கப்பட்டவர்களுக்காக உரத்துப் பேசுகிறார்கள். ஆனால் உதவ யாரும் தயாரில்லை. என்னுடன் புனர்வாழ்வு பெற்ற பலரை நான் சந்தித்துள்ளேன். அவர்களில் யாரும் சந்தோசமாக இல்லை. பெரும்பான்மையானவர்கள் தமது படிப்பைக் குழப்பி விட்டுத் தான் இயக்கத்தில் சேர்ந்தவர்கள். புனர்வாழ்வு பெற்ற பின் சிலர் படித்துப் பட்டம் பெற்றுத் தகுதியான வேலைகளையும் பெற்றுள்ளனர். இருந்தும் அவர்களைத் தகுதியுள்ளவர்களென்று ஏற்கச் சமூகம் தயாரில்லை. சுகுமார் இயக்கத் தூண். ஆனால் போராடிய என்னைத் திருமணஞ் செய்ய அவர் விரும்பவில்லை. அவரே விரும்பாத நிலையில் என்னை யார் திருமணஞ் செய்ய முன்வருவர். அதனால் என்னைப் பாராதைங்கோ. தங்கைக்குத் திருமணஞ் செய்து வையுங்கோ’’ என்றாள் செல்வி.

செல்வி முன்பும் பல முறை இவ்வாறு கூறியிருக்கிறாள். இருந்தும் பெற்ற மனம் ஆறுதலடைய மறுத்ததால் மீண்டும் ஒருமுறை அவளைச் சமாதானஞ் செய்ய வந்தார். அவள் வீட்டுக்கு வருவதில்லை. யாருக்காவது வருத்தம் வந்தால் தான் வருவாள். அது நாகநாதனுக்குப் பெரும் கவலையைக் கொடுத்துக்

கொண்டிருந்தது. அதனால் அடிக்கடி மல்லிகாவின் வீட்டுக்கு இரவில் வந்து அவளோடு சில நிமிடங்கள் பேசி விட்டுச் செல்வார். அவள் மல்லிகாவின் தோப்பில் கூலிவேலை செய்வதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவர் சொன்னார்; ‘‘செல்வி, நீ கூலி வேலை செய்வதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தயவுசெய்து வேறு ஏதாவது வேலை தேடு. இல்லாவிட்டால் வீட்டில் வந்து இரு. உன்னைத் தெய்வானை தன் மகளாகத் தான் நினைத்திருக்கிறாள். அவள் ஒருபோதும் வேறுபாடு காட்டியதில்லை. அது உனக்குத் தெரியும்.’’

‘‘இங்கே நான் பல காரணங்களுக்காக இருக்கிறேன். என்னோடு இயக்கத்தில் இருந்த சிலர் இங்கிருப்பது எனக்கு ஆறுதலைத் தருகிறது. அத்துடன் சேர்ந்தும் படிக்கலாம். மல்லிகா அக்காவும் சௌமியாவும் எம் மீது உயிரையே வைத்திருக்கின்றனர். அவர்கள் கூறும் ஆறதல் வார்த்தைகளால் எமது மனம் மகிழ்கிறது. அவர்களின் வற்புறுத்தலால் தான் நாங்கள் படித்தோம். அவர்கள் தான் எமக்கு உலகைப் புரிய வைத்தவர்கள். அதனால் கவலையை விடுங்கள். இந்தக் கிராமத்தில் நான் மட்டுமா திருமணமாகாது இருக்கிறேன். இயக்கத்திற்குச் செல்லாமல் நன்கு படித்து நல்ல உத்தியோகம் பார்க்கும் பெண்களும் சீதனமின்மையாலும் வேறு காரணங்களினாலும் திருமணமாகாது

இருக்கின்றனர். அதனால் கவலையை விட்டு விட்டு எனது தங்கைகளுக்குத் திருமணத்தைச் செய்து வையுங்கள்'' என்றாள் செல்வி.

''இப்ப சரி தானே. தெய்வானையின் சகோதரனை நீங்கள் பாராட்ட வேண்டும். உறவு என்பதற்காக அவர்கள் உங்கள் பெண்ணைச் சீதனமின்றிச் செய்யச் சம்மதிக்கின்றனர். அதைக் கெடுக்காது உடனே திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'' என்றாள் மல்லிகா.

''நான் ஆராயாமல் அவசரபட்டதாலை தான் இவையெல்லாம் நடக்குது'' என்றாள் செல்வி.

''நடந்து முடிந்தவற்றை நினைத்துக் கவலைப்படுவதால் எதுவும் நடவாது. அதனால் துன்பங்கள் தான் மிகுந்து வரும். வாழ்க்கையை நாம் விரும்பியபடி அமைப்போம் என்று திடசங்கற்பம் எடு என்று நான் பல முறை கூறியும் நீ கேட்கிறாயில்லை. கவலைப்படுவதாலோ முடிந்ததை நினைத்து வருத்தப்படுவதாலோ நன்மை நடக்காது. கவலைப்படுவதன் மூலம் பட்ட துன்பங்கள் தீர்ந்து விடுமென்றால் கவலைப்படலாம்'' என்றாள் மல்லிகா.

“எப்படித் தான் மனதிற்குச் சமாதானம் சொன்னாலும் அது சொல்லப்படும் நேரம் தான் கேட்டும் தனிமையில் இருந்தாலோ அல்லது துன்பங்கள் கூடினாலோ அது எல்லாவற்றையும் மறந்துவிடும். சுகுமார் அப்படிச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. அதை நினைத்தால் அவனைக் கொல்ல வேண்டுமென்ற வெறி தான் வருகிறது. நீங்கள் என்னைத் திருமணஞ் செய்யுமாறு கேட்ட போது ஏன் பிரசங்கம் செய்வான். நாகரிகமாக எனக்கு விருப்பமில்லை என்று சொல்லியிருக்கலாம். திருமணம் என்பது இரு உள்ளங்கள் மனமொத்து ஏற்றுக்கொள்ளல். விருப்பமில்லாத பெண்ணையோ ஆணையோ வற்புறுத்திச் செய்தால் அது வாழ்வைச் சீர்குலைத்து விடும். அதை விட்டு விட்டு இயக்கத்திற்குச் சென்ற பெண்ணுக்குக் குடும்பப் பண்பிராது என்று எப்படிச் சொல்ல முடியும்? அது தான் வேதனையாக இருக்கு. அதை இயக்கத்தின் மீது விருப்பமில்லாதவன் சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம்” என்று பெருமூச்சு விட்டாள் செல்வி.

அவனது மார்பு மேலும் கீழும் அசைந்தது. அதை அவளால் பொறுக்க முடியவில்லை என்று மல்லிகா நினைத்தாள்.

“இஞ்சை வாழ்ந்தவை எல்லோரும் இயக்கத்தை விரும்பவில்லை. சிலர் பயங்காரணமாக நடித்தனர். சிலர்

பகிரங்கமாக எதிர்த்தனர். இவர்கள் சொன்னால் ஏற்கத் தான் வேண்டும். ஆனால் இயக்கத்தின் தூண்கள் சொன்னால் எப்படி ஏற்பது?'' மல்லிகாவைப் பார்த்தாள் செல்வி.

மல்லிகாவுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அதனால் பேசாது இருந்தாள்; ''அக்கா எனது மனதில் உள்ள அனைத்தையும் நான் உங்களுக்குக் கூறவில்லை. ஒரு விடயத்தை மறைத்து விட்டேன்'' என்று செல்வி பேச்சை நிறுத்தினாள்.

''என்ன சொல்லு''

மீண்டும் சில கணங்கள் பேசாதிருந்த செல்வி கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னாள்; ''சுகுமார் கெட்டவன். அவனுடன் தான் நான் கல்வி கற்றேன். அவன் யசோதா என்ற பெண்ணுக்குப் பின்னால் அலைந்தவன். ஆனால் அவளுக்கு இவனைப் பிடிக்காது. ஒரு நாள் யசோதாவின் கையைப் பிடித்து விட்டான். உடனே யசோதா தனது செருப்பைக் கழற்றி அடித்து விட்டாள். இது யாருக்கும் தெரியாது. அதன் பின் அவன் எனக்குப் பின்னால் சுற்றினான். யசோதா எனது நல்ல நண்பி. அதனால் அவள் நடந்ததை எனக்குச் சொல்லி விட்டாள். அவன் எனது மாமனின் மகன் என்பதால் எனது வீட்டுக்கு அடிக்கடி வருவான். யாரும் இல்லாத

நேரம் வந்தால் தன்னைக் காதலிக்குமாறு வற்புறுத்துவான். ஆரம்பத்தில் எனக்குப் பிடிக்கவில்லை. பின் அவன் தான் வெளிநாட்டுக்குச் செல்லப் போவதாகச் சொல்லி என்னை வற்புறுத்தியமையால் ஒப்புக் கொண்டேன். ஒப்புக் கொண்ட மறுநாள் வீட்டுக்கு வந்து தகாத வார்த்தைகளைப் பேசினான். எனது கையைப் பிடித்து தன்னோடு அணைக்க முயற்சித்தான். அப்போது யசோதா சொன்ன வார்த்தைகள் எனது காதில் ஒலித்தன; ‘‘செல்வி சுகுமாருக்குக் காதலிக்கும் எண்ணம் துளி கூட இல்லை. அவன் சரசம் செய்யவே விரும்புவான். முன்பு என்னோடு அலைந்தான். பின்பு மஞ்சுளாவின் பின் அலைந்தான். இப்போ உனக்குப் பின்னால் அலைகிறான் கவனம்’’ என்றவள். ‘‘அதனால் அவனைப் பேசிக் கலைத்துவிட்டேன். அவன் வெளிநாட்டிலும் பெண்களுக்குப் பின்னால் அலைந்து திரிவதாகவும் அறிந்தேன். அதனால் அவன் ஒப்புக் கொண்டாலும் நான் சம்மதிக்கமாட்டேன்’’ என்றாள் செல்வி.

‘‘இதை முன்பே சொல்லியிருந்தால் நான் அவனைக் கேட்டிருக்கமாட்டன்’’ என்றாள் மல்லிகா.

‘‘பரவாயில்லை அக்கா விடுங்கோ. முன்பே நான் சொல்லியிருக்கலாம் தான். அவன் திடீரென்று ஊருக்கு வருவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அத்துடன்

ஒருவன் செய்த தீய செயலைப் பெற்றாருக்குக் கூடச் சொல்வது சரியில்லை. யாருக்காவது தெரிந்தால் எல்லோரும் பெண்களைத் தான் குறை கூறுவார்களே தவிர ஆண்களைக் குறை கூறமாட்டார்கள்'' என்றாள் செல்வி.

மல்லிகா சென்றுவிட்டாள். ரதினியும் வசந்தினியும் மாதவியும் அவளின் அருகே வந்தனர்; ''இதை எமக்கும் மறைத்து விட்டாய்'' என்றாள் வசந்தினி.

''இளமைப் பருவத்தில் ஆண்களுக்குப் பெண்களைச் சுற்றித் திரிவது தானே வேலை. இதையெல்லாம் நான் பெரிதாக எடுக்கவில்லை. மல்லிகாக்கா அவனைக் கேட்டதற்காகவும் அவன் பிரசங்கம் செய்ததற்காகவும் சொன்னேன்.'' என்றாள் செல்வி.

''ஓ, நீ சொல்வதும் நியாயம் தான். எமக்குப் பின்னால் திரிந்தவர்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியுமா என்ன....? அப்போ வாலிப வயதை அடைந்த ஆண்களும் பெண்களும் இயக்கத்தைப் பற்றித் தானே கதைத்தவை. அப்ப காதலிக்கிறவையும் இயக்கத்தைப் பற்றித் தான் கதைத்தவை. உதையெல்லாம் விடு. கல்வி தான் எமக்கு இப்ப

முக்கியம். அதிலை கவனத்தைச் செலுத்துவோம். மற்ற எதையும் நம்பிப் பிரயோசனமில்லை'' என்றாள் மாதவி.

சரி நீ போய்த் தேங்காய் வியாபாரியிடம் காசை வாங்கு'' என்று சிரித்தாள் காயத்திரி.

# 20

வெளியே யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு வெளியே வந்த மல்லிகா சுவரில் தொங்கிய மணிக்கூட்டைப் பார்த்தாள். அதிகாலை மூன்று மணியென்று அது சொல்லியது. மீண்டும் கூப்பிடும் சத்தம் கேட்டது. அது பழக்கப்பட்ட குரலாக இருந்த போதும் உடனே அடையாளம் காண அவளால் முடியவில்லை.

வெளி லைற்றைப் போட்டு விட்டுக் காயத்திரியின் அறைக்குச் சென்று அவளை எழுப்பினாள். இந்த ஆரவாரத்தில் வசந்தினியும் ரதினியும் எழுந்து வந்தனர். மீண்டும் அழைப்பொலி கேட்டது; “ கௌசல்யாவின் குரல் போலத் தெரிகிறது. ஏன் இந்த நடுச்சாம வேளையில் கூப்பிடுகிறாள்? யாருக்காவது வருத்தமோ தெரியவில்லை'' என்றாள் காயத்திரி.

அப்போது மாதவியும் செல்வியும் எழுந்து வந்தனர்; ‘‘கௌசல்யாவின் குரல் தான்’’ என்றபடி வெளிக் கதவைத் திறந்தாள் மல்லிகா. வெளியே கௌசல்யாவும் தாரணியும் நின்றனர். அவர்களின் முகம் விகாரமடைந்திருந்தது. அவர்களால் பேச முடியவில்லை. விக்கி விசும்பி அழத் தொடங்கினர். நேரம் செல்லச் செல்ல அழுகையின் ஒலி அதிகரித்தது.

‘‘என்ணெண்டு சொல்’’ என்றாள் மல்லிகா.

‘‘என்னென்று சொல்லிவிட்டு அழு. நீ அழுதால் காரணத்தை நாம் எப்படிக் கண்டு பிடிப்பது சொல்லடி..’’ அதட்டினாள் காயத்திரி.

‘‘அவர்கள் தாங்க முடியாத துக்கத்தில் வந்துள்ளனர். எவ்வளவு துன்பங்களிலிருந்தாலும் விகடமாகப் பேசும் கௌசல்யா பேசமுடியாமல் அழுகிறாளென்றால் அது ஏதோ பெரிய விசயமாகத் தான் இருக்கும். சொல்லிப் போட்டு அழு’’ என்றாள் ரதினி.

இருந்தும் இருவரினதும் அழுகை அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. விக்கி விசும்பிய தாரணி; ‘‘இரவு யாரோ கடையை உடைத்துக் கொள்ளையடித்து விட்டார்கள் விடிய வியாபாரத்திற்காகச் சென்ற கோபாலண்ணை வந்து சொன்னார்.’’ என்ற அழுதாள்.

“நீங்கள் போய்ப் பார்த்தனீங்களோ” என்று கேட்டாள் மல்லிகா.

“இல்லை” என்றாள் கௌசல்யா.

“வாருங்கோ போய்ப் பார்ப்பம்” என்று கூறிய காயத்திரி உள்ளே சென்று ரோச் லைட்டுடன் வந்தாள்.

கௌசல்யாவும் தாரணியும் காயத்திரியும் ரதினியும் மாதவியும் செல்வியும் வசந்தினியும் வந்த போது கடை வாசலில் கோபாலனும் வேறு சிலரும் நின்றனர்.

“ஒருத்தரும் உள்ளே போகாதைங்கோ” என்ற காயத்திரி ரோச்சை அடித்துப் பார்த்தாள். அங்கே ஒரு பொருட்களும் இல்லை; “ஐயோ, எம்முடைய ஐந்து கொம்பியூட்டர்களும் பிரின்ரரும் வேறு பொருட்களில் எதுவும் இல்லை” என்று அலறினாள் கௌசல்யா. அவளுக்குத் தலை சுற்றியது. மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள்.

கடையடியில் பலத்த ஆரவாரங் கேட்டு எழுந்த கடையின் உரிமையாளர் மணியம் கடைக்குப் பின்புறமாக இருந்த தனது வீட்டு லைற்ருக்களைப் போட்டு விட்டு வீதிக்கு வந்தாள்.

ரதினியும் காயத்திரியும் கௌசல்யாவைத் தூக்கிச் சென்று மணியத்தின் வீட்டுப் போட்டிக் கோவில் கிடத்தினர். மணியம் செம்பில் நீர் கொண்டு வந்து கொடுக்கக் காயத்திரி அதை வாங்கி முகத்தில் தெளித்தாள். சில நிமிடங்களில் கண் விழித்த கௌசல்யா பலமாக அழுதாள்.

“அழாதை கௌசல்யா. அழுதால் எதுவும் நடக்காது. வா ஆக வேண்டிய கருமங்களைப் பார்ப்போம்.” என்றாள் காயத்திரி.

“ஐந்து பேற்ரை வாழ்க்கையும் போச்சு. ஐயோ. எங்கடை சமூகம் எம்மை வாழவிடாது. நாம் தற்கொலை செய்ய வேண்டியது தான்” பலமாக அழுதாள் தாரணி.

“வெளிநாட்டிலிருந்து வந்த குகன் எம் மீது இரக்கப்பட்டு ஓர் இலட்சம் ரூபா தந்தவர். மல்லிகாக்காவும் உதவி செய்ததாலை ஒரு கொம்பியூட்டரும் ஒரு பிரின்ரரும் வாங்கித் தொழிலைத் தொடங்கினனாங்கள். எமது அயராத முயற்சியாலை ஐந்து கொம்பியூட்டர்கள் வாங்கினோம். இப்ப ஐந்தும் போய்விட்டது. இனி என்ன செய்வது..?” விம்மினாள் கௌசல்யா.

கௌசல்யா ஏ.எல் படித்துக் கொண்டிருக்கும் போது இயக்கத்திற்குச் சென்றவள். அவள்

இயக்கத்திற்குச் சென்ற போது அவளின் பயிற்றுவிப்பாளாராக இருந்தவள் தாரணி. அவள் முல்லைத்தீவைச் சேர்ந்தவள். மாங்குளம் தாக்குதலின் போது பெற்றோரை இழந்தவள். பின் இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று விடுதலையானவள். தாரணி விடுதலை பெற்ற பின்பு முல்லைத்தீவுக்குச் சென்று சகோதரர்களோடு கமச் செய்கையிலீடுபட்டாள்.

கௌசல்யா இயக்கத்தில் இருக்கும் போது கணிணிப் பயிற்சி பெற்றிருந்தாள். பின் புனர்வாழ்வின் போது கணிணிப் பயிற்சியோடு கணிணி திருத்தும் பயிற்சியையும் பெற்றிருந்தாள். இருப்பினும் கணிணி வாங்கப் பணம் அவளிடம் இல்லாததால் ஒரு தனியார் கடையில் மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பளத்திற்கு வேலை செய்து வந்தாள்.

குகன் மல்லிகாவின் இனத்தவன். அவன் வெளிநாட்டிலிருந்து வந்த போது மல்லிகா கௌசல்யாவுக்கு உதவி செய்யுமாறு கேட்க அவன் ஒரு இலட்ச ரூபா கொடுத்தான். அத்துடன் தனது இனத்தவரான மணியத்தின் கடையையும் வாங்கிக் கொடுத்தான். அதனால் கௌசல்யா, குகன் கணிணி அகம் என்று பெயரிட்டு கடந்த மூன்று வருடங்களாக நடத்தி வருகிறாள்.

ஆரம்பத்தில் அவர்களுக்கு வருமானம் மிகவும் குறைவாக இருந்தது; ‘‘முன்பு போலக் கடையில் வேலை செய்திருக்கலாம்’’ என்று நினைப்பாள். அதை அவள் மல்லிகாவுக்குச் சொன்னாள்.

‘‘விசரி மாதிரிக் கதையாதை. எந்த ஒரு தொழிலையும் ஆரம்பிக்கும் போது வருமானம் பெரிதாக வராது. போகப் போகத் தான் வரும். அத்துடன் உனக்குக் கணிணி திருத்தத் தெரியும் என்று யாருக்கும் தெரியாது. எமது பாடசாலை அதிபரை நான் நேற்றுக் கண்டனான். தமது பாடசாலையில் இரண்டு கணிணிகள் இருக்கிறதாம். ஒன்று பழுதாகிவிட்டது. இங்கு யாருக்கும் கணிணியைச் சரியாகத் திருத்தத் தெரியாது’’ என்றார். நான் உன்னை அனுப்புவதாகச் சொன்னனான். போய்ப்பார் என்றாள் மல்லிகா.

உடனே கௌசல்யா புறப்பட்டுப் பாடசாலைக்குச் சென்றாள். அன்று பாடசாலையின் பரிசளிப்புவிழா நடைபெற்றது. அதனால் அக்கம் பக்கத்துப் பாடசாலைகளின் அதிபர்கள் பலர் வந்திருந்தனர். கௌசல்யா பதினைந்து நிமிடங்களில் கணிணியைத் திருத்திவிட்டாள்.

அதைக் கண்டு அதிசயித்த பாடசாலை அதிபர், அங்கு அன்று வந்திருந்த அதிபர்களுக்குச் சொன்னார்;

‘‘மிகவும் திறமையான பிள்ளை. இரண்டு முறை இக் கணிணி பழுதடைந்து திருத்தினேன். அவர்கள் இனித் திருத்த முடியாது புதிதாக வாங்குங்கோ’’ என்றவை. இப்ப கௌசல்யா திருத்திவிட்டாள். உங்களது பாடசாலைக் கணிணிகள் திருத்த இருந்தால் கௌசல்யாவிடம் கொடுங்கோ’’ என்றார். அன்றிலிருந்து கௌசல்யாவுக்கு வேலை அதிகரித்தது. அதனால் தாரணியை அழைத்துத் தன்னுடன் வைத்திருந்தாள். தாரணி வரும்போது கணிணியைப் பற்றிப் பெரிதாக அறிந்திருக்கவில்லை. நாளடைவில் அவளும் கற்றுத் திறமைசாலியாகி விட்டாள். வேலையும் பல மடங்கு அதிகரித்தமையால் மேலும் மூன்று புனர்வாழ்வு பெற்ற பெண்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டாள். அதன் பின் அவள் நான்கு கொம்பியூட்டர்களை வாங்கிப் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்து வருகிறாள்.

நன்றாக விடிந்து விட்டது. விசயத்தை அறிந்த கணேசன் கடைக்கு வந்தார்.

‘‘கௌசல்யா, கணேஸ் அண்ணாவுடன் சென்று காவல்துறையில் உடனே புகாரிடு. வேண்டுமானால் காயத்திரியையும் அழைத்துச் செல்’’ என்றாள் மல்லிகா.

அவர்கள் காவல்துறைக்குச் சென்று புகாரிட்டவுடன் அவர்கள் கடைக்கு வந்தனர். கடை உடைத்தெடுக்கப்பட்டிருந்தது. பெறுமதியான எப் பொருட்களும் அங்கு இருக்கவில்லை.

காவல்துறையினர் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தனர்; ‘‘தேவையேற்பட்டால் மோப்ப நாயைக் கொண்டு வருவோம். இப்போ குடாநாட்டில் சகல குற்றச் செயல்களும் அதிகரித்து விட்டன. ஒரு காலத்தில் கலாசாரத்திற்குப் பேர் போன யாழ்ப்பாணம் இன்று சீரழிந்து வருகிறது. இங்கு வாழும் பலருக்கு மனச்சாட்சியே இல்லை. நேற்றுப் பாடசாலையின் பின்புறத்தில் போதை ஊட்டும் பொருட்களை மாணவர்களுக்கு விற்பனை செய்த இருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளோம். அதை விடச் சிறுவர் துஸ்பிரயோகமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அத்துடன் திருடர்களின் அட்டகாசத்தால் மக்கள் பயப்படுகின்றனர். இப்போ புனர்வாழ்வு பெற்ற உங்களது கடை உடைத்துத் திருடப்பட்டுள்ளது. இதை மனச்சாட்சியுள்ள எவனும் செய்யமாட்டான்’’ என்றார் இன்ஸ்பெக்ரர்.

காயத்திரிக்குக் கவலையாக இருந்தது; ‘‘இயக்கமிருந்த காலத்தில் தண்டனைக்குப் பயந்து தீய செயல்களைச் செய்யத் தீயவர்கள் அஞ்சினர். இப்போ

நேரடியாகத் தண்டனை கொடுக்க முடியாததால் தீயவர்கள் அஞ்சுவதில்லை’’ என்று நினைத்தாள்.

‘‘பயப்படாதீர்கள். திருடர்களை நாம் விரைவில் கைது செய்வோம். உங்களுக்குச் சந்தேகமிருந்தால் பெயர்களைக் கூறுங்கள். அப்படிக் கூறினால் எமக்குச் சுலபமாக இருக்கும்’’ என்றார் இன்ஸ்பெக்ரர்.

கௌசல்யா யோசித்துப் பார்த்தாள். யாரின் மீதும் அவளுக்குச் சந்தேகமேற்படவில்லை.

# 21

மல்லிகாவின் வீட்டுக்கு வந்த தாரணி சொன்னாள்; ‘‘எனக்கு ஒருவர் மீது சந்தேகமிருக்கு. ஆறுதலாக யோசித்து விட்டுச் சொல்வோம் என நினைத்து நான் இன்ஸ்பெக்ரர் கேட்ட போது சொல்லவில்லை’’

‘‘யாரென்று சொல்லு எந்தக் கொம்பணெண்டாலும் பரவாயில்லை’’ என்றாள் கௌசல்யா.

‘‘எனக்குக் கைலாயநாதனில் சந்தேகமிருக்கு. அவர் நான் வீதியால் சென்று வரும்போது முறைத்துப் பார்ப்பார். சென்ற வாரம் கடைக்கு வந்து கொம்பியூட்டர் ஒன்று திருத்த வேணும் என்றார். அப்போது கௌசல்யா வேறிடமொன்றிற்குச் சென்றதால் அதைக் கொண்டு வருமாறு கூறினேன். அதற்கு அவர்; ‘‘அரைக்காசுக்கு வழியில்லாதவர்களின்ரை வீட்டை போய்த் திருத்துவியள் எங்கடை வீட்டை வரமாட்டியளோ’’ என்றவர். அதற்கு நான் பதில் சொல்லவில்லை. அவரை எனக்கு இயக்க வேலை செய்யும் போதே தெரியும். அவர் இயக்கத்தின்ரை பெரும் ஆதரவாளர். இயக்கத்திற்குப் பெரும் ஆதரவு கொடுப்பதால் சனங்களுக்குப் பயம். அவர் வேலாயுதம் விவசாயம் செய்த சிதம்பர சொத்துக்காணியைப் பலாத்காரமாகப் பெற்றவர். இருந்தும் பயம் காரணமாக வேலாயுதம் அதைப் பற்றிக் கதைக்க விரும்பவில்லை. அந்தக் காணியை அவர் பலவந்தமாகக் கைப்பற்றும் போது வேலாயுதத்தின் பிள்ளைகள் விபரமறியாத சிறுவர்கள். மூத்தவன் வளர்ந்த பின்பு நான் இக் கிராமத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டேன். அப்போது வேலாயுதத்தின் மூத்தமகன் ஆரூரன் வந்து எனக்கு முறையிட்டான். அந்தச் சிதம்பர சொத்துக் காணிக்குக் கைலாயநாதன் கள்ள உறுதி முடித்து விற்க முற்பட்டான். வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பமொன்று அக் காணியை

வாங்க முயன்றது. ஆரூரன் இடம்பெயர்ந்த மக்களுக்கு அதைக் கூறி அக் காணியை வாங்க வேண்டாம் என்றான். அத்துடன் என்னிடமும் முறையிட்டான். அதனால் விசாரணையில் ஈடுபட்டேன். அதன் மூலம் பல உண்மைகள் வெளிப்பட்டன. கைலாயநாதன் தான் பெரும் இயக்கத் தூண் என்று கூறி இத்தகைய தீய செயல்களைச் செய்து வந்தார். அதை நான் மேலிடத்திற்கு அறிவித்ததால் பெரும் பிரச்சினைகள் வந்தது. அதன் பின் நான் முல்லைத்தீவுக்குச் சென்று, பின் யுத்தம் தீவிரமடைந்த போது சரணடைந்து புனர்வாழ்வு பெற்றேன். பின் கௌசல்யா என்னை அழைத்ததால் இங்கு வந்தேன். அவர் என்னைக் காணும் போதெல்லாம் முறைத்துப் பார்ப்பார். பல்லை நெருடுவார். நான் அதைப் பொருட்படுத்துவதில்லை. அதனால் தான் அவரைச் சந்தேகிக்கிறேன்'' என்றாள் தாரிணி.

‘‘இதை வைத்துக் கொண்டு நாம் காவல்துறைக்குத் தவறானவர்களின் பெயரைக் கூறக்கூடாது. கைலாயநாதன் ஊரில் மதிப்பாக வாழ்கின்ற பணக்காரன். அதனால் அவரை எதிர்க்கப் பலர் அஞ்சுகிறார்கள். இப்படியிருக்க நாம் அவரைக் குற்றம் சொல்வது சரியல்ல. நாம் சொன்னவுடன் காவல்துறையினர் அவரின் வீட்டுக்குச் செல்வார்கள். அவரை விசாரித்த பின் அவர் குற்றவாளியல்ல என்று தெரிந்தால் பல பிரச்சினைகள் வரும். அதனால் நீ

பேசாமல் இரு. நாங்கள் விசாரிப்போம். பொலிசாரும் விசாரிப்பார்கள். எதற்கும் அவசரப்படக் கூடாது'' என்றாள் கௌசல்யா.

''நானும் அப்படித் தான் நினைக்கிறேன். பொறுமையாக இரு. இதை நிதானமாகத் தான் கையாள வேண்டும்'' என்றாள் மல்லிகா.

''இருந்த பணம் முழுவதையும் திரட்டிக் கடனும் வாங்கித் தான் சென்ற வாரம் ஒரு கொம்பியூட்டர் வாங்கினது. எல்லாம் போச்சு. இனி என்ன செய்வது? ஒரு கொம்பியூட்டரும் பிரின்டரும் வாங்கக் குறைந்தது ஒரு இலட்சம் வேணும்'' என்றாள் கௌசல்யா.

''அந்தக் கடை பாதுகாப்பானதாகத் தெரியவில்லை. இனித் தொழிலைத் தொடங்குவதானால் பாதுகாப்பான இடத்தில் தான் தொடங்க வேண்டும். நெடுகத் திருடர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கக் கூடாது'' என்றாள் தாரிணி.

''இப்ப ஊரிலை உள்ளவர்கள் எல்லோருக்கும் கௌசல்யா திறமையான கணிணித் திருத்துனர் என்று தெரியும். வெளியிடங்களில் இருந்து கூடத் தேடி வருகிறார்கள். அதனால் எமது வீட்டிற்கு முன்பாக உள்ள உரித்த தேங்காய்கள் போடும் அறையைத்

துப்பரவு செய்து விட்டுக் கௌசல்யாவுக்குக் கொடுப்போம். உரித்த தேங்காய்கள் போட தற்காலிகமாக ஒரு ஓலைக்கொட்டில் போடுவோம். உரித்த தேங்காய்கள் ஓரிரு நாட்கள் தானே அங்கே இருக்கும்'' என்றாள் சௌமியா.

''அதுவும் சரி தான். இது பிரதான வீதிக்குச் சற்றுத் தள்ளியிருப்பதால் வாடிக்கையாளர்கள் வருவார்களா.?'' என்று கேட்டாள் மல்லிகா.

''வாடிக்கையாளர்கள் எப்போதும் திறமையானவர்களைத் தேடித் தான் வருவார்கள். வேண்டுமானால் கொஞ்ச நாட்களுக்குத் தாரிணி பழைய கடையில் இருக்கட்டும்.'' என்றாள் சௌமியா.

''இப்போ கடையைப் பற்றிப் பேசுகிறீர்கள். கடை திறக்க இரண்டு மூன்று இலட்சம் தேவை'' என்றாள் கௌசல்யா.

''அதெல்லாம் வரும். நினைச்சால் எதையும் செய்யலாம்'' என்றாள் சௌமியா.

''ஆரூரன் கெட்டிக்காரன். தனது நண்பர்களோடு சேர்ந்து துப்பறிந்து விடுவான்.'' என்றாள் தாரிணி.

திருட்டு நடந்து இரண்டு தினங்கள் கழிந்துவிட்டன. எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. வேலையில்லாததால் தாரிணி தனது இனத்தவர்களைப் பார்த்து விட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு முல்லைத்தீவிற்குச் சென்றுவிட்டாள்.

காயத்திரியும் கௌசல்யாவும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றனர். அவர்களைக் கண்ட இன்ஸ்பெக்ரர் சொன்னார்; ‘‘எந்த விபரங்களையும் அறிந்து கொள்ள முடியாதிருக்கின்றது. நாங்கள் சந்தேகத்தின் பேரில் பலரை விசாரித்து விட்டோம். சிறு சிறு களவுகளைச் செய்யும் சிலரைக் கைதுசெய்து விசாரித்துப் பார்த்தோம். அவர்கள் எடுக்கவில்லை. இதை யாரோ நன்கு திட்டமிட்டுச் செய்துள்ளனர். மூளையுள்ளவன் தான் செய்துள்ளான். நாளைக்கு அயலூரில் நடந்த கொலை தொடர்பான துப்புத் துலக்க மோப்ப நாய்கள் வருகின்றன. அவற்றை உங்கள் கடைக்கும் கொண்டு வருகிறேன். பயப்படாதீர்கள். சற்றுப் பொறுமையாக இருங்கள்’’ என்றார் இன்ஸ்பெக்டர்

‘நாங்கள் மிகவும் ஏழைகள். இப்போ எமக்கு உணவுக்கே கஷ்டமாக இருக்கு’’ என்றாள் கௌசல்யா.

‘‘உங்களைப் பற்றிய எல்லா விபரங்களும் எனக்குத் தெரியும். ஒரு காலத்தில் கடவுளை விட

மேலானவர்களாகக் கருதப்பட்ட நீங்கள் இப்போ செல்லாக் காசாகி விட்டீர்கள். எந்த மக்கள் உங்களைக் கடவுளாகத் தொழுதார்களோ, அதே மக்கள் உங்களை அறுந்த செருப்பாகக் கூடக் கருதுவதில்லை. பாவம் நீங்கள்'' என்றார் இன்ஸ்பெக்ரர். அவர் ஒரு சிங்களவர். அவர் பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப் பிரதேசங்களில் கடமையாற்றியதால் நன்றாகத் தமிழ் பேசுவார்.

மறுநாள் இன்ஸ்பெக்ரர் கௌசல்யாவின் வீட்டுக்கு வந்து; ''இன்று மாலை நான்கு மணிக்கு மோப்ப நாய் வரும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

மூன்று மணிக்கு காயத்திரியும் கௌசல்யாவும் ரதினியும் கடைக்கு வந்தனர். நான்கு மணிக்கு இரண்டு பொலிஸ் ஜீப்புக்கள் வந்து கௌசல்யாவின் கடை வாசலில் நின்றன. ஜீப்பில் இருந்து ஒரு பொலிஸ்காரர் பெரியதொரு கறுப்பு நாயுடன் இறங்கினார். மிகவும் உயரமான பருத்த அந்த நாய் திமிறியபடி இறங்கித் தரையை முகர்ந்தவாறு கடைக்குள்ச் சென்றது. கடை முழுவதையும் ஓடி ஓடி அந்நாய் முகர்ந்தது. அதன் பின் பிறபக்க வாசல் வழியாக முகர்ந்து முகர்ந்து மணியத்தின் வீட்டு வாசலில் போய் நின்று குரைத்தது. மணியம் வெளியே வர அந்நாய் அவரது கையைப் பிடித்தது.

கூட வந்த பொலிசார் மணியத்தைக் கைது செய்ய நாய் மணியத்தின் வீட்டின் உள்ளே சென்றது. உள்ளே பிரின்டர் இருந்தது. அதை கௌசல்யா எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சிக்குள்ளானாள். மணியம் ஓய்வு நேரங்களில் கடையில் வந்திருந்து கதைப்பார். மிகவும் நல்லவர் என்பதால் தாரிணியும் கௌசல்யாவும் அவருக்குத் தமது இன்ப துன்பங்களைச் சொல்வார்கள். அவர் இப்படிச் செய்வாரென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

மணியத்தைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வந்த இன்ஸ்பெக்ரர் சொன்னார்; ‘‘உன்னை நல்லவரென்று ஊர் நம்பியுள்ளது. நல்லவனைப் போல நடித்துக் கொள்ளைகளில் ஈடுபடுகிறாய். சென்ற வாரம் சந்தியில் திருநாவுக்கரசுவின் கடை உடைத்துத் திருடப்பட்டது. அதையும் நீ தான் செய்திருக்கிறாய்’’ என்றவாறு ஓங்கி அடித்தார்.

‘‘இல்லை ஐயா, இல்லை ஐயா நான் இதைச் செய்யவில்லை. கைலாயநாதன் தான் செய்தவன். நான் அவனுக்கு உதவி செய்தனான்’’ நடு நடுங்கினான் மணியம்.

உடனே இன்ஸ்பெக்ரர் சாஜனை அழைத்துக் கைலாயநாதனைக் கைது செய்து வருமாறு பணித்தார்.

மறுகணம் ஜீப்வண்டி கைலாயநாதனின் வீட்டை நோக்கிப் பறந்தது.

“தாரிணி சொன்னது சரி. நாம் தான் அவர் பெரிய மனிதரென்று தயங்கினோம். தாரிணிக்குச் சொல்லு” என்றாள் காயத்திரி.

பதினைந்து நிமிடங்களில் கைலாயநாதனுடன் ஜீப்வண்டி வந்து சேர்ந்தது. கைலாயநாதன் தலையைக் குனிந்தபடி வந்தார்.

“நீங்களெல்லாம் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டு கீழ்த்தரமான வேலைகளைச் செய்கிறீர்கள். நாட்டுக்கு எதிராகப் போராடியவர்களை கைது செய்து புனர்வாழ்வு கொடுத்து மன்னித்து விடுதலை செய்துள்ளது அரசு. உங்களுக்காகப் போராடியவர்களை போற்றிப் புகழ்ந்த நீங்கள் இப்போ அவர்களில் யாருக்காவது உதவி செய்துள்ளீர்களா…..? உதவி தான் செய்யாவிட்டாலும் உபத்திரமாவது கொடுக்காமல் இருக்கலாமல்லவா. அந்தப் பெண்கள் பாவம். ஏழைகள். உதவி இல்லாதவர்கள். அவர்களை ஏன் வருத்துகிறீர்கள்?” அதட்டினார் இன்ஸ்பெக்ரர்.

கைலாயநாதன் பேசாது மௌனமாக நின்றார்; “சொல்லு ஏன் களவெடுத்தனீ…? உன்னிடம் பொருள் ஏராளமாக இருக்கு. தானதர்மம் செய்கிறாய். கோயிலில்

பூசைகளை வெகுவிமர்சையாகச் செய்கிறாய். ஆடம்பரத்திற்கும் பேருக்கும் புகழுக்காகவுமா திருடுகிறாய்.? இங்கு நடைபெறும் திருட்டுக்களுக்கெல்லாம் காரணி நீயும் உன் நண்பனுமா..?'' என்று கோபத்துடன் எழுந்தார் இன்ஸ்பெக்ரர்.

''இல்லை ஐயா, நாம் திருடர்களல்ல…?'' தடுமாறினார் கைலாயநாதன்.

''நீங்கள் திருடாவிட்டால் உங்கள் வீட்டுக்கு எப்படிக் கௌசல்யாவின் கடைப்பொருட்கள் வந்தன.?''

''தாரிணி இயக்கத்தில் இருக்கும் போது இவர் கள்ளமாகப் பிடித்து வைத்திருந்த சிதம்பரச் சொத்துக் காணியைப் பறித்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடு கட்டக் கொடுத்தவள். அதற்குப் பழி வாங்கத் தான் இப்படி நடந்துள்ளார்'' என்றாள் காயத்திரி.

''இந்தப் பெண் சொல்வது உண்மையா..? இல்லாவிட்டால் காரணத்தைச் சொல். சொல்லாவிட்டால் என்ன செய்வன் தெரியுமா…?'' கையை ஓங்கினார் இன்ஸ்பெக்ரா.

# 22

கைலாயநாதன் எதுவும் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை; ‘‘என்ன உண்மையைச் சொல்லப் போகிறாயா… இல்லை எமது செயலைக் காட்டவா..? என்று எழுந்தார் இன்ஸ்பெக்ரர்.

மணியம் ஆடிப்போனார். இருவரும் நண்பர்கள். கைலாயநாதனின் மனைவி மாமிசம் உண்பதில்லை. அவள் மாமிசம் சமைத்துக் கொடுக்கமாட்டாள். அதனால் கைலாயநாதன் மாமிசம் வாங்கி வந்து மணியத்திடம் கொடுப்பார் மணியத்தின் மனைவி அதைச் சமைத்துப் போத்தல் ஒன்றில் விட்டுக் கொடுப்பாள். ஆரம்பத்தில் மணியத்தின் வீட்டிலேயே கைலாயநாதன் சாப்பிட்டு வந்தார். அதனால் சில பிரச்சினைகள் வர மணியத்தின் மனைவி கைலாயநாதனுக்குச் சமைத்துக் கொடுக்க மறுத்துவிட்டாள். அதன் பின்பு கைலாயநாதன் மன்றாடிக் கேட்டான். அதற்கிரங்கி மணியத்தின் மனைவி சமைத்துக் கொடுத்தாள். அதை அவர் வீட்டுக்குக் கொண்டு சென்ற போது அவரின் மனைவி அவரை வீட்டுள் வைத்துச் சாப்பிட அனுமதிக்கவில்லை. பின்புறம் விறகு போடுவதற்காகப் போடப்பட்ட கொட்டிலைத் திருத்தி அதனுள் வைத்தே அவர் சாப்பிட்டு வருகிறார்.

கைலாயநாதனுக்கு மது அருந்தும் பழக்கமும் உண்டு. மணியமும் மது அருந்துவார். இருவரும் இரவில் மணியத்தின் வீட்டில் இருந்து மது அருந்துவார்கள். கௌசல்யாவுக்காக மல்லிகா கடையைக் கேட்ட போது மணியம் கொடுத்துவிட்டார். அப்போது கடையில் பெரிதாக வியாபாரம் நடக்கவில்லை. நாளடைவில் அக்கடை பிரபலமாக வேலையாட்களும் அதிகரித்தனர். தாரிணியும் வந்து சேர்ந்தாள். தாரிணி வந்த பின்பு கைலாயநாதன் அவர்களைக் கடையை விட்டெழும்புமாறு வற்புறுத்தி வந்தார்.

மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா வாடகைப் பணத்தை இழக்க மணியம் விரும்பவில்லை. தினமும் மது அருந்தும் போது கைலாயநாதன் கடையை விட்டு விடும்படி கூறுமாறு மணியத்தை வற்புறுத்துவார். ஒருமுறை மல்லிகாவிடஞ் சென்று கடையை விடும்படி கூறினார்.

“உடனே எப்படிக் கடையை விட முடியும்? கௌசல்யா பல ஆயிரம் ரூபா செலவு செய்து மின்னிணைப்புச் செய்துள்ளாள். உடனே கடையை விடுவதானால் மின்னிணைப்புக்காகச் செலவு செய்த ஐம்பதினாயிரத்தைத் தரல் வேண்டும்” என்றாள்.

அதை எதிர்பாராத மணியம் திகைத்துப் போனார். அதை அவர் கைலாயநாதனிடம் கூறிய போது

கைலாயநாதன் சாராயத்தைக் குடித்து விட்டுச் சொன்னார்; ‘‘அவா அப்பிடிச் சொன்னவாவோ? அப்ப அழிச்சிடுவம். கடையைத் திறந்து நெருப்பு வைச்சால் மின் ஒழுக்கென்று சொல்லலாம்.’’

அதை மணியம் எதிர்பார்க்கவில்லை; ‘‘நீ என்ன சொல்கிறாய்? உன்ரை பகைக்காக என்ரை பதினைந்து, இருபது இலட்ச ரூபா கட்டிடத்தைக் கொளுத்தச் சொல்லுறாயே. எழும்பிப்போடா. இனிக் கதைச்சியெண்டால் கொலை செய்வன்’’ என்று அருகில் இருந்த நாற்காலியைத் தூக்கினார் மணியம்.

‘‘இவனோடை சேர வேண்டாம் என்று எத்தனை தரம் நான் சொன்னனான். இவன் மனிசனாய் இருந்தால் இப்பிடிச் சொல்லுவனே. இவனோடை சேர்வதை இனியாவது விடு’’ என்று மணியத்தின் மனைவி கொதித்தெழுந்தாள்.

‘‘என்னை மன்னித்துக் கொள் மணியம். வெறியிலை உழறீட்டன். நான் சொன்னது பிழை. அதுக்காக உன்ரை காலிலை விழுறன்’’ என்று மணியத்தின் காலில் விழுந்தார் கைலாயநாதன்.

அதன் பின் இரண்டு நாட்கள் கைலாயநாதன் மணியத்தின் வீட்டுக்கு வரவில்லை. மூன்றாம் நாள் ஒரு

தொலைக்காட்சிப் பெட்டியுடன் மணியத்தின் வீட்டுக்கு வந்தார்; ‘‘உன்ரை மனிசி நாடகம் பார்க்கச் சின்ராசன்ரை வீட்டை போறவா. சின்ராசன் தங்கடை பிள்ளைகள் படிக்கிற நேரத்திலை உன்ரை மனிசி நாடகம் பார்க்க வாறதாலை தன்ரை பிள்ளைகளின் படிப்புக் கெட்டுப் போறதாய்ச் சொல்லுறவன். உன்ரை மனிசி எனக்குச் சமைத்துத் தாறவள். என்ரை மனிசி செய்யாததை உன்ரை மனிசி செய்து தாறவள். அதற்காக ஒரு ரி.வி வாங்கியந்தனான்’’ என்றார்.

மணியத்தின் மனைவியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ரி.வி வாங்கிக் கொடுத்த பின் கைலாயநாதன் கௌசல்யாவின் கடையை உடைத்துத் திருடும் எண்ணத்தை வெளியிட்டார்.

‘‘கடையின் பிற்பக்கக் கதவை மெதுவாக உடைப்போம். உள்ளே நின்று உடைத்தால் யாரும் சந்தேகப்படமாட்டார்கள். அத்துடன் பிற்பக்கத்தில் உனது வீடு இருக்கிறது. யாரும் கண்டாலும் சந்தேகப்படமாட்டார்கள். என்னைப் பழி வாங்கியவளை அழிக்க வேண்டும். இதற்கு நீ ஒப்புக்கொண்டேயாக வேண்டும்’’ என்று மணியத்தின் கையைப் பிடித்தார் கைலாயநாதன்.

சாராயத்தை சற்று அதிகமாக ஊற்றிக் கொடுத்த கைலாயநாதன், மணியத்திற்கு வெறியேறியதும்;

‘‘பயப்படாமல் வா. உனக்கு இருபத்தையாயிரம் தாறன். கள்ளப் பொருட்களை உடனே விற்க முடியாது. ஐந்தாறு மாதம் செல்ல விற்பம். விற்ற பின்பு காசு தருகிறேன்’’ என்றார்.

மது மயக்கத்தில் இருந்த மணியம் காசென்றதும் எதையும் ஆராயாது உள்ளே சென்று அலவாங்கு ஒன்றை எடுத்து வந்தார். தனது திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காகச் சாராயத்தைக் குடிப்பது போலப் பாசாங்கு செய்த கைலாயநாதன் அலவாங்கை வாங்கிச் சென்று பிற்பக்கக் கதவைச் சிரமப்பட்டு உடைத்தார். உள்ளே இருந்த பொருட்களை இருவரும் எடுத்துச் சென்று மணியத்தின் வீட்டில் வைத்தனர். பின்பு கைலாயநாதன் தனது அடியாளைக் கூட்டி வந்து கொம்பியூட்டர்களைக் கொடுத்தனுப்பினார்.

ஆவேசமாக எழும்பிய இன்ஸ்பெக்ரர் யோசித்துக் கொண்டு நடுநடுங்கியபடி நின்ற மணியத்தின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். மணியம் வெல வெலத்துப் போனான். தலை கிறு கிறுத்தது. மயக்கம் வருவது போல இருந்தது.

‘‘ஐயா அடியாதைங்கோ. நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். கைலாயநாதன் தான் திட்டமிட்டுச் செய்தது. நான் அதற்குதவி செய்தனான். பணத்திற்கு ஆசைப்பட்டுக் கௌசல்யாவுக்குத் துரோகம்

செய்துவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ'' என இன்ஸ்பெக்ரரின் கால்களில் விழுந்தார் மணியம்.

''தாரிணியில் என்ன பிழை கண்டனி. கோயில் காணியைச் செய்தவனை வெருட்டிக் கலைத்ததை அறிந்த தாரிணி மேலிடத்திற்கு அறிவிக்க, மேலிடம் சொன்னதைத் தானே செய்தவள். அவளாய் விரும்பியா செய்தவள்? அதை விட நீ மோசமான பல செயல்களில் ஈடுபட்டுள்ளாய். உன்னை மன்னிக்க முடியாது. இப்போ நீ களவெடுத்த பொருட்களையெல்லாம் புதிதாக வாங்கிக் கொடு. களவெடுத்த பொருட்களை நாம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். வழக்கு முடிய அவற்றை நீ எடுத்துக் கொள். உனது செயலால் வருமானம் இல்லாமல் ஐந்து பெண்கள் கஷ்டப்படக்கூடாது. உங்களது ஆண்பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்துப் புனர்வாழ்வு பெற்ற பெண்களை வாழவையுங்கள். அவர்களைத் துன்புறுத்தாதீர்கள்'' என்றார் இன்ஸ்பெக்ரர்.

''நான் திருடிய பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறேன். என்னை விட்டு விடுங்கள்'' என்று மன்றாடினார் கைலாயநாதன்.

''வழக்குப் பதிந்தாயிற்று. இனி எதுவும் செய்ய முடியாது'' என்றார் இன்ஸ்பெக்ரர்.

மணியத்திற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இன்ஸ்பெக்ரர் கூறியது போல ஊரில் நடைபெற்ற கொள்ளைகளைத் தன் மீது சுமத்தி விடுவாரோ எனப் பயந்தார். அவரது மகள் கௌரி ஆசிரியையாகப் பணிபுரிகின்றாள். பல வருடங்களாகத் திருமணம் பேசியும் சரிவரவில்லை. தற்போது திருமணம் ஒப்பேறியுள்ளது. மாப்பிளை பகுதியினர் நாளை மறுதினம் பெண் வீட்டுக்கு முறைப்படி வந்து உணவு அருந்தவுள்ளனர். இந் நிலையில் இப்படியாகிவிட்டது. இனி அவர்கள் என்ன சொல்வார்களோ எனக் கலங்கினார். திருமணம் குழம்பினால் வீட்டில் வாழமுடியாது. சாதாரணமாகவே அவரின் மனைவி கோபக்காரி இதை அறிந்தால் என்ன சொல்வாளோ எனக் கலங்கினார்.

‘‘உங்களை விடுவிக்க முடியாது. இருவரையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். நாளைக் காலையில் நீதிமன்றம் சென்று பிணையில் எடுங்கோ’’ என்றார் இன்ஸ்பெக்ரர்.

கௌசல்யாவும் காயத்திரியும் மல்லிகாவின் வீட்டுக்கு வந்தனர். கௌசல்யா தேங்காய்களைப் போட்டு வைக்கும் அறையைப் பார்த்தாள். அது மணியத்தின் கடையை விடப் பெரியதாகவும் வசதிகள் உள்ளதாகவும் இருந்தது.

‘‘மல்லிகா அக்காவைப் போல எல்லோரும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். மல்லிகா அக்கா பாதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வருகிறார். இக் கிராமத்தில் உள்ள பலர் வசதிகள் இருந்தும் கடனாகக் கூடப் பணத்தைத் தரமாட்டார்கள். மல்லிகா அக்கா இல்லாவிட்டால் நானும் என்னைச் சேர்ந்த ஐந்து பெண்களும் தோட்டங்களில் கூலி வேலை தான் செய்தல் வேண்டும்’’ என்று கௌசல்யா நினைத்தாள். நினைக்கத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களால் கண்ணீர் வழிந்தது. அதைத் துடைக்க வேண்டுமென்ற நினைவு அவளுக்கு வரவில்லை.

‘‘என்னடீ… இப்ப ஏன் அழுகிறாய்? கண்களைத் துடை.’’ என்றாள் மல்லிகா.

‘‘நீங்கள் எங்களுக்கு எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறியள். அதை நினைக்க அழுகை வருகிறது.’’

‘‘நான் பாதிக்கப்பட்ட போது சிலர் உதவினார்கள். அவர்கள் உதவாவிட்டால் நான் தற்கொலை செய்திருப்பேன். அதை நினைத்துத் தான் உதவுகிறேன்’’ என்றாள் மல்லிகா.

# 23

பிணையில் விடுதலை பெற்ற மணியமும் கைலாயநாதனும் மல்லிகாவின் வீட்டுக்கு வந்தனர். மல்லிகாவுடன் கதைத்து அவளைச் சமாதானம் செய்தால் கௌசல்யா வழக்கை வாபஸ் பெற்றுவிடுவாள் என்று இருவரும் நம்பினர்.

கைலாயநாதனின் மனைவி வரலட்சுமியோ மணியத்தின் மனைவி தியாகேஸ்வரியோ மணியமும் கைலாயநாதனும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த போது பொலிஸ் நிலையப் பக்கம் வரவில்லை. இருவரது பிள்ளைகளும் வரவில்லை. அதனால் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் தான் இரவு உணவை வாங்கிக் கொடுத்தார். கைலாயநாதனின் இரு சகோதரர்களும் நல்ல உத்தியோகத்தில் இருப்பதால் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வது தமக்கு அவமானம் என்று சொல்லி அவர்களும் வரவில்லை. மணியத்தின் சகோதரன் கமம் செய்பவன். அவன் மணியத்திடம் அடிக்கடி பணம் கைமாற்றாகப்

பெறுபவன். அதனால் மறுநாள் நீதமன்றத்திற்கு வந்து பிரக்கிராசியைப் பிடித்துப் பிணை எடுத்தான்.

‘‘தெரியாத் தனமாகப் பழிவாங்கும் எண்ணத்தில் இதைச் செய்துவிட்டேன். மணியம் மாட்டனென்று சொன்னவன். நான் தான் சாராயத்தை ஊற்றிக் கொடுத்து அவனை மயக்கி எனது பழியைத் தீர்த்தனான். இப்ப மணியத்தின் மகளுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாம் கைது செய்யப்பட்டதால் மாப்பிளை பகுதி என்ன சொல்லப் போகிறார்களோ தெரியாது. அதனால் தயவுசெய்து கௌசல்யாவை வழக்கை வாபஸ் பெறச் சொல்லுங்கோ. அவளுக்கு நாம் பணம் கொடுக்கிறோம். வேண்டுமானால் அவளிடம் மன்னிப்பும் கேட்கிறோம்’’ என்றார் கைலாயநாதன்.

‘‘நான் மற்றவர்களுக்கு உதவிகள் செய்வேனே தவிர அவர்களின் தனிப்பட்ட விடயங்களில் தலையிடுவதில்லை. கௌசல்யா வந்தால் நீங்கள் வந்து கூறியவற்றைக் கூறுகிறேன்.’’ என்றாள் மல்லிகா.

‘‘அப்படிச் சொல்லாதை பிள்ளை. நீ சொன்னால் அவள் கேட்பள். அதனால் வற்புறுத்திச் சொல்லு.’’ என்றார் கைலாயநாதன்.

‘‘சரி’’ என்று சொல்லி விட்டு எழுந்தாள் மல்லிகா.

கைலாயநாதனுக்கு மல்லிகாவின் செயல் அவமானத்தைக் கொடுத்தது. ‘‘சரி’’ என்று சொல்லி விட்டு எழுந்தால், ‘‘எழும்பிப் போ. இனிக் கதைக்காதை’’ என்பது தானே அர்த்தம்

கைலாயநாதனுக்கு மல்லிகாவைப் பிடிக்காது. கைலாயநாதன் மாதவனின் நண்பன். மாதவன் காணாமற் போன காலங்களில் மல்லிகாவின் வீட்டுக்கு வந்து ஆறுதல் கூறுவது போல இரட்டை அர்த்தத்தில் பேசுவான். ஒருநாள் அவள் தனிமையில் வாழைத் தோட்டத்தில் நின்ற போது வந்தான். அவனைக் கண்டாலே மல்லிகாவுக்குப் பிடிக்காது. வயிற்றைப் புரட்டும். எதுவும் செய்ய முடியாததால் அவள் வலிந்து சிரித்தாள்.

‘‘மாதவனைப் பற்றி ஏதாவது செய்தி அறிந்தனியோ என்று கேட்டு விட்டுப் போகலாமென்று வந்தனான். நேற்றைக்கு வன்னிக்குச் சென்ற சிவகுருவின் மகன் கள்ளமாக வள்ளத்தில் வந்தவன். நான் போய் அவனைச் சந்தித்து மாதவனைக் கண்டனியா என்று கேட்டேன். தான் ஒரு இடமும் போகவில்லையாம். வன்னியில் பெரும் கஷ்டமிருந்ததால் தாம் வள்ளமொன்றை விலைக்கு வாங்கி ஓட்டியையும் வாடகைக்கு அமர்த்தி வந்தவையாம். அப்பிடித் தான் இப்ப சனம் வருது’’ என்றார் கைலாயநாதன்.

“பாவம் நீ. இனி என்ன செய்யப் போகிறாய்.? போதாததற்கு பிள்ளையும் இருக்கு. பிள்ளையில்லாவிட்டால் வேறு கலியாணம் செய்யலாம். பாவம் நீ. கொப்பரையும் வெறுத்திட்டாய். உன்னைப் பார்க்க எனக்கு வேதனையாக இருக்கு. உனக்கு என்ன தேவையெண்டாலும் கூசாமல் என்னைக் கேள். செலவுக்குக் காசு வைத்திருக்கிறியே?” என்ற கைலாயநாதன் சட்டைப் பொக்கற்றில் கையை வைத்து சில நூறு ரூபாத்தாள்களை எடுத்து நீட்டினார்.

“எனக்கு யாரின் உதவியும் தேவையில்லை. என்னால் உழைக்க முடியும். உழைத்துச் சாப்பிடுவனே தவிரப் பிச்சை எடுக்கமாட்டன்.” கோபத்துடன் கூறினாள் மல்லிகா.

“என்னட்டை வாங்குவது பிச்சையே. உனக்கு உதவி செய்ய நான் காத்திருக்கிறன். இதைப்பிடி...”

“வேண்டாம். உன்ரை உதவி எனக்குத் தேவையில்லை. ஊருக்கை நீ கட்டிவிட்டிருக்கிற கதை போதும். இனிமேல் இங்கே வராதை. வந்தால் கொலையும் செய்வன். உன்னோடை நான் தொடர்பு வைத்திருக்கிறதாக ஊரிலை உள்ள சில வம்புகளுக்குச் சொல்லியிருக்கிறாய்.” கொதித்தெழுந்தாள் மல்லிகா. அதன் பின் அவர் அங்கு வருவதில்லை.

மல்லிகாவின் வீட்டிலிருந்து வீதிக்கு வந்த கைலாயநாதனின் மனம் பயத்தால் பரிதவித்தது.

“அவள் நினைத்தால் கௌசல்யாவுக்குச் சொல்லி வழக்கை வாபஸ் பெறலாம். அவள் தானே கௌசல்யாவுக்கு முழு உதவியும் செய்தது.” என்றார் கைலாயநாதன்.

“நீ அவளுக்குச் செய்த துரோகங்கள் ஒன்று இரண்டா. அவளை வளைத்துப் போட வேண்டுமென்று எத்தனை திருவிளையாடல்களைச் செய்தாய். அவற்றுக்கெல்லாம் நானும் உடந்தையாக இருந்துவிட்டேன். அதனால் அவள் என்னையும் பழி வாங்காமல் விடமாட்டாள்.” மணியத்திற்கு பயமாக இருந்தது.

“பிரக்கிராசியாரைச் சந்தித்தனியே?” மணியம் கேட்டார்.

“ம்... இது விடுவிக்க முடியாத கேசாம். மோப்ப நாய் பிடித்திருக்கு. அத்துடன் இன்ஸ்பெக்ரர் பொல்லாதவர். நீதியில்லாத செயல்களுக்கு உதவமாட்டார். ஸ்ரேசனிலை அவளவையின்ரை பக்கம் தானே கதைத்தவர்.” என்றார் கைலாயநாதன்.

“சரி நான் வீட்டை போறன். இனிமேல் மச்சம் வாங்கிக் கொண்டு வீட்டை வராதை. மனிசி சமைத்துத் தரமாட்டுது” என்றார் மணியம்.

மணியம் வீட்டுக்கு வந்த போது வாசலில் இரண்டு மோட்டார்ச் சைக்கிள்கள் நின்றன; “ஒன்று புறோக்கருடையது. மற்றது யாருடையதாக இருக்கும்..?” என்று சிந்தித்தவாறு வீட்டுள்ளே சென்றார் மணியம்.

கோலில் புறோக்கரும் இன்னொருவரும் இருந்தனர். மணியத்தைக் கண்டதும் புறோக்கர்; “இவர் தான் பொம்பிளையின் தகப்பன்” என்றவர்; “மணியம் இவர் மாப்பிளையின் தாய் மாமன். தகப்பனுக்கு இங்கு வர விருப்பமில்லாததால் இவரை அனுப்பியுள்ளார்.” என்றார்.

அதைக் கேட்டதும் மணியத்திற்கு வியர்த்துக் கொட்டியது; “எங்களுக்கு உங்கள் வீட்டில் திருமணம் செய்ய விருப்பமில்லை. நாங்கள் மதிப்போடும் மரியாதையோடும் வாழ்பவர்கள். எமக்குச் சீதனம் பெரிதல்ல. உங்களிடம் நாங்கள் பெரிதாகச் சீதனத்தை எதிர்பார்க்கவில்லை. பெண் நல்ல குணசாலி. அவளுடன் எனது மகள் கற்பிக்கிறாள். அவள் சொன்னதைக் கேட்டுத் தான் ஒப்புக் கொண்டோம். இப்போ நீங்கள் திருடி அகப்பட்டுள்ளீர்கள். எமது ஊர் முழுவதும் இந்தப்

பிரச்சினையைப் பற்றித் தான் கதைக்கின்றனர். அதனால் எமக்குப் பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளது. அதனால் எமக்கு உங்கள் பெண்ணைத் திருமணம் செய்யப் பிடிக்கவில்லை''

மணியம் அதிர்ந்து போனார். அவருக்குத் தலை சுற்றியது. மயக்கம் வருவது போல இருந்தது. மெதுவாகக் கதிரையில் அமர்ந்தார்.

தியாகேஸ்வரி அவர்களுக்குத் தேநீர் கொண்டு வந்தாள்; ''திருமணம் முற்றான பின்பு தான் கைநனைப்பது வழக்கம். இப்போ திருமணம் குழம்பியதால் எனக்கு எதுவும் தேவையில்லை. நான் திருமணம் சரிவராது என்று சொல்லி விட்டுப் போகத் தான் வந்தேன்'' என்று கூறிவிட்டு எழுந்த சென்றார் மாப்பிளையின் தாய் மாமன்.

''மணியண்ணை, இனிமேல் உங்கடை மகளுக்குத் திருமணம் பேசு என்று கேட்டு எனது வீட்டுப்பக்கம் வராதை. மாப்பிளையின் தகப்பனாரை எனக்குப் பல வருட காலமாகத் தெரியும். அவர் என்னைக் கேட்கக் கூடாத கேள்விகளையெல்லாம் கேட்டுட்டார். நான் முப்பது வருட காலமாக இத் தொழிலைச் செய்யுறன். ஆரும் குறை சொன்னதில்லை. இப்ப உன்ரை மகளுக்குத் திருமணம் பேசி அவமானப்பட்டுட்டன். நீ எனக்குச் செருப்பாலை அடிச்சுப் போட்டாய். என்ன

செய்வது பிழைப்புக்காகப் பொறுக்கத் தானே வேண்டும்'' என்று கூறி விட்டு நடந்தான் புறோக்கர்.

"நீ ஒரு மனிசனா? ஒரு தந்தையா..? என்னைக் கட்டின நாளில் இருந்து இன்று வரை குடும்பத்திற்காக உழைத்தாயா? எனது தந்தையோடு சுருட்டுச் சுற்றினவன் நீ. அவரோடு வீட்டுக்கு வந்து என்னை வளைத்துக் கல்யாணம் செய்து கொண்டாய். அப்பு இருக்கு மட்டும் ஒழுங்காக வாழ்ந்த நீ, அப்பு இறந்த பின்பு குடித்து வெறித்துத் திரிந்தாய். கௌரி வேலையான பின்பு அவளின் சம்பளத்தில் சும்மாயிருந்து சாப்பிடுகிறாய். அப்பு நடத்தின சுருட்டுத் தொழிலையும் உனது கைகாலாகாத தனத்தால் விட்டு விட்டாய், அந்த அறையைக் கௌசல்யாவுக்கு வாடகைக்கு விட்டதால் மாதா மாதம் வருமானம் வந்தது. அதையும் கெடுத்திட்டாய். கௌரி முப்பத்தைந்து வயது வரை கஷ்டப்பட்டு உழைத்துக் கொஞ்சப் பணத்தைச் சேமித்துத் தனது திருமணத்தை நடத்த எண்ணியிருந்தாள். அதையும் கெடுத்திட்டாய். இனி அவளுக்குத் திருமணமே நடக்காது. பாழ்பட்டுப் போனவனே உன்னைப் போல ஒரு வீட்டுக்குதவாதவன் இந்த ஊரில் இருக்கிறானா சொல்லு பார்ப்பம்..'' பெருங்குரலெடுத்து அழுதாள் தியாகேஸ்வரி.

மணியத்தால் பேச முடியவில்லை. அதனால் ஆத்திரத்துடன் கத்தினாள் தியாகேஸ்வரி; ‘‘குடிக்கிறது மட்டும் தான் உனது வேலை. குடிக்காகத் தானே களவெடுத்தாய். மல்லிகா மதிப்போடு வாழும் பெண். அவளுக்கு எவ்வளவு கொடுமைகளை நீயும் கைலாயநாதனும் செய்தனீங்கள் நீங்கள் மனிதரா? இனியும் வாழ்ந்தால் வீடும் ஊரும் கெட்டுப் போம். அதனால் குளம் குட்டையில் விழுந்து சா’’ என்றாள் தியாகேஸ்வரி. மணியம் அதிர்ந்து போனார்.

# 24

‘‘இனியும் நீ வாழ்ந்தால் வீடும் ஊரும் கெட்டுப்போம். அதனால் குளம் குட்டையில் விழுந்து சா’’ என்று தியாகேஸ்வரி பெருங்குரலில் சொன்னது மணியத்தின் காதில் பேரிடியாக ஒலித்துக் கொண்டிருந்தது. அதை அவர் எதிர்பார்க்கவில்லை. தியாகேஸ்வரியின் தகப்பனார் சுருட்டு முதலாளி. அவரிடம் பத்துத் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். அவர் மிகவும் நேர்மையானவர். கலப்படம் செய்யாதவர். ஏனைய முதலாளிமார் புகையிலைக்

கன்றின் கழிவு இலைகளையும் சேர்த்துத் தான் சுருட்டுச் சுற்றுவார்கள். ஆனால் தியாகேஸ்வரியின் தந்தை கந்தையா நல்ல இலைகளைத் தான் சேர்ப்பார். அதனால் அவரின் சுருட்டுக்கு எப்போதும் கிராக்கி இருக்கும். மணியம் கந்தையாவுடன் மிகவும் அவதானத்துடன் பழகுவான். அவன் முதன்முதலாகத் தியாகேஸ்வரியைக் கண்டதும் காதலுற்றான். அதனால் திட்டமிட்டுத் தனது பழக்கவழக்கங்களை மாற்றி அவதானமாக அவருடன் பழகி வந்தான். அதனால் அவருக்கு அவனைப் பிடித்துவிட்டது. தானே முன்நின்று அக் கலியாணத்தைச் செய்துவைத்தார். கல்யாணமான பின் அவன் கைலாயநாதனுடன் சேர்ந்து குடிக்கப் பழகிவிட்டான். நாளடைவில் தொழிலையும் கைவிட்டுவிட்டான். அதனால் கந்தையாவுக்குப் பெரும் மனவருத்தமுண்டானது. காலப்போக்கில் அம் மனவருத்தம் அவரைப் படுக்கையில் கிடத்தியது.

“அப்பு ராசா மாதிரி வாழ்ந்தவர். அவரை ஏமாற்றி என்னைத் திருமணம் செய்தாய். என்ரை கவலையாலை தான் அப்பு படுத்த படுக்கையாகி இறந்தவர். அப்ப அப்புவைச் சாக்கொண்டது போல இப்ப என்ரை மகள் கௌரியையும் என்னையும் சாக்கொண்டு விட்டாய். புறோக்கர் வந்து சொன்னவுடனை அழுது கொண்டு கௌரி போனவள் போனவள் தான் இன்னும் வரேல்லை. நீ உழைத்துக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை.

அவளை நிம்மதியாகவாவது இருக்கவிர்றியே. பாவம் அவள் அரைக்கிழவியாகி விட்டாள். நான் இருபது வயதிலை கல்யாணம் கட்டினனான். அவளுக்கு இப்ப முப்பத்தைந்து வயது. இனி ஏன் அவளுக்குக் கலியாணம்?'' ஒப்பாரி வைத்தாள் தியாகேஸ்வரி.

முதல் முறையாக மணியம் தனது கடந்த கால வாழ்க்கையை எண்ணிப் பார்த்தான். கௌரிக்கு இருபத்திரண்டு வயது நடக்கும் போது ஓர் ஆசிரியரைத் திருமணம் பேசப்பட்டது. அவர்கள் பத்தாயிரம் ரூபா சீதனமாகக் கேட்டனர். அதைக் கொடுக்க வசதியில்லாமையால் அத் திருமணம் குழம்பியது. அதன் பின் எத்தனையோ திருமணங்கள் பேசிவந்தன. பத்தாயிரம் கேட்டவன் பின் பத்து இலட்சம் கேட்டான். இப்போது இருபது இலட்சம் டொனேசன் கேட்கிறான். இது எங்கை போய் முடியுமோ…?'' என முதல் முறையாகக் கவலைப்பட்டார் மணியம்.

''உனக்கு உழைப்புப் பிழைப்பு இல்லை. முது குமர் உழைத்துத் தர வேலையில்லாமல் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாய். அப்படியே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறத்தை விட்டுவிட்டு ஏன் திருடப் போனாய்? உனக்குச் சாப்பாடும் உடுபுடைவையும் இலவசமாகக் கிடைக்கும் போது நீ ஏன் எங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். என்ரை பிள்ளையைக் காணவில்லை. நீ ஏன்

இங்கே இருக்கிறாய். வீட்டை விட்டு வெளிக்கிட்டுப் போ. நான் என்ரை பிள்ளையைத் தேடப் போறன். எந்தக் குளத்துக்கை கிடக்கோ கிணத்துக்கை கிடக்கோ தெரியாது'' என்றவள் பக்கத்தில் இருந்த ஒரு கம்பை எடுத்துப் பல முறை மணியத்திற்கு அடித்தாள். அடித்தும் அவளுக்கு ஆத்திரம் தீரவில்லை. அன்பாக இருந்த தியாகேஸ்வரி ஆத்திர மிகுதியால் அடித்ததை மணியத்தால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கைலாயநாதனின் மனைவி இயல்பாகவே கொடூரத் தன்மை வாய்ந்தவள். அவள் கைலாநாதன் மச்சம் சாப்பிடுவதை விரும்பாதவள். அதனால் அவர்களுக்கிடையில் அடிக்கடி பிரச்சினைகள் வரும். பிரச்சினை வந்தால் வரலட்சுமி ஈவிரக்கமில்லாது நடந்து கொள்வாள். அதைக் கைலாயநாதன் குடிக்கும் போது சொல்லிக் கவலைப்படுவார். அந்தளவில் தனது மனைவி இதுவரை கண்டபடி ஏசுவாளே தவிரத் தாக்கமாட்டாள் என்று பெருமையுடன் வாழ்ந்த மணியத்திற்கு இன்று முதல் முறையாகப் பலமான அடி விழுந்துவிட்டது. அடிகாயங்கள் வீங்கியிருந்தன. சில இடங்களில் தோல் வெடித்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. மணியத்திற்கு வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டது. மனைவி அடித்ததை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனினும் அவளைத் தாக்கினால் பெரும் பிரச்சினைகள் உருவாகிவிடும். அவளது தம்பிமார் இருவர் படு முரடர்கள். ஒரு முறை அவர் தனது

மனைவியைத் தாக்கியதைக் கேள்விப்பட்டஅவளின் தம்பியொருவன் நன்றாகக் குடித்து விட்டு வந்து மணியத்திற்குப் பலமாக அடித்துவிட்டான். அதைச் சகிக்க முடியாத தியாகேஸ்வரி; ‘‘தம்பி, இது குடும்பப் பிரச்சினை. நீ இதிலை தலையிடாதை’’ என்று கூறிய பின்; ‘‘குடும்பப் பிரச்சினையோ…? தொழில்துறையில்லாமல் தண்டச்சோறு சாப்பிர்றவருக்குக் கோபம் வருது. இனிமேல் எப்போதாவது அக்காவுக்கு அடித்தால் கொலை விழும்’’ என்று எச்சரித்து விட்டுச் சென்றான். அதனால் தியாகேஸ்வரியைப் பலமாகப் பேசவே அவருக்குப் பயம்.

தியாகேஸ்வரி வீட்டைப் பூட்டிவிட்டுச் சென்றதால் செய்வதறியாது மணியம் முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் இருந்தார். அடுத்து என்ன செய்வதென்று அவருக்குப் புரியவில்லை. தினமும் சென்று பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடல் வேண்டும். கையொப்பமிடும் போது பொலிசாரும் இன்ஸ்பெக்ரரும் அவர்களை மிரட்டுவார்கள். அதை நினைக்கப் பயமாக இருந்தது. கைலாயநாதனிடம் போகலாமென்று எழுந்தார் மணியம்.

தியாகேஸ்வரி மல்லிகாவின் வீட்டுக்கு வந்தாள். கௌரி கௌசல்யாவுடன் நெருக்கமாகப் பழகி வந்தாள். அத்துடன் தாரிணியுடனும் நட்பாக இருந்தாள். அதை விடக் காயத்திரி அடிக்கடி கௌரியை வீட்டில் வந்து

சந்தித்துக் கதைப்பாள். அதனால் அவர்களிடம் விசாரிக்கலாமென்று வந்தாள். மல்லிகா வீட்டில் இருந்தாள்.

“வா தியாகேஸ் என்ன விஷயமாக வந்தாய்?” என்று கேட்டாள் மல்லிகா.

கௌரியின்; திருமணம் குழம்பிவிட்டது. காலையில் புரோக்கர் வந்து சொன்னார். அதனால் மனமுடைந்து வீட்டை விட்டு வெளிக்கிட்டவள் இன்னும் வரவில்லை. அது தான் காயத்திரியை விசாரித்து விட்டுச் செல்லலாம் என்று வந்தேன்” என்றாள் தியாகேஸ்வரி.

“பின்னுக்குப் போய்ப் பார். கௌசல்யாவும் காயத்திரியும் கௌரியும் நிற்கிறார்கள்” என்றாள் மல்லிகா.

தியாகேஸ்வரி வீட்டின் பின்பக்கத்தில் இருந்த தென்னோலையால் வேய்ந்த கொட்டிலடிக்கு வந்தாள். தோட்ட வேலை செய்யும் ஆயுதங்கள் அங்கே தான் வைக்கப்படும். காயத்திரி பெரும்பாலும் அங்கே தான் இருப்பாள்.

தியாகேசைக் கண்டதும் காயத்திரி எழுந்து வந்தாள். ஆனால் எதுவும் பேசவில்லை; “கௌரியைத் தேடி வந்தேன்”

“உள்ளே இருக்கிறாள். அவள் தகப்பனாரின் செயலால் மனம் உடைந்து போயிருக்கிறாள். உள்ளே சென்று சந்தியுங்கோ” என்றாள் காயத்திரி.

உள்ளே இருந்த மரவாங்கு ஒன்றில் தலை குப்புறப் படுத்திருந்தாள் கௌரி. இடையிடையே விசும்பல் சத்தம் கேட்டது.

“கௌரி” தியாகேசால் மேலே பேச முடியவில்லை. பெருங் குரலெடுத்து அழுதாள். அதைக் கேட்டுக் கௌசல்யா எழுந்து வந்தாள்; “அழுவதால் எந்தப் பயனும் வரப்போவதில்லை. உங்கள் கணவரை எனது தந்தையைப் போல நினைத்திருந்தேன். அவர் இப்படிச் செய்வாரென நான் கனவும் காணவில்லை. காணும் போது எவ்வளவு அன்பு கொண்டவர் போலக் கதைப்பார். அவ்வளவும் வெளிவேசம். திட்டமிட்டுத் தான் எல்லாவற்றையும் செய்திருக்கிறார். மோப்பநாய் வராவிட்டால் கண்டு பிடித்திருக்கவே முடியாது. நல்லவேளை கொலை நடைபெற்றதால் மோப்பநாய் வந்தது” என்றாள் கௌசல்யா.

“நான் என்ன பிள்ளை செய்கிறது? அவரை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. கடந்த ஒரு வாரமாக கைலாயநாதனும் இவரும் குசுகுசுவென்று இரகசியமாகக் கதைத்தவை. இப்படிச் செய்வினை என்று

நான் நினைக்கவில்லை. அதனால் தான் அவர் பிடிபட்டிருந்த போது நான் பொலிஸ் ஸ்ரேசனுக்கோ கேட்டிற்கோ செல்லவில்லை. தயவுசெய்து என்னைக் குற்றம் சொல்லதே'' என்றாள் தியாகேஸ்வரி.

''நான் உங்களையோ அல்லது கௌரியையோ குற்றம் சொல்லவில்லை. உங்கள் கணவர் கௌரியின் நல்வாழ்வைப் பற்றியே சிந்திக்காதவர் எம்மைப் பற்றியா சிந்திக்கப் போகிறார். சரியோ பிழையோ ஒரு இலட்சியத்திற்காகப் போராடினனாங்கள். அப்ப எம்மை மதிச்சுப் போற்றிப் புகழ்ந்தவை இப்ப ஏன் எம்மைத் துன்புறுத்தீனை என்று தெரியவில்லை. தாரிணி தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்றியவளே தவிரத் தான் நினைத்தபடி நடக்கவில்லையே. அதை விட பெண்களை எமது சமூகம் திட்மிட்டுப் பழிவாங்குகிறது. பெண்ணடிமைத் தனத்தை மிகமோசமாகப் பின்பற்றுகிறது. அதை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது'' என்றாள் கௌசல்யா.

''கௌரியைச் சமாதானப்படுத்தி வீட்டை கூட்டிக் கொண்டு போங்கோ. அவள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளாள்.'' என்றாள் காயத்திரி.

''கௌரி எழும்பம்மா வீட்டை போவம். எல்லாம் எங்கடை தலைவிதி. அந்தாள் இவ்வளவு காலமும்

குடித்துக் கொண்டு திரிந்தால் எமது குடும்பத்திற்குப் பெரிதாகப் பாதிப்பு வரவில்லை. இப்ப களவெடுத்ததால் வெளியிலை தலைகாட்ட முடியாதிருக்கு. இருந்தாலும் அதைப் பெரிதாக எடுக்காதே'' என அழுதாள் தியாகேஸ்வரி.

''மானம் மரியாதை எல்லாம் போயிட்டுது. நான் எப்படி இனிப் பாடசாலைக்குப் போவது. என்னைப் பிள்ளைகள் மதிப்பார்களா..? நான் இனி உயிரோடு இருக்கக்கூடாது. இருக்கமாட்டன்'' என்றாள் கௌரி.

''என்ரை ஐயோ'' என்று அலறினாள் தியாகேஸ்வரி.

# 25

''நான் வாழ்வதால் பிரயோசனம் இல்லை. நான் சாகவேணும். உன்னோடு வாழ்ந்து நான் என்ன சுகத்தைக் கண்டன். நல்ல உடுப்பு வாங்கித் தந்தியா, சுவையான உணவுகளைச் சமைத்துத் தந்தியா…? ஏன் என்னைப் பெத்தனீ'' பெருங்குரலெடுத்து அழுதாள் கௌரி.

“நான் என்ன செய்யிறது. அந்தாள் விடிந்தால் பொழுதுபடும் வரை குடிச்சுக் கொண்டு திரியுது. நான் ஆடு வளர்த்து, கோழி வளர்த்து, மாடு வளர்த்து குடும்பத்தைக் காப்பாற்றினான். இதுக்கு மேலை என்னால் என்ன செய்ய முடியும்?” விம்மி விம்மி அழுதாள் தியாகேஸ்வரி.

“நீ என்னை நன்றாகப் படிப்பிச்சனீ. நீயில்லாவிட்டால் அந்தாள் என்னை எங்காவது வீட்டுவேலை செய்ய விட்டிருக்கும்.’’ என்றாள் கௌரி. அவள் அதைச் சொல்லும் போது கண்களில் கனல் பறந்தது.

“எனக்கு வாற ஆத்திரத்திற்கு அந்தாளைக் கொலை செய்ய வேண்டும் போலை இருக்கு. வழக்கமாகக் குடிக்கிற மாதிரிக் குடித்துக் கொண்டு திரிந்தால் பரவாயில்லை. களவும் எடுக்கத் தொடங்கிவிட்டார். எனக்கெண்டால் ஊரில் நடக்கும் களவுகளுக்கான சூத்திரதாரி இவர்கள் தான். பத்து வரிசத்துக்குச் சிறையில் அடைக்க வேண்டும்’’ கௌரிக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

“நான் எப்படி இனிப் பள்ளிக்கூடத்திற்குப் போவது. களவு எடுக்கக்கூடாது என்று பிள்ளைகளுக்குப் படிப்பித்து விட்டுக் கள்ளரை வீட்டில் வைத்திருந்தால்

ஊர் என்ன நினைக்கும்? மூன்று மாதங்களுக்கு முன்பு பாடசாலையில் திருட்டு நடைபெற்றது. அதையும் இவர்கள் தான் செய்திருப்பார்கள்''

''ஊரார் அப்பிடித் தான் நினைக்கினை. காலமை சிவநாதன் வந்து வீட்டுள் இருந்த என்னைக் கேளாமல் வீடு முழுக்கத் தேடிப் பார்த்து விட்டு; 'போனகிழமை எனது தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார மோட்டார் களவு போனது. இஞ்சை கிடக்கோ என்று பார்த்தன். காணவில்லை. உன்ரை மனிசன் எங்காவது மறைத்து வைத்திருப்பன். நான் இப்ப பொலிசுக்குப் போய் மணியத்தில் தான் எனக்குச் சந்தேகமிருக்கென்று என்ரி போடப் போறன். பூனை மாதிரி இருந்து இவ்வளவு நாளும் களவெடுத்தவை. இப்ப தான் அப்பிட்டிருக்கினை'' என்று சொல்லிவிட்டுச் சென்றவன்'' அவன் வந்ததையும் ஏசியதையும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வேடிக்கை பார்த்தவை. அப்பவே என்ரை உயிர் போயிட்டுது.'' என்றாள் தியாகேஸ்வரி.

''இதுக்குப் பிறகும் நான் உயிர் வாழ வேண்டுமா...?'' என்று கேட்டுவிட்டு அழுதாள் கௌரி.

''கௌரி, நீ படித்தனீ. ஆசிரியராக இருக்கிறாய். நிலைமையைப் புரிந்து கொள்'' என்று மல்லிகா கூறும் போது கௌரி குறுக்கிட்டுச் சொன்னாள்; ''உண்மை

தான் அக்கா. நான் படித்தனான். ஆசிரியராகக் கடமையாற்றுறன். அதனாலை தான் எனக்கு மானக்கேடாக இருக்கு. நான் படிக்காவிட்டால், ஆசிரியராகக் கடமையாற்றாவிட்டால் எனக்கு மானம் மரியாதையைப் பற்றிச் சிந்திக்க முடியாது. களவெடுக்கும் பெற்றாரை ஊக்குவித்துக் களவெடுப்பிப்பேன். இப்போ நான் படித்தது தான் பிழை'' என்றாள் கௌரி.

''நீ சொல்வது நியாயம் தான். அதுக்கென்ன செய்வது. பல காலமாக உனது தந்தை குடும்பத்தைக் கவனிக்காது குடித்து வெறித்து வாழ்ந்துவிட்டார். அதை ஆரம்பத்தில் திருத்தியிருக்க வேண்டும். வளரவிட்டுத் திருத்த முடியுமா…?'' என்று கேட்டாள் மல்லிகா.

''கட்டையிலை போற வயதிலை அவரைத் திருத்தி என்ன இலாபம் வரப்போகிறது. அம்மா நான் வீட்டுக்கு வாறதாக இருந்தால் அவர் வீட்டுக்கு வரக்கூடாது. கைலாயநாதன் வீட்டை போயிருக்கட்டும். நீ என்ன சொல்கிறாய்?'' அதட்டினாள் கௌரி.

அதைத் தியாகேஸ்வரி எதிர்பாராததால் சற்றுத் தடுமாறினாள். உடனே அவளால் பதில் கூற முடியவில்லை. அதைத் தவறாக நினைத்த கௌரி ஆத்திரத்துடன் கத்தினாள்; ''நீயும் அவருக்கு உடந்தை.

அதனால் தான் அவரை வீட்டுக்கு வரவேண்டாமென்று சொல்ல உனக்கு விருப்பமில்லை. நீ உன்ரை புரிசனோடை கொஞ்சிக் குலாவு. நான் குளம் குட்டையிலை விழுறன்''

''ஏனடி நீ என்னைத் தவறாகப் புரிந்து கொள்கிறாய். எனக்கினிமேல் அவரைத் தேவையில்லை'' என்றாள் தியாகேஸ்வரி.

''கௌரி கொஞ்சம் பொறுமையாக இரு. ஆத்திரப் படாதை. அதற்காக உனது தந்தையோடு சேர்ந்திருக்கச் சொல்லவில்லை. ஆத்திரத்தடன் எடுக்கும் முடிவுகள் துன்ப துயரங்களைத் தான் தரும்.'' என்றாள் மல்லிகா.

அப்போது வேலை முடிந்து வந்தாள் சௌமியா. சௌமியா கௌரியின் நல்ல நண்பி. ஓய்வான நேரங்களில் அவர்கள் இருவரும் வாழைத் தோப்பில் உள்ள கொட்டிலில் இருந்து கதைப்பார்கள். அங்கு வீசும் குளிர்மையான காற்றும் ரம்மியமான சூழலும் அவர்களது மனத்தைக் கவரும்.

சௌமியாவைக் கண்டதும் கௌரியின் துயரம் அதிகரித்தது. பேச முடியாது விக்கி விசும்பி அழுதாள். அவளின் நிலையைக் கண்ட சௌமியாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் கலங்கின.

“என்னைப் போன்ற பாவி யார் இருக்கிறார்கள்? என்னுடைய வாழ் நாளிலை இன்பத்தை ஒருநாளும் அனுபவித்ததில்லை. அப்படியிருக்க இப் பெருந் துன்பத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை”

“அழாதை கௌரி. எமது பிரதேசத்தில் இன்பமாக வாழும் ஒரு பெண்ணைக் காட்டு பார்ப்போம். பெண்களாகப் பிறந்தால் துன்பம் தான். பெண்களுக்கு பல்வேறுபட்ட வகையில் துன்பங்கள் வருகின்றன. அது எங்களின் பண்பாட்டினால் வருவது. பண்பாட்டைத் திருத்தினால் தான் பெண்களுக்கு இன்பமுண்டாகும். அந்தப் பண்பாட்டைத் திருத்துவது யார்?” என்று கேட்டாள் சௌமியா.

“நேற்றிலிருந்து நீ சாப்பிடவில்லையென்று தியாகேஸ் கவலைப்படுகிறாள். வா கொஞ்சமாகச் சாப்பிடு” என்று கௌரியின் கையைப் பிடித்தாள் மல்லிகா.

ஒரு தாயின் அரவணைப்புடன் கையைப் பிடித்த மல்லிகாவின் கையைத் தட்டி விடக் கௌரியால் முடியவில்லை. மல்லிகா அந்தக் கிராமத்திற்கு முன் மாதிரியானவள். அன்புக்கு ஏங்குபவர்களுக்கு அன்பை வாரி இறைப்பவள். ஏழ்மை உள்ளவர்களுக்கு உதவி செய்பவள். யாரும் அற்ற அநாதைகளுக்கு உதவிக் கரம்

நீட்டுபவள். அதனால் அவளை யாரும் குறை சொல்லமாட்டார்கள்.

‘‘எழும்பு வா’’ என்று மல்லிகா கூறியதும் கௌரி எழுந்து அவளின் பின்னால் சென்றாள், ‘‘போய் முகம், கை, கால்களைக் கழுவி விட்டு வா’’ என்ற மல்லிகா அவளை விட்டு விட்டுக் குசினிக்குச் சென்றாள்.

அவள் முகம் கழுவி விட்டு வந்த போது அவள் கற்பிக்கும் பாடசாலை அதிபர் கெங்காதரனும் உபஅதிபர் திருமதி சுந்தரலிங்கமும் வந்திருந்தனர்.

‘‘நாங்கள் உங்களின் வீட்டுக்குச் சென்றோம். உங்கள் வீட்டின் அருகில் உள்ளவர்கள் நீங்கள் இங்கிருப்பதாகச் சொன்னார்கள். அது தான் வந்தோம்.’’ என்றார் அதிபர் கெங்காதரன்.

அவர்களைக் கண்டதும் அவமானத்தால் கௌரியின் உடல் கூசியது. அவர்களை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

‘‘எல்லாவற்றையும் கேள்விப்பட்டோம். இதில் உங்களின் பங்கு எதுவுமில்லையே. ஏன் பாடசாலைக்கு வராமல் இருக்கிறீர்கள். பாடசாலைக்கு வராவிட்டால் லீவு கோரிக்கடிதம் அனுப்ப வேண்டும். அதை ஏன் அனுப்பவில்லை? கடிதத்தை அனுப்புங்கள். நாலைந்து

நாட்களுக்கு லீவு எடுத்து நில்லுங்கள். ஆசிரியர்கள் எல்லோரும் உங்களது நிலைமையை நினைத்துக் கவலைப்பட்டார்களே தவிர தரக்குறைவாக எண்ணவில்லை; ‘‘தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும் வேறு’’ என்றொரு முதுமொழி இருக்கு. அதனால் கவலை கொள்ளாதீர்கள்’’ என்றார் கெங்காதரன்.

கௌரி எதுவும் பேசவில்லை. அவளால் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழுதாள்.

‘‘ஆலோசனை சொல்வது, புத்திமதிகள் கூறுவது சுலபம். ஆனால் துயரத்தைத் தாங்கிக் கொள்வது கஷ்டம். உங்களுக்கு வந்த இக் கஷ்டம் வேறு யாருக்கும் வரக்கூடாது. அதனால் நடந்ததை எண்ணிக் கவலைப்படாது இனி நடக்கப் போவதை எண்ணி நிம்மதியடையுங்கள்’’ என்றாள் கெங்காதரன்.

‘‘இனி என்ன சேர் நடக்கப் போகிறது. இவ்வளவு காலமும் எனக்குத் திருமணம் நடக்குமென்று நினைத்திருந்தேன். முற்றுப் பெற்றிருந்த திருமணமும் குழம்பிவிட்டது. இனி யார் என்னைத் திருமணம் செய்ய முன்வருவார்கள். நல்ல படிப்பு, உயர்ந்த உத்தியோகம், போதியளவு பணம், வீடுவளவு போன்றன இருக்கும் பெண்களுக்கே திருமணம் நடைபெறுவது

இயலாதிருக்கும் போது இவை எதுவும் இல்லாத ஒரு திருடனின் மகளுக்குத் திருமணம் நடைபெறுமா என்ன?

கெங்காதரனால் அதற்குப் பதில் கூற முடியவில்லை. மௌனமாக இருந்தார். அவரின் மனதில் பெரும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவருக்கும் மூன்று கன்னிப் பெண்கள் இருக்கின்றனர். அவர் மூத்த பெண்ணுக்குத் திருமணம் பேசிக் களைத்து விட்டார். கௌரி சொல்வதை நினைக்க அவருக்குப் பயமாக இருந்தது.

“இந்தச் சமூகம் எம்மை வாழ வைக்கத் தேவையில்லை. வாழவிட்டாலே போதும்” என்றாள் கௌரி. கெங்காதரன் கலக்கத்துடன் கௌரியைப் பார்த்தார். அவருக்குப் பயமாக இருந்தது.

# 26

அதிகாலை. இன்னும் விடியவில்லை. வீட்டின் முன் ஆள் நடமாடும் சத்தம் கேட்டு வெளியே வந்தாள் கௌசல்யா. வீட்டு வாசலில் ஆரியசிங்கா நின்றான். அவனை அவள் எதிர்பார்க்கவில்லை.

ஆரியசிங்கா புனர்வாழ்வுப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி. வாட்டசாட்டமான உடற்கட்டு, நல்ல சிவந்தநிறம், அளவான மீசை, சிவந்த உதடுகள் அவை எப்போதும் மலர்ந்தபடியிருக்கும்.

கௌசல்யா இரண்டு வருடங்கள் புனர்வாழ்வு பெற்றாள். முதல் நாளன்றே அவன் கௌசல்யாவைக் கண் இமைக்காது பார்த்தான். சிரிப்பான். தமிழில் கதைப்பான். அவன் ஐந்து வருடங்கள் யாழ்ப்பாணத்தில் பாஸ் கொடுக்கம் பகுதியில் வேலை செய்தமையால் நல்ல தமிழில் கதைப்பான்.

சில நாட்கள் சிரித்தவன் பின் சற்று நெருக்கமாகப் பழக ஆரம்பித்தான். விசாரணை என்ற பெயரில் அடிக்கடி அவளை அலுவலகத்திற்கு அழைப்பான். அவன் அதிகாரி என்ற முறையில் அவன் அழைக்கும் போதெல்லாம்செல்வாள். அங்கு சென்றால் தேவையில்லாத கேள்விகளையெல்லாம் கேட்பான்.

“அம்மா அப்பா வைத்த பெயர் என்ன?”

“கௌசல்யா”

“இயக்கம் வைத்த பெயர் என்ன?”

“வெண்ணிலா”

“நான் எந்தப் பெயரில் உங்களை அழைப்பது”

“கௌசல்யா என்றழையுங்கள்”

“வெண்ணிலா தான் பொருத்தமான பெயர் வெண்ணிலா என்றே அழைக்கிறேன்.”

“சரி”

“உங்களுக்கு எத்தனை சகோதரங்கள்”

“ஐந்து”

இப்படியான கேள்விகளைக் கேட்கும் அவன் அன்று அழைத்த போது சொன்னான்; “எனக்கு வீட்டில் திருமணம் பேசுகிறார்கள். எனக்கென்றால் தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்யத் தான் விருப்பம். வீட்டில் சொல்லிவிட்டேன். அவர்கள் சம்மதித்து விட்டார்கள்”

கௌசல்யா எதுவும் பேசவில்லை.

“எனக்கு உம்மைச் செய்ய விருப்பம். உமது முடிவைச் சொல்லும்”

கௌசல்யா அதிர்ந்து போனாள்; “இவன் என்ன விளையாடுகிறானா?” என்று நினைத்தாள்.

“உம்மை முதன் முதலாகக் கண்ட நாளில் இருந்து உம்மை விரும்பி வருகிறேன். அதை சாடை மாடையாகச் சொல்லிய போதும் உம்மால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இயக்கம் என்பதற்காக நான் உம்மை வெறுக்கவில்லை. காதல் என்பது எப்படி வரும் என்று யாருக்கும் தெரியாது. எம்மைக் கொல்ல வேண்டும் என்று போராடிய உம் மீது எனக்குக் காதல் பிறந்துவிட்டது. எனது காதல் பரிசுத்தமானது. உம்மைத் திருமணம் செய்யாவிட்டால் நான் திருமணம் செய்யாமலே வாழ்வேன். அதனால் உமது முடிவைச் சொல்லும்”

கௌசல்யாவால் பேசமுடியவில்லை. அதன் பின் அவன் அழைத்தால் அவள் காயத்திரியையோ அல்லது ரதினியையோ அழைத்துச் செல்வாள். அவன் அவர்களை ஏன் அழைத்து வந்தாய் என்று கேட்கமாட்டான். ஆனால் அவனின் பேச்சில் ஒரு சலிப்பு இருக்கும். அழைத்ததுக்காக எதையோ பேசுவான்.

“சாப்பாடு பிடித்திருக்கா? நாம் ஏதாவது துன்பம் செய்கிறோமா? எமது விசாரணை உங்களுக்கு மனக் கஷ்டத்தைக் கொடுக்கிறதா?” என்று கேட்பான்.

புனர்வாழ்வுப் பயிற்சி முடிவடைந்ததன்று அவன் கௌசல்யாவை அழைத்தான். அவள் காயத்திரியையும் அழைத்துக் கொண்டு சென்றாள்.

“நீர் இன்று காயத்திரியை அழைத்து வருவீர் என்று எனக்குத் தெரியம். பரவாயில்லை. எனது விருப்பத்தைக் காயத்திரியும் அறியட்டும். கௌசல்யா தயவுசெய்து என்னை ஏற்றுக்கொள்ளும். ஒருபோதும் உமக்கு எந்தக் குறையும் ஏற்படாமல் மகாராணி மாதிரி வாழ வைப்பேன். எனக்குப் பொன், பொருள்,காணிபூமி, வீடு எதுவும் தேவையில்லை. எனது ஊரில் எமக்குத் தென்னந்தோட்டம் உண்டு. நான் தான் ஒரே பிள்ளை. தயவுசெய்து நான் சொல்வதைக் கேளும். காயத்திரி உம்முடைய நண்பிக்கு எடுத்துச் சொல்லும்” கண் கலங்கினான் ஆரியசிங்கா.

புனர்வாழ்வு முடிந்து அவள் வீட்டுக்கு வந்த பின்பு அவன் அடிக்கடி ரெலிபோனில் கதைப்பான். அதனால் அவள் சிம்மை மாற்றினாள். பல காலம் தொடர்பு கொள்ள முடியாமையால் அவன் அவளைத் தேடி வந்துவிட்டான்.

அது ஒரு சிறிய குடிசை. வீடு தேடி வந்தவனை “வாருங்கள் உள்ளே” எனக் கூறி உள்ளே அழைத்துச் சென்று ஒரு பிளாஸ்ரிக் நாற்காலியில் இருத்தினாள் கௌசல்யா.

ஆரியசிங்காவுக்குத் தோசையிலும் பொரித்த மிளகாய்ச் சம்பலிலும் நல்ல விருப்பம். அன்று அவர்கள்

தோசை சுட்டு பொரித்த மிளகாயில் சம்பல் இடித்திருந்தனர்.

“நல்லாயிருக்கு” என்று சொல்லிச் சொல்லி உண்ட ஆரியசிங்காவுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள் கௌசல்யா.

கௌசல்யாவின் தாய்க்கு இராணுவத்தினரைப் பிடிக்காது. அதனால் ஆரியசிங்காவை இனி இங்கு வர வேண்டாம் என்று கூறு என்று சொன்னாள்.

கௌசல்யா ஆரியசிங்காவை அழைத்துக் கொண்டு மல்லிகாவின் வீட்டுக்குச் சென்றாள். கௌசல்யா, மல்லிகாவுக்கு அவனைப் பற்றி முழுமையாகக் கூறியிருந்தாள்.

ஆரியசிங்கா அங்கு வருவானென மல்லிகா எதிர்பார்க்கவில்லை. ரெலிபோனைப் பாவிக்காது விட்டால் அவன் மறந்து விடுவானென நினைத்தாள்.

“அறிவிக்காமல் வந்தால் தான் ஆட்களைப் பிடிக்கலாம். அறிவித்திருந்தால் கௌசல்யா ஒளித்திருப்பாள். மல்லிகாக்கா என்னால் கௌசல்யாவை மறக்க முடியவில்லை. தயவுசெய்து கௌசல்யாவுக்குப் புத்தி சொல்லுங்கள். நீங்கள் காதலித்துத் திருமணம் செய்ததாக அறிந்தேன். அதனால் உங்களுக்குக்

காதலின் இன்பதுன்பங்கள் தெரியும்'' ஆரியசிங்காவின் குரல் தளர்ந்து கரகரத்தது.

மல்லிகாவுக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது; ''காதலுக்குச் சாதி, மதம், இனம் எதுவும் இல்லை. பாவம் ஆரியசிங்கா அவள் மீது காதல் கொண்டுவிட்டான். ஆனால் கௌசல்யாவுக்கு விருப்பமில்லை. என்ன செய்யலாம்?'' என்று யோசித்தாள்.

''நான் தீர்க்கமான முடிவொன்றை எடுத்துக் கொண்டு தான் போவேன். அதுவரை இங்கு தான் தங்கப் போகிறேன்'' என்றான் ஆரியசிங்கா.

''நீங்கள் இன்று சென்று வாருங்கள். நாளைக்கு நான் முடிவு சொல்கிறேன்'' என்றாள் மல்லிகா.

''நல்ல முடிவாகச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான் ஆரியசிங்கா.

''பாவம் ஆரியசிங்கா கௌசல்யா புனர்வாழ்வு பெறத் தொடங்கிய நாளில் இருந்து காதலிக்கிறான். அவனது காதல் புனிதமானது. எனக்கென்றால் கௌசல்யா அவனைக் கட்டுவது நல்லதென்றே தோன்றுகிறது. அவன் பெரிய பணக்காரன். எதையும் எதிர்பாராது காதலிக்கிறான்'' என்றாள் காயத்திரி.

“கௌசல்யா நீ என்ன சொல்கிறாய்?” என்று கேட்டாள் மல்லிகா.

கௌசல்யா எதுவும் கூறவில்லை. அவளின் மனத் திரையில் ஆரியசிங்காவின் துயரமான முகம் தோன்றிது, “கௌசல்யா, என்னை ஏற்றுக்கொள்” என்று கெஞ்சியது.

“எனக்கு விருப்பம் தான். அவர் ஓயாமல் கரைச்சல் கொடுத்துக் கொண்டே இருந்தார். காலப்போக்கில் ‘பாவம்’ என்ற உணர்வு மனதில் முளைத்து விருட்சமாகிவிட்டது. ஆனால் எமது இனம் இல்லை என்பதால் தயக்கமாக இருக்கிறது” என்றாள் கௌசல்யா.

“எல்லாம் பழகப் பழகச் சரி வந்துவிடும். நல்ல ஒரு காதலனை இழக்கிறதை நானும் விரும்பவில்லை. உனது குடும்பமுள்ள நிலையில் உனக்கோ அல்லது உனது சகோதரிகளுக்கோ திருமணம் நடைபெறுவது சிரமமானது. வாழ்க்கையை வாழ்ந்து விடு. நான் அவரோடு வாழ்ந்த அந்தச் சில வருடங்களை எண்ணி மிகவும் இன்பமாகப் பொழுதைக் கழிக்கிறேன். உன்னை விரும்பும் அவனை ஏற்றுக்கொள்” என்றாள் மல்லிகா.

ரெலிபோனில் கௌசல்யாவின் சம்மதத்தைக் காயத்திரி சொன்ன மறுநிமிடம் ஆரியசிங்கா பெரும்

மகிழ்ச்சியுடன் மல்லிகாவின் வீட்டுக்கு வந்தான். அவனால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை.

“நான் நினைக்கவில்லை. கௌசல்யா சம்மதித்தால்” என்று கூறியவன் தனது கையில் இருந்த மோதிரத்தைக் கழற்றினான்.

கௌசல்யா எதுவும் பேசாது தனது இடதுகையை நீட்டினாள். ஆரியசிங்கா பெரு மகிழ்வுடன் கௌசல்யாவின் மோதிரவிரலில் மோதிரத்தைப் போட்டான்.

“எமது இனத்தவர்கள் இந்தத் திருமணத்தை விரும்பமாட்டார்கள். குறை சொல்வார்களே தவிரத் தீர்வு சொல்லமாட்டார்கள்.” என்றாள் கௌசல்யா.

“நான் எனது ஊருக்குச் சென்று எனது பெற்றோரை அழைத்து வருகிறேன்” என்றான் ஆரியசிங்கா.

# 27

மாதம் ஒன்று கழிந்துவிட்டது.

காண்டீபனுக்கும் திவ்வியா என்ற பெண்ணிற்கும் திருமணம் முடிந்துவிட்டது. திவ்வியா பட்டதாரி. நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து உயர் பதவி வகிக்கிறாள். திவ்வியாவுக்குப் பல வருடங்காளகத் திருமணம் பேசியும் ஒன்றும் சரிவரவில்லை. திவ்வியாவுக்குக் கீழ் இன்னொரு பெண் இருக்கிறாள்.

திவ்வியாவுக்குத் திருமணம் முடிந்தால் தான் மற்றவளுக்குத் திருமணம் செய்யலாமென்ற காரணத்தால் திவ்வியாவின் தந்தை காண்டீபனின் தங்கைக்கு இருபத்தைந்து இலட்ச ரூபா இனாமாகக் கொடுத்தார். அத்தடன் வீடுவளவு காருடன் ஐம்பது இலட்சரூபா சீதனமாகக் கொடுத்தார். அதற்காக அவர் இரண்டு காணிகளை விற்றிருந்தார். அது திவ்வியாவுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள் அத் திருமணத்தை விரும்பவில்லை. தாயும் தகப்பனும் இனத்தவர்களும் ஊரவர்களும் வற்புறுத்தித் திவ்வியாவைச் சம்மதிக்க வைத்தனர். திருமண எழுத்து முடிந்த மறுநாள் காண்டீபன் திவ்வியாவின் வீட்டுக்கு வந்த போது திவ்வியா அவனைச் சந்திக்க விரும்பவில்லை. தாய் வற்புறுத்தியமையால் வெளியே வந்தாள். அவளின் முகம் கறுத்திருந்ததைக் காண்டீபன் அவதானித்தான். அவள் தனது முடிவை காண்டீபனின் நண்பன் மாறனுக்குச் சொல்லியிருந்தாள். மாறன் ஒன்றும்விடாமல்

காண்டீபனுக்குச் சொல்லிவிட்டான். வெகுநேரம் அவர்கள் பேசவில்லை.

“உங்களுக்கு என் மீது விருப்பமில்லை என்று தெரியும். பிறகேன் ஒப்புக் கொண்டீர்கள்” என்று கேட்டான் காண்டீபன்.

“பெண்களின் விருப்பத்தை யார் கேட்கிறார்கள்? பெற்றோர், பெண்கள் திருமணமாகாதிருந்தால் தமக்குப் பாரம் என்றும் அவமானம் என்றும் கருதுகிறார்கள். அதனால் பெண்களைச் சம்மதிக்க வைக்கத் தற்கொலை செய்வோம் என்றும் மிரட்டுகிறார்கள். அதனால் விருப்பமில்லாவிட்டாலும் ஒத்துக்கொள்ளத் தானே வேண்டும். திருமணத்தை முடித்துக் கொடுத்துவிட்டால் பின் என்ன ஆனாலும் பரவாயில்லை என்பது தான் பெரும்பான்மையான பெற்றோரின் தீர்மானம்” என்றாள் திவ்வியா.

காண்டீபன் பதிலேதும் கூறவில்லை. அவள் படித்தவள். உயரிய பதவி வகிப்பவள். அதனால் கவனமாகத் தான் கதைக்க வேண்டும் என்று சிந்தித்தபடி இருந்தான்.

“நீங்கள் ஒரு பெண்ணைக் காதலித்தீர்கள். அதைச் செய்ய உங்களின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. அதனால் என்னைத் திருமணம் செய்யத்

தீர்மானித்தீர்கள். உங்களைப் போல நானும் காதலித்திருந்தால் என்னைத் திருமணம் செய்யச் சம்மதிப்பீர்களா..?''

காண்டீபன் அவள் அப்படிக் கதைப்பாள் என்று எதிர்பாராததால் சற்றுத் தடுமாறினான்.

''பெற்றோரின் வற்புறுத்தலுக்காகப் பல விருப்பமில்லாத செயல்களைச் செய்ய வேண்டியுள்ளது. என்ன செய்ய முடியும்? நாமிருவரும் திருமண ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டு விட்டோம். இனி நடந்தவற்றை எண்ணி வாழ்க்கையைக் குழப்பாமல் கிடைத்த வாழ்வை இன்பமாக வாழ்வோம். நடந்தவற்றை எண்ணிப் பிரச்சினைப்பட்டு வருந்தவதை விட கிடைத்ததை ஏற்று மகிழ்வுடன் வாழ்வது தான் சிறப்பானது. எனது பெற்றோரின் செயலால் உங்களுக்கு மனவருத்தம் ஏற்பட்டிருந்தால் என்னை மன்னியுங்கள். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை'' கலங்கினான் காண்டீபன்.

அதைக் கேட்டு உருகிப் போனாள் திவ்வியா. இவ்வளவு நல்லவனாகக் காண்டீபன் இருப்பான் என அவள் எதிர்பார்க்கவில்லை.

''உங்களுக்குள்ள நெருக்கடி தான் எனக்கும் ஏற்பட்டது. சௌமியாவை நான் காதலித்தேனே தவிர

அவள் என்னைக் காதலிக்கவில்லை. அவள் அங்கஜன் என்பவனைச் சிறுவயதிலிருந்தே விரும்பியிருக்கிறாள். அவர்களின் குடும்பங்கள் மிகவும் நெருக்கமானவை. நான் தான் அறியாமல் தவறாக நடந்துவிட்டேன். உங்களைத் திருமணம் செய்யாவிட்டால் அப்பா விபரீதமான முடிவை எடுத்திருப்பார். அவர் ஒரு முரடர். ஊரில் யாருடனும் அன்பாகப் பேசியதில்லை. நான் சம்மதிக்காவிட்டால் விபரீதமாக எதுவும் நடந்தால் பின் வாழ்வில் நிம்மதியில்லாமல் போய்விடும். அதற்காகத் தான் எனது முடிவை மாற்றினேன். தயவுசெய்து முரண்படாமல் வாழ்வோம்'' என்றான் காண்டீபன்.

அதன் பின் திவ்வியா சமாதானமாகிவிட்டாள். இப்போது அவர்கள் மகிழ்வுடன் வாழ்கின்றனர்.

சௌமியாவுக்கும் அங்கஜனுக்கும் மிகவும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. அத் திருமணத்திற்கு ஊரே திரண்டிருந்தது. காண்டீபனும் திவ்வியாவும் கஜேந்திரனும் திருமணத்திற்கு வந்திருந்தனர். சௌமியாவைப் பார்த்த திவ்வியா சொன்னாள்; ''சௌமியா நல்ல அழகி. நீங்கள் கொடுத்து வைக்கவில்லை. நான் சௌமியாவை விட அழகில் குறைந்தவள் தான்'

''காண்டீபன் பெரிதாகச் சிரித்தான்; ''இப்போ நீர் தான் எனக்கு உலக அழகி. வாழ்க்கை என்பது அழகில்

மட்டுமா தங்கியுள்ளது. ஒத்துப்போதல், விட்டுக்கொடுத்தல், பிறரை மதித்தல், அன்புகொள்ளல் எனப் பல விடயங்கள் உள்ளன. அது இப்போது தான் எனக்குப் புரிகிறது. அப்பா போன்றவர்களுக்கு ஒருபோதும் புரியாது'' என்றான் காண்டீபன்.

அப்போது அங்கே காயத்திரி வந்தாள்; ''புதுமாப்பிளை வாருங்கோ. சௌமியாவைச் சந்திக்கவில்லையா..?''

''சந்தித்துவிட்டோம்'' என்ற காண்டீபன் திவ்வியாவின் பக்கம் திரும்பி; ''இவா காயத்திரி. சௌமியாவின் தாயின் தங்கை'' என்றான்.

''வணக்கம்'' என்று கைகூப்பினாள் திவ்வியா. அப்போது கஜேந்திரன் வந்தான். அவனைக் கண்ட காயத்திரி சொன்னாள்; ''காண்டீபனின் திருமணம் முடிந்துவிட்டது. நீங்கள் ஏன் காத்திருப்பான்''

''பொம்பிளை கிடைக்க வேண்டுமே'' என்றான் கஜேந்திரன்.

''பொம்பிளைக்கா பஞ்சம். உங்களுக்குப் பொருத்தமான பொம்பிளையல்லவா கிடைக்க வேண்டும்'' என்றாள் காயத்திரி.

அப்போது அங்கே ரதினியும் வசந்தினியும் கௌரியும் ஆரியசிங்காவும் அவனது பெற்றோரும் வந்தனர்.

அவர்களைக் கண்ட கஜேந்திரன் சொன்னான், ‘‘எல்லாரும் வந்திருக்கிறீர்கள்’’

‘‘ஓ… இது ஒரு இலட்சியக் கல்யாணம். சீதனம் பேசவில்லை. வீடுவளவு கேட்கப்படவில்லை. டொனேசன் இல்லை. ஒரு முன்மாதிரியான கல்யாணம். இப்படி எல்லோரும் இருந்தால் எவ்வளவு நல்லது’’ என்றாள் கௌசல்யா.

காண்டீபனுக்கு அவள் தன்னைத் தான் குத்திக் காட்டுகிறாள் என்ற நினைவு வந்தது. அதை அவதானித்த கௌசல்யா சொன்னாள், ‘‘மன்னித்துக் கொள்ளுங்கோ நான் யாரையும் குறையோ குற்றமோ சொல்லவில்லை. எமது சமூகத்தின் நிலையைச் சொன்னேன்’’ என்றாள் காயத்திரி.

‘‘இல்லை இல்லை நான் அப்படி நினைக்கவில்லை’’ என்றான் காண்டீபன்.

‘‘உங்களை எனக்குப் பிடித்திருக்கு. உங்களைப் போலத் தான் நானும் பேசுவேன். எனக்கு சீதனம், டொனேசன் கொடுத்துத் திருமணம் செய்ய

விருப்பமில்லை. பெற்றோரின் ஆக்கினைக்காக ஒப்புக் கொண்டேன். பெற்றோர் தான் பிடிவாதத்தால் பிள்ளைகளின் நல்வாழ்வைக் கெடுக்கிறார்கள். இதை அனுமதிக்கக்கூடாது'' என்றாள் திவ்வியா.

''இவர்களெல்லாம் புரட்சிப்பெண்கள். இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெற்றுத் துணிவுடன் வாழ்கின்றனர்'' என்றான் காண்டீபன்.

''அப்படியா..?'' என்று அதிசயித்தாள் திவ்வியா.

''எமக்குதவி செய்ய யாரும் இல்லை. துணிவோடு ஒவ்வொரு தொழிலைத் தொடங்கி வசதிகளுடன் வாழ்கிறோம். ஆனால் எம்மை மதிப்பவர்கள் யாரும் இல்லை. பாவப்பட்ட ஜென்மங்களாகவே கருதுகிறார்கள். எம்மை வாழ வைக்க வேண்டாம். வாழவிட்டால் போதும்'' என்றாள் காயத்திரி. அதைக் கூறும் போது அவளது கண்கள் கலங்கின.

''நாங்கள் இயக்கத்தில் இருக்கும் போது போற்றியவர்கள் இப்போ எமக்கு வாழ்வளிக்கிறார்களில்லை. நாமாக முயற்சித்து முன்னேறினாலும் அதைக் கெடுக்கிறார்கள்'' என்றாள் ரதினி.

“உண்மை தான் கைலாயநாதன் மாமா இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெற்ற பெண் நடத்திய கொம்பியூட்டர்க் கடையை உடைத்துத் திருடினவராம். அதனால் அவர் சிறையில் இருக்கிறார். அவர் பெரும் பணக்காரன். முன்பு இயக்கத்தின் தூண்” என்றாள் திவ்வியா.

“கைலாயநாதன் உங்களுக்குச் சொந்தமா? அவர் திருடியது கௌசல்யாவின் கடையை” என்றான் காண்டீபன்.

“எமது சாதிக்காரன். தூரத்து உறவு. என்றாலும் அப்பா அவரை அண்டுவதில்லை. உருட்டும் பிரட்டும் செய்வதில் வல்லவர். அதனால் அப்பா நல்லது கெட்டதுக்குக் கூடச் சொல்வதில்லை” என்றாள் திவ்வியா.

“இப்படியானவர்கள் தான் எமக்கு ஓயாமல் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள யாரும் சீதனமில்லாமல் பெண்ணெடுக்கத் தயாரில்லை. பெண்ணை எடுக்காவிட்டாலும் பரவாயில்லை. துன்பத்தைத் தராது இருந்தாலே போதும். நாம் உழைத்துச் சீவிப்போம். வாழவைக்கத் தேவையில்லை. எம்மை வாழவிட்டால் போதும்” என்றாள் கௌசல்யா.

அப்போது அங்கே சௌமியாவும் அங்கஜனும் வந்தனர். அவர்கள் வந்ததும் கௌசல்யாவும் காயத்திரியும் ரதினியும் தாரிணியும் அவ்விடத்தை விட்டுச் சென்றனர்.

திவ்வியா அவர்களை நினைத்துக் கவலைப்பட்டாள். அவளால் அதன் பின் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை.

‘‘கௌசல்யாவின் கணவரையும் அவரது குடும்பத்தினரையும் உங்களெல்லோர்க்கும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இவர் ஆரியசிங்கா இராணுவத்தில் பெரிய பதவி வகிக்கிறார். இவர்கள் அவரின் பெற்றோர்கள். எந்தவிதமான கொடுப்பனவும் இன்றி ஆரியசிங்கா கௌசல்யாவைத் திருமணம் செய்யவிருக்கிறார். மகனின் விருப்பத்தைப் பெற்றோர் பூர்த்தி செய்கின்றனர்’’ என்றாள் காயத்திரி.

திவ்வியா ஆச்சரியத்துடன் கௌசல்யாவையும் ஆரியசிங்காவையும் அவனது பெற்றோரையும் பார்த்தாள். இயக்கமும் இராணுவமும் இணைந்தது அவளுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது.